# கலைமன்றம்

18.6.55

- AUG 1956





செடியின் குச்சியிலே ஊறும் இலைப் பூச்சி

என் லட்சுமணன், சந்தியமங்கலம்.

# கலைமன்ற




மலர் 2 — 18 ஜூன் '5

பொருளட

கார்ட்டூன்
விழித்தெழுங்கள்
முச்சந்தி
கவிதையல்ல சிலை
பாரதிதாசன் கவி
வெட்டும் ஒட்டும்
கனவு
காதலும் கண்ணீரு
அவள் கண்ணீர்
பிடி சாம்பல்
இராமன் நிகழ்ச்சி
இதுதான் வினையோ
கவி
கவி பைரன்
நீதி சிரித்தது
பார்லிமெண்ட்
அழகு எரிந்தது (தொடர்க
கலை
திரைஉலகம்
கேளுங்கள் கொடுக்கப்ப

பிரசுரமாகும் எழுத்
பெயர்கள், நிகழ்ச்சிக





சுவரொட்டியை வாபஸ் வாங்குமாறு நிதி மந்திரி சுப்ரமணியம் கேட்டுக்கொள்ள
"இந்து"வின் பயமுறுத்தலுக்கு சென்னை அரசாங்கம் பணிந்தது.

விருப்புடன் வருக என வாழ்த்துபவர் வாழ்த்தட்டும்.
வெறுப்புடன் வேண்டாமென்போர் விருந்துண்டு வாழட்டும்.

சென்னை | 18—6—55 | சனி

# விழித்தெழுங்கள்

இந்தியா ஒரே தேசமல்ல, பல்வேறு சிறு சிறு தேசங்களைக் கொண்ட ஒரு உபகண்டமே என்பதை வரலாற்றினின்றும், நில நூல் ஆய்வுரையினின்றும் அறிந்து கொள்ளலாம் என்பது அறிவு சான்ற பெரியோர்களின் ஆணித்தரமான துணிபு.

வெள்ளையர் வெளியேறினர். பாகிஸ்தான் பிரிந்தது. எஞ்சிய பகுதிகள் ஏக இந்தியாவாகவே கருதப்பட்டு மத்தியப் பேரவையின் கீழ் அரசோச்சப் படுகிறது, அகண்ட பாரதம் என்னும் 'பெயரால். ஆனாலும்—ஆர்வமும்—அக்கரையும்—இல்லா முறையில் தான் எஞ்சிய பகுதிகளின் மக்கள் அணைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவ்வப்போது புரண்டெழும் அரசியல் புயல்களினின்றும் நாம் தெளிவாக உணர்கின்றோம். இத்தகைய 'புயல்கள்' கிளம்புவதின் அடிப்படையான காரணம் எஞ்சிய பகுதி மக்களின் குறுகிய மனப்பான்மை என்றோ—பிரிவினைப் புல்லர்களின் வறட்டுக் கிளர்ச்சி யென்றோ—கருதி விடக்கூடாது. எனவே உண்மைக் காரண மென்னவெனில் இந்தி மொழியினர் இதுகாறும் ஏற்று நடந்து கொள்ளும் நடைமுறைகள்தாம். ஒரு மொழியினரின் அரசு நிலைபெறுதல் வேண்டுமாயின், பிற மொழியினர் மீதும் தமது தாய் மொழி ஆதிக்கத்தைப் பரப்புதல் அவசியமென்று ஏகாதிபத்திய

வாதிகள் எண்ணுதல், செயலாற்றுதல் இயல்பு. வெள்ளையரும் இவ் வாறன மொழி ஆதிபத்யத்தைத்தான் இந்தியா வெங்கணும் பரப் பினர்—பலன் கண்டனர். ஆங்கிலம் அகற்ற முடியா மொழியாகி விட்டது இப்போது. இதே ஆதிபத்ய ஆசை கொண்டுதான் இந்தியை இந்தியாவின் பொது மொழியாக்கிப் பிற மொழியினரை எஞ்ஞான்றும் அடக்கியாள ஆலவட்டம் வீசுகின்றனர் 'என்று இந்தியல்லா இதர மொழியினர் ஐயங்கொள்ளுதல் இயல்புதானே.

'இந்தியில்தான் பேசுவேன்—இந்தியிலே கேட்டால்தான் பதிலிறுப்பேன்' என்று ஆணவமுடன் ரயில்வே அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி பேசினர் முன்பொரு சமயம் பாராளு மன்றத்தில். ஆவடியிலும் கண்டோம், தமிழில் பேசுங்கால் இந்தி மொழியினர் ஏளனமாக நடந்துகொண்ட இழிசெயலை. ஓயாது ஒழியாது தாண்டன்ஜீயும் மாவ்லங்கரும்—இன்னும் சில பித்தரும் இந்தி இந்தி எனப் புலம்பி வருவதை.

தமிழ் நாட்டில் இரு முறைகள் இந்தி திணிக்கப்பட்டுத் துரத்தி அடிக்கப்பட்டதை யாவரும் அறிவர். இருப்பினும் இந்தி யைத் திணிக்கும் ஆதிக்க வெறி அழிந்தபாடில்லை. 'தந்திரமாகத் திணிக்க வேண்டும்' என்கிறர் பம்பாய் கவர்னர் அரி ஹிருஷ்ண மெகதாப். 'இந்தி யல்லாத பிறமொழியாளர்களுக்கு எவ்வித இடைஞ்சலும் இருக்காது', என்று 'போலி' ஆறுதலளிக்கும் உள் நாட்டு மந்திரி பந்த் அடுத்த மூச்சிலேயே ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை அரசாங்க மொழியாக ஆக்கியே தீரவேண்டுமென்றும் கூறிவிட்டார்.

இதனின்று ஆச்சாரியாரின் இந்தி எதிர்ப்புக் கட்டுரையும்— பந்த் அவர்களின் சப்பைக் கட்டும் வெறும் கண் துடைப்பு வேலை தான் என்பதை நன் குணரலாம் நாம்.

அகில இந்திய இலாக்கா ஊழியங்களுக்கென நடத்தப்படும் மத்தியப் பேரவைத் தேர்வுகளில் இந்திக் கெடு பிடி இருக்காது என்னும் கருத்துப்பட பந்த் கூறிவிட்டார் எனக் கருதி ஏமாற்ற மடையட்டும் ஆச்சாரியார். ஆனல் தமிழ்ப் பெருங்குடி மக்கள் 'அடிப் பதைப் போல் அடிக்கிறேன், அழுவதைப் போல அழு' என்ற இவ் ஏமாற்று வித்தையை நம்பி ஏமாறவேண்டாம். "என்றாலும் நாம் உறங்கி விடக்கூடாது," என்று கல்கியே (12-6-55-ம் தேதி இதழில்) எச்சரிக்கிறது. நாமும் தமிழ் நாட்டவர்க்கு எடுத்துரைப் போம் உதவாதினி ஒரு தாமதம் உடனே விழித்தெழுங்கள் என்று. இந்தி ஏகாதிபத்யம் எந் தாய் நாட்டில் அத்துமீறி நுழைவதை அனுமதியோம் என்னும் உரிமைப் போர் துவக்கத் திரண் டெழுங்கள்.

# முச்சந்தி

## "அரட்டை"

யாருடைய விருப்பத்தை வேண்டுமானாலும் தள்ளுபடி செய்து விடுவேன். ஆனால் வாசகர்களின் விருப்பத்தை அலட்சியப் படுத்துவதற்கு அச்சப்படுகிறேன். கடந்த மூன்று வாரங்களாக 'கண்ணோட்டம்' பகுதியில் பித்தன் என்ற பெயரோடு தோன்றினேன். வாசகர்களில் சிலர் கண்ணோட்டம் என்ற தலைப்பும், பித்தன் என்னும் பெயரும் சரியில்லை என்று கடிதங்கள் எழுதிக் குவித்து என்னைத் திணற அடித்துவிட்டார்கள். வாசகர்களின் விருப்பத்திற்கு மாறாக நடக்கலாமா? ஆகையினால் இவ்வாரம் முதல் முச்சந்திக்கு வந்துவிட்டேன். இந்த முச்சந்திக்கு எல்லாரும் வந்தேயாகவேண்டும். முச்சந்தி காணாத மனிதன்தான் எது? இடத்திற்குத் தக்க பெயர் வேண்டுமாதலால் "அரட்டை" என்று பெயரிட்டுக் கொண்டேன். இப்படி இடத்திற்கேற்ற பெயரை நான் வைத்துக் கொண்டதைப் போலவே 'சிலதுகள்' பெயர்கள் வைத்துக் கொண்டிருப்பது வாசகர்கள் நினைவுக்கு வரும். அந்தச் சிலதுகளில் ஒரு சில்லறையின் ஞாபகம் எனக்கு வருகிறது இப்போது. அந்தச் 'சில்லறை' யார் என்று கேட்கிறீர்களா? சற்றுப் பொறுங்கள்.

"மூன்று கோழியை முழுசாகச் சாப்பிடுகிறார்—முந்நூறு முட்டைகளை உடைக்காமல் விழுங்குகிறார்-அவரொரு மாமிச பர்வதம்—மாவீரர்—இதோ வந்துவிட்டார்—கிங்காங்."

"இவர் யார் தெரியுமா? இந்தியாவின் பெருமையை நிலைநாட்ட வந்த இணையற்ற சிங்கம்—தீரச் சமர் புரியப்போகும் தங்கம், தாராசிங்—இதோ பாருங்கள் மற்போர் நடக்கப்போகிறது—இப்படி வாருங்கள்."

இப்படிக் 'கர்த்தபம்' மாதிரி மல்யுத்த மேடைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கத்திக் கத்தி—இந்த 'மாமிசப் பிண்டங்களை' ஊர் ஊராகக் கூட்டிச் சென்று, மக்களிடம் காட்டிக் காட்டி—பெட்டி நிறையப் பணத்தைத் திரட்டித் திரட்டி, பகற் கொள்ளையடித்து இப்போது திரும்பிவந்து தியாகராயநகரில் டேரா போட்டிருக்கிறது அந்தச் சில்லறை. அதன் பெயர் உங்களுக்குத் தெரியுமல்லவா? நானாவது இடத்திற்குத்தக்க பெயர் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதுவோ தன் குணத்திற்குத் தக்க பெயரையே வைத்துக் கொண்டிருக்கிறது. 'சின்ன' என்று பெயருக்கு முன்னால் அடைமொழி போட்டுக் கொண்டிருப்பதிலேயிருந்து பார்த்துக் கொள்ளுங்களேன் எவ்வளவு சின்னப் புத்தி யிருக்குமென்று. அப்பா பெயரின் முற் பகுதியாக 'சின்ன' வைத்திருக்கும் என்று

யாராவது கருதியிருந்தால் தவறு. அப்பா பெயர் என்றால் 'சி' மாத்திரம் போதாதா? பிறகு ஏன் 'சின்ன' என்ற மூன்று எழுத்துக்கள்? உடலோ உப்பியிருக்கிறது—கன்னங்களில் ஏறியிருக்கும் சதைப் பற்றோ கண்களை மூடிவிட்டது—காலில செருப்புப் போட்டிருககிறோமா என்று (கால்களுக்கு உணர்ச்சியில்லாவிட்டால்) குனிந்து பார்க்க முடியாத அளவுக்குக் கொழுப்பு வைத்திருக்கிறது-அப்படியானால் உடலுக்கேற்றதுமல்ல இந்த 'சின்ன' என்ற அடைமொழி. ஆகவேதான் ஆணித்தரமாக எழுதுகிறேன், மண்டையிலுள்ள சரக்கின் அளவு 'சின்ன'து—செயலும் 'சின்ன'த் தனமானது—சொல்லும் எழுத்தும் 'சின்ன'வை—என்பதைத் தெரிவிக்கும் சுய விளம்பரமே அந்தச் சில்லறையின் பெயருக்கு முன்னாலுள்ள 'சின்ன' என்பதும்.

மண்டைக்குள் கிடக்கும் சரக்கு 'சின்ன'தாக இல்லாவிடில், தின்று கொழுத்துத்திரியும் கூட்டத்தை 'காண்டிராக்ட்' எடுத்துக்கொண்டு ஆச்சாரியார் தயவைப் பயன்படுத்தி, அதிகாரிகளை அரட்டி—மோசடியை மூலதனமாகப் போட்டுக் குஸ்திக் கோதா நடத்தி வேஷம் போட்டிருக்குமா? அந்த மல்யுத்த சீசனில் அரசியலை மறந்துவிட்டதே அந்தச் 'சின்ன'து. எவன் எக்கேடு கெட்டால் என்ன, நாம் சுருட்டுகிறவரை சுருட்டிக் கொள்வோம் என்ற சுயநல வெறியேறிச் சேர்க்கிறவரையிலும் சேர்த்து 'மனுச' உடம்பை 'மாமிச' பர்வதமாக்கிக்கொண்டு வந்துவிட்டது 'சின்ன'து. அட! வந்ததுதான் வந்ததே புனிதமான பத்திரிகை உலகிற்கா வந்து சேர வேண்டும்?

அறியாமைக் குட்டையிலே மூழ்கி மூழ்கிச் சேற்றையும், சகதியையும் உடம்பு பூராவும் அப்பிக் கொண்டு வெளியே வந்து நல்லவர் மீதெல்லாம் வாரி இறைக்கிறது உடம்மை உலுப்பி. சேற்றில் கிடப்பதே சுகம் என்று கருதும் இந்த 'ஜந்து'க்கு வரவரத் துடுக்குத் தனம் மிஞ்சுகிறது.

அரசியலையும் குஸ்தி மேடை என்று எண்ணிக் கொண்டு, அந்த 'ஓட்டை வாய்' செய்யும் விமர்சனங்கள் கீழ்த்தரமானவை என்று, நான் சொல்லியா தெரிய வேண்டும்?

"இளமையின் பெரும் பகுதியை நாட்டின் சேவைக்கென்றே களித்தவர்; உழைப்பொன்று தவிர வேறொன்றும் அறியாப் பிறவித் தொண்டர்; அழுந்திக் கிடக்கும் பெருங்குடி மக்களின் தலையாய பிரதிநிதிகளில் ஒருவர்; சூதற்றவர்; நேர்மையாளர்,"—என்று எவராலும் போற்றப்படும்—மக்கள் ஊழியர் காமராசரைத் திட்டுவதற்கு நெஞ்சில் 'உரம்'(!) மட்டும் இருந்து விட்டால் போதாது. அந்த மாவீரரின் கடந்த கால வரலாற்றையும் சற்றுப் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். அந்த நுண்ணறிவு இந்தச் 'சின்ன'துக்கு ஏது?

சாதாரண அரசியல் நேர்மையை அறிந்து கொள்ள முடியாத, "குஸ்தி அறிவிப்பாளன்," அரசியல் விமர்சனம் செய்யப் புகுவது விந்தையிலும் விந்தையே!

அதைவிடப் பெரும் விந்தை, 'மதுரைப் பொற்றாமரைக் குளத்திலே கிடந்தேன்; இப்போது வெளியே வந்துவிட்

டேன்' என்று பிதற்றிக்கொண்டே உலகப் பொதுமறையான திருக்குறள் மீது சேற்றை வாரி வீசி அசுத்தப்படுத்தி யிருக்கிறது. தனக்கும், திருவள்ளுவருக்கும் உறவு கொண்டாடுகிறது 'குஸ்தித்' திமிர் இன்னும் கொஞ்சங்கூடக் குறையாமல்.

வள்ளுவர் மலராம் அது. அது மலரா அல்லது மண்ணாங்கட்டியா? மண்டையிலிருப்பது 'சின்ன,தாக இருப்பதால்தானே மண்ணாங்கட்டியை 'மலர்' என்று தந்திருக்கிறது. கழுதையும், நாயும், துடைப்பைக் கட்டையுமா மலரில், அதுவும் திருவள்ளுவர் மலரில் வர வேண்டும்? அரசியலில் கொடி பிடிக்கிறவனும், குல்லாய்ப் போடுகிறவனும்-குறைமதியினனும்கூடக் காமராசரை நாய்—கழுதை—துடைப்பைக் கட்டை என்று எழுதத் துணியமாட்டானே. இப்படித் துணிந்து எழுதிவிட்டதே--வள்ளுவர் பெயரை வாயால் உச்சரிக்கவும் அருகதையற்ற இந்தச் சின்ன புத்திச் சின்னது. 'கண்ணியம்' என்றால் கடைச் சரக்கா என்று கேட்கும் அளவுக்கு அறிவுகெட்ட 'சின்ன'திடம் நியாயமா என்று கேட்க வரவில்லை. பொதுமக்களிடம் கேட்கிறேன் இவ்வாறு எழுதலாமா என்று? உளுத்துப்போன பலகையை உடைத்தெறியச் சர்க்காருக்குக் கவனமில்லாவிட்டாலும் பொதுமக்களாவது கவனிப்பார்களா?


## உங்களுக்கு...

**கலைமன்றம் 25-6-55-ம் தேதி இதழ்**
**ஓர் கருத்துக் குவியல்.**
**வாங்கத் தவறாதீர்கள்.**

சிரிப்பையூட்டும் சிந்தனையைக் கிளறும் சிறந்த கார்ட்டூன்—முச்சந்தியில் 'அரட்டை'யின் எழுதுகோல் புதுச் செய்தி தருகிறது.

திருமதி. எம். எஸ். கமலா எழுதிய 'அட்டைப்படம்' என்ற சிறுகதை இடம் பெறுகிறது. மே தினச் சிறுகதைப் போட்டியில் தேர்வு பெற்ற கதையும் பிரசுரமாகிறது. சுகி, நாரண துரைக்கண்ணனார் ஆகியவர்களின் எழுத்தோவியங்கள் கூடியவிரைவில் தொடர்ந்து வெளிவரும். அது பற்றிய முக்கியமான அறிவிப்பு 25–ம் தேதி இதழில் வருகிறது.

**ஜூன் 25-ம் தேதி இதழை**
**வாங்கி மகிழத் தவறாதீர்கள்**

மூலம்; கிர்ஷன் கோபால் ஆபீத் பி. ஏ. தமிழாக்கம்; முக்தார்




அதோ! சுமத்ராவின் கடிதம் எனக்கு முன்னால் இருக்கிறது.

அது நான் பூஜித்து வந்த மங்கையின் கடிதம்—ஆம்; அவளது நினைவிலே என்னால் வாழ்க்கையின் இன்னல்களையும், துன்பங்களையும் மறந்து விட முடிந்தது. அவளது நினைவுகள் எனக்கு இன்பமளித்தன; இரவுகளில் அமைதியுடன் நித்திரையிலாழ உதவி புரிந்தன; அவள் எனது வாழ்க்கை வானத்தின் சந்திரன் என்பதில் ஐயமில்லை.

வெகு நாட்களாக இக் கடிதத்தினை எதிர் நோக்கினேன்!

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு, இக் கடிதத்தைக் கண்டு நான் மகிழ்ச்சி பெறுகிறேன். மேஜையின் மீது அதனைக் கண்ணுற்று எனது மனம் துள்ளுகிறது. இதயத் துடிப்புகள் அதிகமாகின்றன. நான் வெகு ஆர்வத்துடன் முன் சென்றேன். பரபரப்புடன் அதனை எடுத்து, சிந்தனையி லாழ்ந்தேன்; இதில சுமத்ராவின் அழகான விரல்களின் உணர்வு இருக்கும். அன்பின் தாபத்தால் தூண்டப் பெறும் மனவெழுச்சிகளும், இனிமையான கனவுகளின் வர்ணனையும், பிரிவின் துயரம் மிகுந்த வரலாறும், மறந்து விட்ட உறுதி மொழிகளின் நினைவுகளும், சந்திரனின் செங்கதிர்களும், யௌவனத் துடி துடிப்புகளும், இவை தவிர நான் அமைதியின்றி எதிர் நோக்கிய விஷயங்களும் இருக்கும். இதில் சுமத்ராவின் மலர் இதழ்களைப் போன்ற உதடுகளில் தவழும் கீதங்கள்; முடிவு பெறாக் குற்றச் சாட்டுகள்.........

நான் கடிதத்தைத் திறந்தேன்.

அதனை வாசித்து மேஜையின் மீது வைத்தேன். சில விநாடிகள் வரை அதை நோக்கினேன். பிறகு ஜன்னலருகில் சென்று சிகரெட் பற்றவைத்து வெளியே, மின்னும் நட்சத்திரங்கள் நிறைந்த இரவைப் பார்த்தவாறு சிந்தனையில் மூழ்னேன்.

* *

இன்றும், அன்று இருந்தது போலவே இரவு எழில் மிகுந்ததாக இருக்கிறது. அதே போல யௌவனமுள்ளதாக......மெதுவாக மிதந்து செல்லும் சந்திரனும், மணவாட்டியின் செவிப் பதக்கம் போல அசைந்து கொண்டிருந்தது. மலர் நிறைந்த செடிகள், காற்றின் அலைகள், நிலவு, இவைகளை அடுத்துச் சற்று தூரத்திலிருக்கும் உயரமான கட்டடங்கள். ஒவ்வொரு பொருளும் அங்கு

னமே' இருக்கின்றன, அன்று இருந்தவாறே—

எனது பார்வை வெகு தூரத்திலிருந்த நிழல்களைக் கண்டது......

ஒரு புது மொக்கை மலராக்கினார்கள். நாதஸ்வரம் வாசிக்கப்பட்டது. கீதங்கள் இசைக்கப்பட்டன. சிரிப்பொலிகள் கிளம்பின. ஊர்வலம் புறப்பட்டது. ஒரு புதிய மணமகளின் புன் சிரிப்புகள் ஒரு ஆணின் வாழ்வை அலங்கரிக்க, சிறப்பிக்க ஏற்பாடாயிற்று.

இதே போல அன்றும் நிலவு இருந்தது. தென்றலின் அசைவுகளில் ஒரு புதுமை. சற்றுக் குளிர்ச்சியாக இருந்தது. நான் துடி துடிக்கும் உள்ளத்துடன் அவளை நெருங்கினேன். கீழே உறவினர்களின் சிரிப்பொலிகளும், வீட்டு மங்கையரின் பேசும் குரல்களும் ஒலித்துக் கொண்டிருந்தன. வாயிற் கதவின் முன்பு நாள் முழுவதும் முழங்கிக் கொண்டிருந்த நாதஸ்வரத்தின் எதிரொலி இதுவரையில் ரீங்காரித்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. எனக்காக மாடியில் அறை ஒதுக்கப்பட்டிருந்தது. வீட்டிலிருந்த நங்கையர்கள் அவளை இப்பொழுதுதான் அங்கு விட்டு நகர்ந்து சென்றார்கள்.

நான் சங்கோஜத்துடன் அந்த அறையை நோக்கிச் சென்றேன். நான் மணமகனுக ஆடைகள் அணிந்து கொண்டிருந்தேன். எனது உள்ளம் துடித்தது. மனதில் ஆசைகள் ஆர்வங்கள் அலைகளாக உயரமாகக் கிளம்பி மோதிக் கொண்டிருந்தன. சென்ற சில நாட்கள் கனவுலோகத்தில் கழிந்தன. ஒரு முடிவு பெறாத கனவை இறுதி வரையில் காண முடியாமல் தவித்தேன்.

இப்பொழுதுதான் விழிப்படைந்தேன்; மீண்டும் துயிலிலாழ்ந்து விட்டேன். அழகான சொப்பனங்கள் என்னைச் சூழ்ந்து கொண்டிருந்தன; மண வீட்டின் ஜோதிகள் என்னைச் சொர்க்கத்தில் இருக்கச் செய்தன; நான் கண்களால் அனைத்தையும் கண்டேன்; ஆனால் ஒன்றும் பகர முடியவில்லை.

இன்று மணம் முடிவுற்றது. நான் மணமகளின் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். உதடுகளில் அர்த்தம் மிகுந்த புன்னகையுடன் மங்கையர் என்னை நோக்கினார்கள். நான் அவளது அறையை நெருங்கினேன்.

கதவை மெதுவாகத் திறந்தேன். அலங்கரிக்கப்பட்ட அறை. மலர்கள் நிறைந்த படுக்கை. ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு பட்டாடைகள் அணிவிக்கப்பட்டிருந்த மங்கை வெட்கம் மேலிட வீற்றிருந்தாள்......நான் அவளருகில் சென்றேன். உள்ளம் துடித்து வெளியே வர முயற்சிப்பது போல் தோன்றியது. தொண்டை உமிழ் நீரின்றிக் காய்ந்து விட்டது.

நான் அவளை அடைந்தேன்.

அவளது ஒரு கையில் நான்கு தங்க வளையல்கள் இருந்தன. உள்ளங்கை செந்நிற மெருகிடப்பட்

**முகப்புச்சித்திரம்**

*ஷஹுயம்கீதை*

டிருந்தது. நான் அவளது கையைப் பிடித்து வளையல்களைத் திருப்பினேன். அறையில் மங்கலான வெளிச்சம் இருந்தது. இருளும், ஒலியும் கலந்திருப்பது போல. ஒரு அபூர்வமான சூழ்நிலை, சூன்யப் பிரதேசம் போல. எனது இருதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது.

“என் அன்பே!” என நான் கூற முயன்றேன். “என் அன்பே! நீ என் கனவுகளின் சித்திரம்!”

ஆனால் என்னால் ஒன்றும் கூற முடியவில்லை. நான் மௌனமாக உணர்ச்சிச் சுவாலைகளில் எரிந்து கொண்டிருந்தேன். அவள் அருகாமையிலிருந்ததால், எனது உணர்ச்சிகள் தூண்டப் பட்டு, எழுச்சி பெற்றன. எனது உடல் கீதங்கள் இசைத்தது. இருளின் சூன்யம் நித்திரை கலந்து விழிப்படைந்தது. அவள் வெட்கத்துடன் மூலையில் ஒதுங்கிச் சென்றாள். அவள் தலை குனிந்து இருந்தது.

நான் அவளருகில் அமர்ந்தேன். அவளது கையைப் பிடித்து ஒரு மோதிரத்தை அவளது விரலிலே, அன்பின் காணிக்கையாக அணிவித்து அழகு படுத்தினேன்.

முகத்தின் மீதிருந்த திரையை நீக்கினேன். தனது கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள், வெட்கம் கலந்த அன்புடன்—அவளது நெற்றியில் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருந்தது. நான் அதில் எனது நிலையைப் பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டேன்—நான் அவளது கைகளை முகத்தினின்றும் விலக்கினேன்......அப்போது நான் கண்டேன்......மாசற்ற புனிதமான முகம்......சந்திரனின் ஒளி......மலர்களின் புன்னகை......இரு செந்நிற உதடுகள்... அழகான கண் இமைகள்......பொலிவு......அபாரம்......எனது மனம் துள்ளிக் குதித்தது. நான் உணர்ச்சி வேகத்தில் தடுமாறினேன். எனது உதடுகளிலிருந்து திணறும் மூச்சுக்களுடன்—

“நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்!

எத்தகைய பொலிவு!”

—எனும் வார்த்தைகள் வெளிப்பட்டன.

அவளது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது. அப்புன்னகையில் எனது மனதைப் பறி கொடுத்தேன்.

வானத்திலுள்ள நட்சத்திரங்களைக் கண்டேன். சந்திரனைப் பார்த்தேன். பூக்கள் மலருவதைக் கண்ணுற்றேன். காலையின் எழிலையும், மாலையின் சௌந்தரியத்தையும் ஆராய்ந்தேன். ஆனால் இத்தகைய பொலிவு எங்குமில்லை. நான் அவளது மடியில் எனது முகத்தைப் புதைத்துக் கொண்டேன்—பிறகு அவளையே கூர்ந்து நோக்கினேன். கண் இமைகளை அசைக்காமல் அவளைப் பார்த்தேன். அவளது கண்களின் நீலக் கடலிலே மூழ்கினேன்...... யௌவனத்தின்


ராமுலு
இங்கிலீஷ் ஆசான்
ENGLISH SELF TUTOR
ஓர் சிறந்த புத்தகம்
உபாத்தியாயர் உதவியின்றி தானே எழுத வாசிக்கக் கற்றுக் கொள்ளத்தக்க முறையில் அகர வரிசையாகத் தொகுக்கப்பெற்ற நூல்

கனவுகள்...... எண்ணிக்கையற்ற ஆசைகள்..........

பிறகு நாங்கள் ஆனந்த மாதம் கொண்டாட மிஸ்ஸௌரி சென்றோம். புன்னகைகள், ஆசைகள், கீதங்கள், இன்பங்கள்—இவற்றில் ஊஞ்சலாடியவாறு நாட்கள் கழிந்தன; கழிந்து கொண்டிருந்தன. மறக்க முடியாத நினைவுகளையும், சின்னங்களையும் விட்டுச் சென்றன......நாங்கள் ஒவ்வொரு வினாடியும் அருகிலேயே இருக்க விரும்பினோம்; முயன்றோம். உள்ளத்தின் துடி துடிப்புகளையும், வாழ்வின் உல்லாசமான இனிமையான கீதங்களையும் அன்பின பாதங்களில் காணிக்கையாகச் சமர்ப்பித்தோம்; உலகின் இன்பங்களைச் சொந்தமாக்கிக் கொண்டோம்.

பிறகு நீண்ட காலம் இருவரும் ஒன்றாக இணைந்திருந்தது போலத் தோன்றியது. நான் அப்பொழுது எம். ஏ. கடைசி வருஷத்தில் மாணவனாக இருந்தேன். பரீட்சைக்கு நான்கு மாதங்கள் இருந்தன. நான் அவளைப் பிரிந்து சென்றேன். எங்களுக்கு இடையில் ஐம்பது மைல தூரம் இருந்தது. வாரத்தில் ஒரு முறையேனும் அவளைக் காணச் சென்றேன். ஆனால் மீண்டும் அவளை விட்டு ஒரு வினாடியும் இருக்க முடியாதவாறு தவிக்கும் எனது மனம்—

அந் நாட்களில் அவளது முதல் கடிதம் வந்தது—

"அன்பே!

வானத்தின் நட்சத்திரங்கள் மங்கலானதும் விடி வெள்ளி தோன்றுகிறது—நான் உதயமாகும் ஒளியிலே மூழ்கி விட விரும்புகிறேன். ஆனால் முடிவதில்லை. பிறகு கதிரவன் தனது கிரணங்களுடன் பிரகாசிக்கிறான். நான் அதனைக் காணுகிறேன். உலகம் முழுவதும் அக்கிரணங்களால் பிரகாசமடைகின்றது. மக்கள் சந்தோஷமடைகிறார்கள். ஆனால் நான் நிம்மதியற்று இருக்கிறேன். மாலை நேரத்திலே சூரியன் அஸ்தமித்ததும் கிழக்கும், மேற்கும் தங்க நிறமடைகின்றன. சிறிது சிறிதாக இருளும் ஊர்ந்து படர ஆரம்பிக்கின்றது; அந்தத் தங்க நிறமுள்ள திரையை மூடிக் கொள்ள முயலுகிறது. வானத்திலே நட்சத்திரங்கள் தோன்றி மின்னுகின்றன. சந்திரன் புன்னகை பூத்தவாறு பவனி வர ஆரம்பிக்கிறது. உலகமே மயக்கத்திலாழ்வது போலத் தென்படுகின்றது. நான் சிந்திக்கிறேன்—இத்தகைய மனோஹரமான செம்மைகளிலே, இந்த ஜோதிகளில் ஒரு கிரணம் எனக்கும் கிடைத்து விட்டால் எனது உலகமும் பிரகாசமடையும். நான் அந்த ஜோதியைக் கவர்ந்துவிட அதனைப் பின்பற்றுகிறேன். ஆனால் எனது நிலவோ என்னை விட்டு வெகு தூரத்திலிருக்கிறது. எனது சுடர், இருளுக்கு அப்பால் இருக்கி


**விற்பனைக்குத் தயார்!**

விருதை. ந. இராமசாமி எழுதிய

**புத்துணர்ச்சி**

விலை 2 ரூபாய்.

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1



கணவன், உன்னைத்தவிர இந்த உலகத்தில் வேறெதுவும் எனக்குப் பெரியாதகத் தெரியவில்லை.

மனைவி: அதனால்தான் வீட்டிலுள்ள சாமான்கள் ஒவ்வொன்ருக விற்றுக் கொண்டு வருகிறீர் களாக்கும்.

றது—நான் யாது செய்வேன்?

தேவா! இந்தப் பூஜாரியின் ஆராதனை பூர்த்தி யடையவில்லை. என்றேனும் எனது அர்ச்சனையை அங்கீகரியுங்கள். நீங்கள் வெகு தொலைவில் இருக்க, நான் எங்ஙனம் இன்பம் பெற இயலும்? நீங்கள் எப்போது வருகிறீர்கள்? எனக்கு ஒளி எப்பொழுது கிட்டும்? எனது உலகத்திலிருந்து இருள் எப்போது விலகும்? வானத்தின் நட்சத்திரங்களையும், நிலவின் குளிர்ந்த கிரணங்களையும் கண்டு எனது மனம் தவிக்கிறது. உலகத்தின் மின்னும் நட்சத்திரங்களைப் பறித்து எனது வாழ்வை ஜோதி மயமாக்க எப்போது வருகிறீர்கள்?—எனது கண்கள் தங்களது வரவை ஆவலுடன் எதிர் நோக்குகின்றன. எனது காதலின் விடி வெள்ளி எப்போது உதயமாகும்? எப்போது வெளிச்சம் கிளம்பும்?

தங்கள் தரிசன தாகமுடைய,
சுமத்ரா.

இந்தச் சம்பவம் ஒரு வருஷத்திற்கு முன்னல் நடைபெற்றது. இதைப் போன்ற ஒரு அழகான இரவில் எனக்கு அந்தக் கடிதம் கிடைத்தது. நான் அதனை மார்புடன் அணைத்தவாறு சாய்ந்தேன். இன்று, ஒரு வருடத்திற்குப் பிறகு, நான் உத்தியோக காரணமாக, முன்னிருந்ததை விட அதிக தூரத்தில், அதைப் போன்ற இன்பக் கனவுகள் நிறைந்த அஞ்சலை எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். ஆனல் இன்று கிடைத்த கடிதம் அதோ மேஜையின் மீது திறந்தவாறு காட்சியளிக்கிறது. நான் அலுவலகத்திலிருந்து திரும்பியதும் இதர வேலைகளைக் கவனிக்காமல் ஆவல் பொங்கப் பரபரப்புடன் திறந்த கடிதம்—நான் அதனை எடுத்து மீண்டும் ஒருமுறை வாசிக்கிறேன்—

அத்தான்!

தாங்கள் வரைந்த கடிதங்கள் வரப்பெற்றேன். ஆனல் விடைத் தாள் தீட்ட முடியவில்லை. நாள் முழுவதும், வீட்டு வேலைகளைக் கவனிக்கவே சரியாக இருக்கிறது. அவகாசம் கிடைப்பதில்லை. ஆதலின் கடிதம் எழுதவில்லை. மன்னிக்க வேண்டுகிறேன். இங்கு அனைவரும் நலம். அம்மாளுக்குச் சில நாட்களாகச் சற்று இருமல் இருக்கிறது. எனக்கும் உடல் முழுவதும் வலியாக இருக்கிறது. ஆனல் கவலைப்படாதீர்கள்.

வேலைகளை ஜாக்கிரதையாகக் கவனியுங்கள். எனது பிறந்தகத்திலிருந்து கடிதம் வரவில்லை. ஓமையும், ரமேஷையும் பார்க்க மனம் நாடுகிறது. ஆனல் இப்போது போக இயலாது; கண்டிப்பாகச் சௌகரியப்படாது. நீங்கள் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி விடுங்கள். ராஜு நன்ருக இருக்கிருன். இப்போது சிரிக்கவும் ஆரம்பித்து விட்டான். மார்கழி மாதம் அவனுக்கு நான்கு மாதங்கள் பூர்த்தியடைகின்றன. அன்னையார், அன்று எல்லா உறவினர்களுக்கும் விருந்தளிக்க வேண்டும் என்கிருர்.

தங்கள் துணைவி.
சுமத்ரா.

நான் தலையைப் பிடித்துக் கொண்டேன். எவ்வளவு வித்தியாசம்? எத்தகைய வேற்றுமை? இரு கடிதங்களுக்கிடையில் உள்ள காலம் ஒரே வருஷம்தான். ஆயினும் இவைகளுள எத்தகைய ஒவ்வாமை!—ஒரு வாழ்க்கையே இவைகளுக்கு இடையில், குறுக்காக நிற்பது போல—ஒரு நீண்ட காலம் கடந்து விட்டது போல்—ஒரு வருஷத்திற்கு முன்பிருந்தது இப்போது இல்லை. ஆர்வம், ஆசை, பாவனை, கருத்து, ஆவல், ஆம் எதுவுமே இல்லை. முன்பு மங்கையாக இருந்தவள் இப்போது நங்கையின் நிழலாகவும் இல்லை. முன்பு கவிதையாகத் திகழ்ந்தவள் இன்று ஒரு கல். உணர்ச்சியற்ற சிலை. முன்பு கீதமாக இருந்தவள் இன்று ஜோதியற்ற சந்திரன். அவருக்கு இன்று பகலிலோ; இரவிலோ, சிரிப்பொலிகளிலோ, அமைதியிலோ ஒன்றும் கவர்ச்சி இல்லை. நான் சிந்தனையிலீடுபட்டேன். பெண்களின் வாழ்வே ஒரு வருடமா? ஒரே வருடமா? மறு வினடியே சுமத்ரா எனது சிந்தனையில் தோன்றி, உதடுகளில் புன்னகை தவழ அவள் மொழிந்தாள்—

"அன்பே! நீங்கள் எதனை மங்கையின் நிழலாகவும், கீதம் எனவும் கூருமல் உணர்ச்சியற்ற சிலை, எனவும் குறிப்பிடுகிறீரோ, உண்மையில் அதுவே பெண்ணின் மலர்ச்சியான சிறந்த உருவமாகும்."

நான் அன்புடன் சுமத்ராவின் கடிதத்தை முத்தமிட்டேன்.




மா: ஏனய்யா, வேலைக்கு ஆள் வேணும்னு விளம்பரம் செய்தோமே என்ன ஆச்சு?

கு: மூணு மனு வந்திருக்கு!

மா: பூ! மூணு ஆசாமி தானு?

கு: அதில்லே சார். மூணு மணு எடையுள்ள அப்ளிகேஷன் பேப்பர்கள் வந்திருக்கு!



# பாரதி கவிதை

## என் மலர்

★

மறுஇலாப் பிறைமுகம்! மங்கை உன்றன்
மைதோய்ந்த மலர்விழி ஈண்டெனைக் கொணர
என்னுரு நின்நீள் விழியிற் காண
ஆர்த்தெழுங் காதலால் அழகினைப் பருகிட,
கூந்தலும் தாங்கிடா நறுமலர்க் குலையில்
தேன்துளி அருந்தத் திரிந்திடும் அளியை

ஓட்டுதும் என்றே வீசிடும் கரத்தைப்
பாட்டொலி யொடுசெலும் தேனீ கொட்டக்
காந்தள் சிவக்கக் கன்னம் சிவக்கக்
கரையிலாப் பேரெழில் கண்டேன் மாதோ!
மலர்விரல் பிடித்து இதழிடை வைக்க
மெய்ம்மறந் துவகை மலர்ந்தது மறவேன்



# தாசன் அரங்கம்

உலகத் தழகின் ஒருரு இதுவோ
உயிருடன் உலவும் கற்பனை இதுதான்
எனப்பல உளத்தினிற் காட்சி காண
வனத்துறை துறவியாய்ப் போய்விடா தீரென
ஏளனம் செய்ய, வளைக்கை பற்றினேன்,
எழில்மிகு இதழிடை மலர்ந்து முல்லை.

தண்துறை யடுத்த குளிர்பூஞ் சோலையில்
தளிருடல் தழுவத் துடித்திடுங் காலை
கொம்பும் கொடியும் பிணைந்த காட்சியைச்
சுட்டிடக் கண்டு சுரந்திடும் தாபம்
தீய்த்திட ஏக்கப் பார்வையால் நோக்கத்
திங்கள் முகிலிடை மறைவது கண்டோம்.

—என். ஜெயராசன் எல். டி. எம்' ஏ. [லண்டன்]




பிராமணர்களுக்கு மட்டும் தனியாகப் புத்தி சாதுர்யமும் திறமையும் உண்டு என்பதை நான் நம்பவில்லை.

—நிதி மந்திரி சுப்பிரமணியம்.

நல்லவேளை இச்சூடு இந்துவின் கண்ணில் படவில்லை. பட்டிருந்தால் வாபஸ் வாங்கு என்ற போராட்டம் வலுத்திருக்குமே!

* *

சென்னை மக்கள் இதர ராஜ்யங்களைவிட முன்னேறியுள்ளனர்.

—உதவி மந்திரி பி. என். தத்தா.

உள்ளக்குமுறல் பொறுக்கமாட்டாமல் கூச்சல் போடுவதிலா?

* *

கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு உலகின் பல பகுதிகளிலும் பரவாமல் தடுக்க அன்னிய நாடுகளுக்கு உதவுவதற்காக ரூ. 1,620 கோடி உதவி மசோதாவை அமெரிக்க செனட் சபை நிறைவேற்றியது.

—செய்தி.

இதில் ஒரு சிறிதளவு தொகையைச் சென்னைப் பக்கம் வீசியெறிந்தால், ஆச்சாரியாரின் அணுகுண்டு ஒழிப்பு மசோதாவும் ஒழிந்துவிடுமே என்கிறார் அமெரிக்கச் சுற்றுப்பிரயாணத்திற்குக் கோட்டாவிவிடும் ஒரு அவசரக்காரர்.

* *

சீனாவில் 14 ராஜீயக் கட்சிகள் இருக்கின்றன.

—தேஷ் பாண்டே.

இருந்தாலென்ன, இங்குதான் ராதா ராமாயண எதிர்ப்புக் கட்சி உட்பட எத்தனையோ பெருத்துக் கிடக்கும்போது இந்தியாவைப் பீட் அடிக்க முடியுமா? என்று கூறுகிறார் செஞ்சீனாவின் பிறவி எதிரி.

* *

பிராமணர்களை அவமதிக்கிற படம் (போஸ்டர்) இனி வெளிவராது.

—செய்தி.

மந்திரி சுப்ரமணியம் அவர்களுக்கு 'இந்து' வயிறு புடைக்க விருந்து வைக்கப் போகிறதாம்.

* *

120 குரங்குகள் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றன.

—செய்தி.

'ஆபத்து! ஸ்ரீராமபிரானின் பரமபக்தர்களை இப்படி நாடுகடத்துவது அநியாயம்' என்று பக்தர்படை கூச்சல் கிளப்பாமல் இருப்பது ஆச்சரியமே.

* *

'புத்திசாலிகளுக்கு மந்திரி பதவி கிடைப்பதில்லையே!'

—என். ஆர். தியாகராசன்.

'மதுரை ஜில்லா காங்கிரஸ் தலைவரே! இப்போது பதவியில் இருப்பவர்களெல்லாம் புத்தியில்லாதவர்களா?' என்று யாரும் கேட்டுவிடாதீர்கள்.

* *

# கனவு

எஸ். சிதம்பரம், M.A., I.A.S.

கனவுகள் நமக்குப் புதியன வல்ல. நாம் பிறந்ததிலிருந்து எத்தனையோ பயங்கரமான கனவுகள் கண்டு நடுநிசியில் எழுந்து பயந்து போய் இருக்கின்றோம். மக்களுக்கு இன்பக் கனவுகளிலே ஒரு சாந்தம். இன்று எந்தப் பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்தாலும், அதிலே 'கனாப்பலன்' என்ற ஒரு பொருளைக் காணலாம். பொதுவாக அங்கே கெட்ட கனவுகள் கண்டால் நல்லதென்றும், நல்லவைகள் கண்டால் கெடுதி என்றும் போட்டிருக்கும். நான்கூட சிறு பிள்ளையாய் இருக்கும்பொழுது—நிறையப் பணம் தோண்டி எடுப்பதாகக் கனாக் காண்பதுண்டு. என் பாட்டி இது ரொம்பக் கெடுதி என்று கூறுவாள்.

சாதாரணமாகக் கனவைப்பற்றி அதிகமாகச் சிந்தித்துப் பாராதவர்களும்கூட மூன்று விஷயங்களைக் கவனித்திருப்பார்கள். முதலாவதாக, நாம் கனவில் வெகுகாலமாக மறந்து விட்டவைகளையெல்லாம் பார்க்க முடிகிறது. இது எதனால் முடிகின்றதென்றால், கனவுகள் நமது உணர்வற்ற அல்லது மறைந்திருக்கும் அடி மனத்தைச் சார்ந்தவை. இந்த அடி மனத்திலே நாம் பிறந்ததிலிருந்து இதுநாள் வரை கண்டு, கேட்டு, உணர்ந்து அனுபவித்த விஷயங்கள் எல்லாம் சேமித்து வைக்கப் பட்டிருக்கின்றன.

இரண்டாவதாக, கனவிலே நாம் பொதுவாகக் காணும் பொருள்களும், மனிதர்களும், அங்கு தோன்றும் இடங்களும் நாம் சமீபத்தில் கண்டதாக இருக்கும். அப்பொருள்களையும், மனிதர்களையும் நாம் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்பு கண்டிருபபோம்.

கடைசியாக, நாம் கனவு கண்டு கொண்டிருக்கும்பொழுது வெளியே நடக்கும் விஷயங்கள் நமது கனவிலே ஒரு பகுதியாகி விடுகின்றன. வீட்டிலே கதவைத் தட்டும் சப்தம் கனவிலே திருடனுடைய துப்பாக்கி சுடும் சப்தமாகி விடுகிறது. ஃப்ருட் என்ற அறிஞர் இதைக்குறித்து விரிவான சோதனைகள் செய்து பார்த்திருக்கிறார். தூங்குகின்றவரைப் படுக்கை முனைக்குத் தள்ளினால், அவர் ஏதோ ஒரு படுகுழியில் நிற்பதாகக் கனவு காண்பார். தலையணையைத் தலையின்மேல் வைத்தால், ஏதோ ஒரு பாறை தன் தலைக்கு மேல் தொங்குவதாகக் கனவு காண்பார். மௌரி என்ற அறிஞர் தான் தூங்கும்பொழுது தன்மீது சோதனை செய்து பார்க்கும்படி கூறினார். அவர் மிக வேடிக்கையான கனவுகளைக் கண்டார். அவருடைய கழுத்தை மெதுவாகக் குத்தினபோது,

அவர் சிறுவரா யிருந்தபொழுது அவரைக் குணப்படுத்திய டாக்டர் அவரது கழுத்தில் ஒரு எரிகின்ற மருந்திடுவதாகக் கனாக் கண்டார். ஒரு துளி தண்ணீர் அவர் முகத்தில் விடப்பட்டது. அவர் உடனே தான் இத்தாலியில் இருப்பதாகவும், அங்கே வேர்த்துக் கொட்டுவதாகவும் கனாக் கண்டார். மற்றொரு சமயத்தில் அவர், தான் பிரஞ்சுப் புரட்சி நடக்கும்பொழுது அங்கிருப்பதாகவும், அவரை மற்றவர்கள் சிறைசெய்து கொலை செய்யக் கொண்டு செல்வதாகவும். அவரைத் தூக்கு மேடையில் படுக்கச் செய்து 'கில்லட்டின்' வாளால் வெட்டச்செய்ய, தலை வேறு, முண்டம் வேறாகக் கிடப்பதாகவும் கனாக் கண்டார். விழித்துப் பார்த்தார். படுக்கை கீழே விழுந்து, ஒரு கட்டை அவருடைய கழுத்தை அமுக்கிக் கொண்டிருந்தது.

வெளியில் நடக்கும் விஷயங்களைப்போலவே நம் உடம்பினுக்குள் நடக்கும் விஷ்யங்களும், உணர்வுசளும் கனவைத் தூண்டிவிடுவதில் முககியமான பங்கு எடுத்துக் கொள்கின்றன. உதாரணமாக, இருதய வியாதியால் கஷ்டப் படுகிறவர்கள் மூச்சுவிட முடியாமல் திண்டாடுவதாகவாவது அல்லது தங்களைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் சூழ்ந்திருப்பதாகவும் கனாக் காண்கின்றார்கள். பார்க்கப் போனால், மூக்கையும், வாயையும் பாதி மூடிக் கொண்டால் நாமே இந்தக் கனவை உண்டாக்கிக் கொள்ளலாம். நாம் அடிக்கடி பறக்கின்றதாகக் காணும் கனவு மார்பு விரிந்து, உயர்ந்து பின்பு தாழ்வதால் ஏற்படுகின்றது எனச் சிலர் எண்ணுகின்றனர். அதிகச் சாப்பாடு, பயம், ஒன்றைப்பற்றி அதிக நினைவு—இவைகள் கனவைத் தூண்டிவிடுகின்றன என்பது யாவரும் அறிந்த விஷயமே.

மேலே நாம் கண்ட விஷயங்கள் எல்லாம் கனவைத் தூண்டுவனவாகவோ, அல்லது அதில் பங்கு கொள்வனவாகவோ இருக்கின்றதன்றி, அவைகள் தாமே கனவிற்குக் காரணங்கள் அன்று. கனவுகள் சாதாரணமாக விருப்ப நிறைவேற்றமே. மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் அனேக பொருள்களை விரும்பி அவைகள் அவனுசகுக் கிட்டாமல் போகலாம். அவனுடைய விருப்பத்தைக் கனவில் நிறைவேற்றி வைக்கிறது. குழந்கைள் தாங்கள் நிறைய மிட்டாய் சாப்பிடுவதாகக் கனாக் காண்பது சர்வ சாதாரணம். ஏகாதசி போன்ற உண்ணாவிரத நோன்பு நோற்பவர்கள் தாங்கள் மிக ருசியுள்ள உணவுகளை நல்ல ஹோட்டல்களில் சாப்பிடுவதாகக் கனவு காண்பார்கள்.

ஆனால் குழந்தைகளின் கனவிலாகட்டும் அல்லது வயது வந்தவர்களது கனவிலாகட்டும் கொஞ்சம் மறைப்பு அல்லது உரு மாறுதலை எதிர்பார்க்கவே வேண்டும். ஒரு பையன் தினந்தோறும் தூங்கியவுடனே விழுவதாகக் கனவு கண்டு அலறிக் கொண்டு எழுந்திருப்பான். விழுகிற இடம் மட்டும் ஒவ்வொரு நாளும் மாறும். ஒரு நாள் கடலுக்குள் விழுவான். மறு நாள் பள்ளத்தாக்கிற்குள் விழுவான். மற்றொரு நாள் மாடியினின்று விழுவான். விசாரித்துப் பார்த்ததில், அவனுடைய தாயார் இவனை நன்றாகக் கவனிப்பதில்லையென்றும், ஒரு நாள் அப்பையன் படுக்கையினின்று விழுந்து விட்

டான் என்றும், அப்பொழுது தாயார் தூக்குவதற்காக ஓடி வந்தாள் எனறும் தெரிய வந்தது. அந்தப் பையனுடைய அடிமனத்தில் தான் கீழே விழும் பொழுது தாயார் கவனிக்கிறாள் என்பது நன்றாகப் பதிந்து விட்டது. அதனால் தன் தயாருடைய அன்பைப் பெறுவதற்காக, தான் அடிக்கடி விழவேண்டுமென அவனையறியாமலே அவனுடைய அடிமனம் விரும்பியது. ஆனால் அடிக்கடி விழுந்தால் வலியுண்டாகுமாகையால், அடிமனம் இதைக் கனவில் நிறைவேற்றி வைத்தது. இதை அந்தப் பையனிடம் விளக்கிக் காட்டியபிறகு அவனுக்கு அக் கனவு தோன்றுவதில்லை.

மக்களுக்கு அடிக்கடி வியாதிகள் மனதில் உள்ள சங்கடங்களால் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட வியாதிகளைக் கண்டுபிடித்து அவைகளைக் குணப்படுத்துவதற்கு கனவுகள் மிகவும் உதவியாயிருக்கின்றன. இந்த மனோ வியாதியைப்பற்றி விநோதமானது என்னவெனில் அந்த வியாதியால் கஷ்டப்படுகிறவர்களுக்கும் தங்களுக்கு வியாதி இதனால்தான் வந்ததென்று தெரியாது. கனவுகள் இந்த மனோ வியாதிகளின் காரணங்களைக் குறித்துக் காட்டுவதற்கு ஏற்ற கருவியாக இருக்கின்றன. ஒரு பெண் ஓயாத மண்டையிடியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். எத்தனை விதமான வைததியங்கள் செய்தும் பயனில்லை. ஆகவே அவள் ஒரு மனோ வைத்திய நிபுணரைக் காணச் சென்றாள். அப்பொழுது அவர், "சமீபத்தில் நீங்கள் ஏதாவது கனவு கண்டீர்களா?" என்று வினவினார்.

"ஆம், நேற்று ஒரு கனவு கண்டேன். நான் எனது வீட்டின் வாசற்படியில் நின்றுகொண்டிருக்கிறேன். வெளியே 'சோ' என்று மழைபெய்து கொண்டிருக்கிறது. அம் மழையில் எனது மூத்த தமையனார் குடையோ, மூடுவதற்கு துணியோ ஒன்றுமின்றி நனைந்து சென்றுகொண்டிருந்தார். முதலில் அவரை அழைக்காமல், பேசாமலிருந்தேன். பின்பு ஒரு குடையை எடுத்துப்போய் எனது சகோதரரை வீட்டிற்குள்ளே அழைத்து வந்தேன்" என்று அப்பெண் தனது கனவைக் கூறினாள்.

உடனே அம் மனோ வைத்திய நிபுணர், "நீங்கள் உடனே உங்கள் சகோதரருக்கு ஆள் அனுப்பி, அவரைச் சாயந்திரம் டீ சாப்பிட உங்கள் வீட்டிற்கு அழைத்துவரச் செய்யுங்கள். முதலில் உமது சகோதரருடன் ஏற்பட்ட மனக்கசப்பை நீக்கிவிடுங்கள். பின் உங்கள் மண்டையிடியெல்லாம் பறந்துவிடும்", என்றார்.

"எனக்கும் எனது தமையனாருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டிருக்கிறது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று அப் பெண்மணி ஆவலோடு கேட்டாள்.

"உங்களது கனவே இதை நன்றாக விளக்குகிறதே. உங்களுடைய அடிமனம், இந்த விரோதத்தை அவர் மழையில் சங்கடப்படுவதாகவும், நீங்கள் முதலில் உதவி செய்யாமலிருப்பதாகவும் கனவில் காட்டியிருக்கிறது", என்றார் மனோ வைத்திய நிபுணர்.

இவ்வாறாக நாம் நன்றாகக் கவனித்து வந்தோமாகில் கனவுகள் நம் மனதில் நடக்கும் முக்கியமான விஷயங்களை அறிவிக்கும் கருவியாக விளங்கும். அவைகளை நன்றாகக் கவனித்து, நமது மனதைச் சரியான வழியில் திருத்தக் கனவுகள் பெருதவி புரியும்.

# காதலும் கண்ணீரும்



ஏ.வி.பி. ஆசைத்தம்பி

**முன் கதை:—**

[சாந்தா வொரு இளங் குமரி. தனது அக்கா, ரமணி திருமணமாகி, கணவனோடு புறப்பட்டுப் போனபிறகுதான் சாந்தாவுக்குப் பருவம்நெஞ்சத்தை நச்சரிக்க. தாய் தந்தையர் இருந்தும் தனியாக வாழ்வது எவ்வளவு சங்கடமாக இருக்கிற தென்பதை உணர்ந்து வருந்தினாள்; அக்காளுக்கும்—அத்தானுக்கும் விடை கொடுத்து அனுப்பி விட்டுத் தன் அறையினுள் நுழைந்தவுடன். அப்போது அவளது சிந்தனை கடந்த காலத்தை நோக்கி விரைகிறது. அக்காள் ரமணி கல்லூரி மணவி. அவளுடன் படித்து வந்த மாணவன் வடிவேலு. இருவரும் டேபிள் டென்னிஸ் விளையாட்டின் போது ஒரு நாள் அறிமுகமாகி, அதன பின்பு 'காதல் ஜோடி' ஆகிவிட்டார்கள். இவர்களின் பேச்சைப் பற்றிச் சந்திப்பைக் குறித்துச் சர்வசதா கேட்டு அறிந்து கொள்வதில் சாந்தாவுக்கு அலாதிப் பிரியம். இதுவரை அனுபவத்தில் காதல் நோய் கண்டறியாப் பிஞ்சல்லவா! பின்னர் ரமணியும்—வடிவேலுவும் தம்பதிகளாக்கப் பட்டார்கள்.

இதுவே சாந்தா மனத்திரையில் ஓடிய சிந்தனை யோட்டம்.

துணையில்லாமல் பொழுது போகா நிலையில் தவித்த சாந்தாவுக்கு ஒருத்தி வந்து சேர்ந்தாள். அவள் சார்தாவின் தாய் மாமனுடைய மகள்—சாவித்திரி. அவளும் பருவப் பெண். ஆனால், நிகழ்கால நாகரிகத்தின் நேரடியான வார்சு. அவளால் தனக்குத் தீங்கு விளையு மென்பது முதலில் தெரியாது பழகினாள். இனி சாந்தாவும், சாவித்திரியும்......?

ராசாவின் தொடர்பு ஏற்படஏற்பட சாந்தாவின் இதயத்தில் காதல் அரும்பியது. ஆனால் சாவித்திரி ராசாவுடன் நெருங்கிப் பழகுவது சாந்தாவுக்கு பெரும் சோதனையாகவும் வேதனையாகவு தோன்றியது. இவ்வித மனப் போராட்டத்துக் கிடையே.......................? மேலே படியுங்கள்.]

பள்ளிக் கூடத்தில் படிப்பிலும் விளையாட்டிலும் அவனுக்குத்தான் முதல் பரிசு! நான் எட்டாவது வகுப்புப் படிக்கும் போதே அவன் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு கல்லூரிக்குப் போய்விட்டான். படிப்புக்குச் சென்னைக்குப் போன பிறகு சேகர் அங்கேயே தங்கிவிட்டதாகச் சொன்னாள். சேகரின் மறைவோ தோற்றமோ என் உள்ளத்தில் எவ்விதமான சலனத்தையும் உண்டாக்கவில்லை. ஏனெனில் பழக்கம்

வெறும் பழக்கந்தான். அவன் அம்மா என் வீட்டிற்கு வரும் போதெல்லாம் அவனைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பாள். சேகர் சென்னைக்குப்போய்விட்ட பிறகு மூன்று நான்கு வருடங்கள் ஆகி விட்டன. அநேகமாக நான் அவனை மறந்து விட்டேன் என்று கூடச் சொல்லலாம்!

பக்கத்து வீட்டு அம்மாவைச் சந்திக்கும்போது மட்டும், "என்ன அம்மா சேகர் சௌக்கியமா?" என்று கேட்டு வைப்பேன். உபசார வார்த்தைகள் உபயோக மற்றவைகளாகப் போய்விடாது!

இப்போது என்னிடம் எவ்வளவு மாறுதல்! எப்படிப்பட்ட அனுபவங்களில் நான் மனதைப் பறிகொடுத்துக் கொண்டிருந்தேன்....!

இச்சமயத்தில்...

ஒரு நாள் கூடத்தில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். சாவித்திரி உள்ளே அம்மாவோடு ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள் அப்பா ஆபீஸுக்குப் போய்விட்டார்.

"என்ன சாந்தா சௌக்கியமா?" கம்பீரமான குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

சேகர்....!

தோற்றத்தில் என்ன மாற்றம்! என்னால் ஒரு நிமிஷம் பேச முடியவில்லை. என்னுடன் விளையாடிய சேகர்... இவரல்ல என்று கூட நினைத்தேன்.

"வா...வாருங்கள்...உட்காருங்கள்!" என்றேன். என் பேச்சில் மரியாதை தானாக இடம் தேடிக் கொண்டது.

"என்ன சாந்தா பயந்து விட்டாயா?....நான் என்ன பயப்படும் படியாகவா இருக்கேன்!" என்றார்.

"இல்லை.......!" என்றேன்.

அம்மாவும் சாவித்திரியும் பேச்சுக் குரல் கேட்டு வெளியே வந்தார்கள்.

"அடேடே நம்ப சேகரா! வாப்பா, வா. சௌக்கியமா? என்ன உனக்குப் பட்டினத்திலேயே வேலையாமே? இந்தப் பக்கம் வருகிற ஞாபகமே இல்லையா?" என்றாள் அம்மா.

ஒரு பக்கமாக உட்கார்ந்தார் அவர்.

"படித்தவுடன் வேலை கிடைத்தது. அப்படியே சேர்ந்து விட்டேன். இப்போதுதான் லீவு கிடைத்தது!" என்றார்.

"மிகவும் மாறி விட்டீர்கள்!" என்றேன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு

"உம்...! நீ மட்டும் அப்படியே இருக்கிறாயா? நீயும் தான் நான் எதிர்பார்க்காத வகையில் வளர்ந்து விட்டாய்" என்று கூறிவிட்டுச் சாவித்திரியைப் பார்த்தார்.

"அவள் என் மாமாவின் பெண் எங்களுடன் தான் வசிக்கிறாள்!" என்றேன்.

"ஆமாம்! ரமணிக்குக் கல்யாணமாகி விட்டதாமே!"

"ஆமாம்!"

"என்ன இவ்வளவு சீக்கிரமாக?" என்றார்.

"எல்லாம் சரியாக இருந்தது... திருமணமும் நடந்து விட்டது', என்றாள் அம்மா.

ராஜாவிடம் படபடப்பாகப் பேசும சாவித்திரி பேசாமல உட்கார்ந்திருந்தது எனக்கு ஆச்சர்யத்தை விளைவித்தது.

நானுக அவளை ஏன் பேசத் தூண்டுவானேன் என்று விட்டு விட்டேன்.

அ மா அந்தப் பக்கமாகப் போன பிறகு—

"ஏன் சாந்தா....உன் அக்காவின் கல்யாணமும் "லவ் மாரியேஜ்" என்கிறார்களே வாஸ்தவமா?" என்றார்.

அதைக் கேட்க எனக்கு என்னவோ போலிருந்தது. சிறு வயதிலிருந்து பழகிய அவர் தானே கேட்கிறார் என்று நினைத்துக் கொண்டேன்.

"ஆம்!" என்றேன்.

"வெகு சீக்கிரம் நடந்து விட்டது. அதைப் போலவே நீயும் எனக்குச் சொல்லாமல் கல்யாணம் செய்து கொள்ளாதே!" என்றார்.



"பருப் பில்லாமலா கல்யாணம்?" என்று வாயில் வந்ததைச் சொல்லிவைத்தேன்.

சிறிது நேரம், பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

பிறகு எழுந்து போய் விட்டார்.

"மீண்டும் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு சேகர் போனவுடன் சாவித்திரி என்னிடம் கேட்டாள்.

"என்ன சாந்தா யார் இது?.... உன் சிநேகிதரா?...காதலரா?" என்றாள்.

'எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்!" என்றேன்.

'என்னிடம் உண்மையைச் சொன்னால் நான் பங்குக்கா வரப் போகிறேன்...சும்மா சொல்லு!" என்றாள்.

'இரண்டு மில்லை—பக்கத்து வீட்டுக்காரர்—பழகினதால் பேசினேன்!" என்றேன்.

"என்னவோ!" என்று ஒரு மாதிரியாகக் கூறிவிட்டு அவள் போன தோரணை எனக்குப் பிடிக்கவில்லை.

*　*　*

அன்று இரவு சாப்பாட்டுக்குப் பின் சாவித்திரி படுக்கப் போய் விட்டாள். நானும் விளக்கை அணைத்துவிட்டுக்கொஞ்ச நேரம் மேஜை முன்னால் உட்கார்ந் திருந்தேன், தூக்கம் வந்தவுடன் படுத்துக் கொள்ளலாம் என்ற நினைப்பில்...

கூடத்தில் உட்கார்ந் திருந்த அம்மாவும் அப்பாவும் பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. நான் தூங்கி விட்டேன் என்று நினைத்துக்

கொண்டு அவர்கள் அம்மாதிரிப் பேசிக் கொண்டிருந்தாகள் போலிருக்கிறது.

"இன்றைக்குப் பக்கத்து வீட்டு சேகர்... இங்கு வந்திருந்தான்!" என்ருள் அம்மா.

"உம்....என்ன விசேஷம்?" என்ருர் அப்பா சுவாரஸ்ய மில்லாமல்.

"பையன் நன்ருக வளர்ந் திருக்கிருன் — நல்ல உத்தியோகத்தில் இருக்கிருன்.... இருந்தாலும் மிகவும் அடக்கமான குணம்!" என்ருள்.

"ஓஹோ!"



"என்ன நான் சொல்வதைக் கவனிக்கிறீர்களா?" அம்மாவுக்கு லேசாகக் கோபம் வந்தது.

"கேட்டுக் கொண்டுதானே இருக்கிறேன்:"

"சேகருக்கு ...... சாந்தாவைக் கட்டிக் கொடுத்து விட்டால்....... நமக்கும் தொந்தரவில்லாமல் போகும்....சாந்தாவையும் அவன் நன்ருக வைத்துக் கொள்ளுவான்!" என்ருர்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். இது என்ன புது ஏற்பாடாக அல்லவா இருக்கிறது?

"இந்தக் கடன் கொஞ்சம் தீர்ந்தவுடன் தான் கல்யாணத்தைப் பற்றிய பேச்செல்லாம்," என்ருர் அப்பா.

"அவளுக்கும் வயது பதினெட்டாகவில்லே?"

"ஆகட்டுமே!"

"கடைசியில் அவளும் காதலிக்க ஆரம்பித்து விடப் போகிருள்!" இதைச் சொல்லி விட்டுச் சிரித்தாள்.

"காதலித்தால் சௌகர்யம்... கல்யாணம் முடிந்துவிடும் ஒரு மாதிரியாக!" என்ருர் அப்பா...

அதற்கு மேல் நான் அதைக் கேட்கவில்லே. படுக்கப் போய் விட்டேன்...!

அம்மாவின் எண்ணம் இப்படி யிருக்கிறது.

சேகர்...!

அவரைப் பற்றிய நினைப்பு ஓடியது.

நல்லவர்—சுமாரான தோற்றமுடையவர்.......படித்தவர். நல்ல உத்தியோகத்தில் இருக்கிருர்...

ராஜா ......எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவரிடத்தில் கவர்ச்சியான தோற்றமிருந்தது. அத் தோற்றந்தானே எனது உள்ளத்தில் சலனத்தை ஏற்படுத்தியது!

சேகரையும் என் மனம் வெறுத்துத் தள்ளி விட வில்லை- ஆனல்.......என் மனதில் ராஜாவுக்கு இருந்த சுதந்திரம் சேகருக்கு இல்லை!

என் நினைவுகளைச் சற்று பின்னேக்கி ஓடவிட்டேன்.

நான் சின்னப் பெண்ணாய் இருக்கும் போது.........அக்கா என்னை விட்டு விட்டு ஓடிவிடுவாள் நானும் பள்ளிக்குப் போகத் துணையில்லாமல் தவிப்பேன். அப்போதெல்லாம் சேகர் தான் என்னை அழைத்துச் செல்வது. பொறுமையோடு மாலையிலும் காத்திருந்து என்னை மீண்டும் வீட்டுக் கழைத்து வருவார்.

நான் தான் கணக்கில் புலி ஆயிற்றே!

அதற்காகவும் சேகர் உதவி எனக்கு வேண்டி யிருந்தது. கணக்கும் அவர்தான் சொல்லிக் கொடுப்பார்.

அந்தக் காலத்தில் அவர் இன்றியமையாத ஒரு நண்பராக இருந்தார் எனக்கு!

அதற்குப் பிறகு அவர் சென்னைக்குப் போய் விட்டார். அவர் போன பிறகு அவர் நினைவும் என் மனதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது.

அவர் அப்போது என்னிடம் எவ்வளவு தான் பழகி யிருந்தாலும்... அது வேறுதான் .......இப்போது பழகுவது வேறுதான்.

எதையும் புரிந்து கொள்ள முடியாத....என் அர்த்தங் காண முடியாத வயது அப்போது.

பேச்சில் நடத்தையில் கருத்தை ஊன்றிக் கவனிக்கும் வயது இப்போது.

உள்ளத்தில்...உருவ அமைப்பில் சேகருக்கும்...ராஜாவுக்கும் எனக்கு வித்தியாசம் அதிகம் இருப்பதாகப் பட்டது.

இதே நினைவுகளில் ஆழ்ந்திருந்த என் மனம் சோர்வடைந்த போது தூக்கம் என்னைத் தழுவிக் கொண்டது.

## 9

விருந்திற்குப் பிறகு ராஜா அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வர அரம்பித்தார். என்னை விட இதில் சாவித்திரி அதிக உற்சாகம் காட்டுவதாலோ, என்னவோ அம்மாவும், அப்பாவும் ராஜாவை வரவேற்று, உபசரிப்பார்கள்.

அம்மா ஒரு தடவை சொன்னது என் மனதில் முள்ளாகத் தைத்தது.

“இந்த ராஜாவுக்கு இங்கென்ன வேலை?வயதுப் பெண்கள் இருக்கும் வீட்டிற்கு இவன் அடிக்கடி வந்தால் பார்ப்பவர் எதாவது சொல்ல மாட்டார்களா?”

நான் பதில் பேச வில்லை.

அன்று இரவு அம்மா அப்பாவிடம் சொன்னதை ஒரு தடவை நினைத்துப் பார்த்தேன்.

இன்னெரு எண்ணம் மனதில்.

அம்மா சொல்வதில் என்ன தப்பு?....என்ன இருந்தாலும்... பெண்களுக்கென வகுத்துள்ள சில சட்ட திட்டங்களின்படித் தானே நாம் சமூகத்தில் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது? அதை மீறினல்...நமக்குக்கிடைக்கும் பட்டமோ.......? கேட்கவே வேண்டிய தில்லை...! சாவித்திரி பணக்காரப் பெண்........அவள்



என்ன செய்தாலும் பணம் அவளுக்குப்பக்க பலமாக நிற்கிறது?

நான் ஒருசாதாரணக் குமஸ்தாவின் பெண் தானே!

குமஸ்தாவின் பெண் என்றால் மட்டும் மனதில் காதல் உண்டாவதில்லையா?

இந்தக் கேள்வியும் என் உள்ளத்தில் எழாமல் இல்லை.

காதலுக்காகக் கண்ணியத்தை விட்டுக் கொடுக்க முடியுமா. அப்பா மானஸ்தர்!

கேவலமான சொற்கள் அவர் காதில் விழாத மாதிரி நடந்து கொள்ள வேண்டும்.

இதை யெல்லாம் யோசித்துப் பார்த்த பின்னர் நான் ராஜாவின் முன் தென்படாமல் இருக்க ஆரம்பித்தேன்.

உள்ளத்தில் அவரைப் பார்க்க வேண்டும் பேசவேண்டும் என்ற ஆவல் என்னையு மறியாமல் எழுந்து கொண்டே இருந்தது. ஆனால் சூழ்நிலை?

இவைகளால் மனதில் உதயமாகியுள்ள காதல் மலரை நசுக்கி விட முடியுமா?

ஆனால் ஒன்று!

'காதல்' நிறைவேறினால் போகிறது. இல்லை யென்றால் அதைப் பற்றி நான் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்று நான் முடிவு செய்தேன். ஆனால்... காதலைப் பற்றி நான் முழுக்க அறியாதவள் தானே? அது என்னை என்னென்ன வேதனைகளுக்குள்ளாக்கும் என்பதை நான் முழுக்க அறியவில்லை.......!

ராஜா வருவதை மறை முகமாகக் கண்டித்த அம்மா சேகர் என்னைத் தேடிக் கொண்டு வந்து. என்னிடம் பேசுவதைப் பொருட் படுத்தவே யில்லை.

சேகரைக் கண்டால் மட்டும் சாவித்திரி ஒதுங்கிப் போவது எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. நண்பர் ஒருவரிடம் பேசுவதைப் போல் நான் சேகரிடம் பேசிக் கொண்டிருப்பேன்.

ராஜாவைக் கண்டால் நான் ஒதுங்கிப் போவது அவருக்குத் தெரிந்து விட்டது. முதலில் அவரிடம பேச நான் காட்டிய ஆர்வம் இப்போது ஒடி மறைந்து விட்டது என்பது அவருக்குத் தெரியாதா? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாக அவ

ருக்குத் தெரியாது....நான் அவரைக் மனதாரக் காதலிக்கிறேன் ...நிர்ப்பந்தங்களினுல் அவரைக் காண முடியாமல் இருக்கிறேன்....என்பதுதான் அது

எனக்குப் பரிட்சை ஒரு மாதம் தான் இருந்தது. இப்போதெல்லாம் படிப்பில் ஏனே எனக்கு அக்கரை அதிகம் செல்லவில்லை.

உள்ளத்தில் சதா 'அரிப்பு' இருந்து கொண்டே இருப்பதாலா? இல்லை உண்மையாகவே எனக்குப் படிப்பில் அக்கரை இல்லையா?

*   *   *

அன்று பள்ளிக்கூடத்திற்குள் நான் நுழையும் போது பியூன்.... ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தான்.

"யாரோ ராஜாவாம்!" என்ருன்.

நான் புரிந்து கொண்டேன். கடிதத்தை உடைத்துப் படிப்பதா வேண்டாமா?

'ராஜா' அல்லவா எழுதியிருக்கிருர்?

அவசியம் உடைத்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணந்தான் என் மனதில் தலை தூக்கியது! தனியாக ஒரு இடத்திற்குச் சென்று உடைத்துப் பார்த்தேன்

அன்பே....

உன்னைக் காண முடியாமல் தவிக்கிறேன் ...உன் தரிசனம் தந்து என்னை மகிழ்விக்க மாட்டாயா? உன்னைத் தனியாகச் சந்திக்கத் துடித்துக் கொண்டிருக்கிறேன். இன்று மாலை உனக்காக காகப் பள்ளியின் வாசற்படியில் காத்திருக்கிறேன்.

உன் ராஜா.

கடிதத்தை ராஜாதான் எழுதியிருந்தார். நான் கனவு காணவில்லை. தனியாக ஒதுங்கி அவர் எழுதிய கடிதத்தைத்தான் படித்துக் கொண்டிருக்கிறேன் என்பதும் தெரிந்தது.

என் மனம் அவருக்குத் தெரிந்து விட்டதா? இல்லை அதைத் தெரிந்து கொள்ளாததற்கு முன் அவர் கடிதம் எழுதி விட்டாரா?

என்மேல் அவருக்கு அன்பு இருக்கிறது என்பதற்கு இதை விட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?

காதலிக்கிருர். சரி!

அதன் முடிவு?

அக்காவின் காதலைப் போல் கல்யாணத்தில்தான் போய் முடியும் என்பது என்ன நிச்சயம்?

அப்படி நடக்காது என்று யாரோ என்னை எச்சரிப்பது போலிருந்தது.

கடிதத்தைக் கிழித்துப்போட்டு விட்டேன். அதை யாராவது பார்த்து வைத்தால்... அதுவேறு ஒரு புதிய பேச்சுக்கு இடமாகி விடும்.

பள்ளிக்கூட மணி அடித்தது மணி சரியாக நாலரை. எல்லோரும் கும்பலாக வெளியே கிளம்பினுர்கள். தயங்கித் தயங்கிக் கடைசியில் நான் வெளியே வந்தேன். என் மனம்......'பட பட'வென அடித்துக் கொண்டது. கால்கள் 'கேட்'டை நோக்கி நடக்கத் தயங்கின. சுற்றும் முற்றும் பார்த்தேன். ஆனுல், அங்கே....?

(வளரும்)

# அவள் கண்ணீர்

மூலம்: கவியரசர் தாகூர்

தமிழாக்கம்: ஆ.நா.பொன்னிறைவன்

சுபாசினி பிறந்த பொழுது அவள் ஊமையாக இருப்பாள் என்று யாருமே நினைக்கவில்லை. அவள் தகப்பனருக்கு அவள் மூன்றாவது பெண். அவளது இரு சகோதரிகள் சுகேசினியும், சுவாசினியும் ஆவார்கள். பெயர் ஒரே ஒழுங்கு முறையாக இருக்கட்டும் என்று எண்ணிய அவள் பெற்றோர் அவளுக்குச் சுபாசினி என்று பெயரிட்டனர். கடைக்குட்டி சுபாசினியை எல்லோரும் அன்பொழுக 'சுபா' என்றே அழைத்து வந்தனர்.

சுபாவின் சகோதரிகளுக்கு மிகப் பிரயாசைக்குப் பிறகு கல்யாணம் முடிந்தது. இனி இவள் ஒருத்திதான்பாக்கி. அவளுக்கும் மணம் முடித்து விட்டால் தம் கவலையொழியுமென்பது அவள் தகப்பனர் எண்ணம். ஆனால் அவளுக்குமணம் முடிப்பது அவ்வளவு சுலபமானகாரியமாகத் தெரியவில்லை, அவள் பெற்றோர்க்கு அவளோ ஊமை. உள்ளத்து உணர்ச்சிகளையும், ஆசைகளையும் வெளியிட முடியாதவள். ஆகவே அவளுக்கு உள்ள உணர்சசியும் இருக்காது என்று எண்ணினர் மற்றவர்கள். அவள் முன்னிலையிலே அநுதாபத்துடனும், கேலியாகவும் பேசத் தொடங்கினர். இயற்கைதனக்கு இப்படிப்பட்ட தண்டனை கொடுத்துவிட்டதற்காகஎல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டுமென்று எண்ணித் தனிமையை நாடலானாள் சுபா. ஆனால் வேதனையைப் பொறுத்துக் கொள்ள யாரால் தான் முடியும்? அவள் இருதயம் என்ன இரும்பாலா செய்யப்பட்டிருக்கிறது? சுபாவின் தாய்தன் மகள் ஊமையாக இருக்கிறாளே என்று அவள்மீது மிகுந்த வெறுப்பும் அசூசையும் கொண்டாள். அவளது தாய்மை உள்ளம் தன் மகளுக்கு ஏற்பட்ட குறை தன்னையே பாதித்ததாகக் கருதி வேதனை அடைந்தது. சுபாவின் தகப்பனர்-பாணிகந்தன்—தன் மகள் பேச முடியா ஊமையாக இருக்கிறாளே என்று அவள் நிலைக்கு மிகவும் அநுதாபப் பட்டான். தாய் அன்பு இல்லாவிட்டாலும் தந்தையின் அன்பும், அநுதாபமும் கிடைத்ததே என்று மனத்தைத் தேற்றிக் கொள்வாள் சுபா.

சுபாவுக்குப் பேச்சுத்தான் தேவைப்பட்டதேயொழிய அழகு ஒன்றும் குறையவில்லை. கெண்டை மீன் விழிகள், ரோஜா இதழ்கள், மாம்பழக் கன்னங்கள், நிர்மலமான வானத்தைப்போன்ற மாசு மருவிலா பரந்த நெற்றி, வான வெளியிலே ஆட்சிபுரியும் மதியவனைப் போல் நெற்றியிலே அழகுடன் மிளிரும் திலகம்,... இத்தனைக்கும் பின்னே கருநாகமென நெளியும் கருங்கூந்தல்; சிவந்த மேனி— அவள் அழகின் இருப்பிடம் என்றுதான் சுருக்கிச் சொல்ல வேண்டும். ஆனால் முத்துப் பற்களைக் காட்டி இன்மொழி பேசிட வாய்தான் மூடப்பட்டு விட்டது.

அவள் வாய் பேசமுடியவில்லைதான். ஆனால் அவள் கண்கள் அப்பணியை ஏற்றுக் கொண்டன. அவள் உள்ளத்தின் பிரதிபலிப்பு அவள் கண்களின் கருமணிகளிலே நிழலாட்டம் ஆடிக்கொண்டுதான் இருந்தது. பிறப்பிலேயே பேச முடியா நிலையில் பிறந்தவர்கள் அவள் கண்கள் சொல்லும் கதையை நன்றாகப் புரிந்துகொள்வார்கள். நன்றாக ரசிக்கவும் செய்வார்கள். முடிவில்லா வார்த்தைகளையும், கடலினைப்போன்ற கருத்து ஆழமும், இருளும், ஒளியும், பகலும் இரவும் தங்கள் விளையாட்டுக்களை ஆடிடும் வான வெளியைப்போன்ற தெளிவும் கொண்ட மொழியை, அவள் கண்களின் நிழலாட்டத்திலே காணலாம். நடுப்பகல் அலைபோல தனிமையாகவும், அமைதியாகவும் காணப்பட்டாள் சுபா.

சுபாவின் கிராமமான சாந்திபூரில் ஒரு சிறிய நதி இருந்தது நதி அகலமின்றி மிக குறுகலாகவும் நீண்டும் ஒரு நடுத்தரக் குடும்பப் பெண்ணைப்போல இருந்தது. அந்த கிராமப் புறத்தை எல்லாம் அழகுப் பூங்காக்களாக ஆக்கிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது தன் கடமையில் சிறிதும் தவறாமல்.

பாணிகந்தாவினுடைய வீடு அந்த நதியை எதிர்நோக்கியிருந்தது. தன் வீட்டு வேலைகள் முடிந்துவிட்டால் நேரே நதிக்கரையில்தான் காட்சியளிப்பாள் சுபா. தன் மௌன மொழிகளால் நீரன்னையுடன் பேசிக்கொண்டே இருப்பாள். பரந்த வான வெளியையும், நீல நிற நதியையும் பார்த்துப் பெருமூச் செறிவாள். இயற்கையும் பதிலுக்கு அழுகையையும், பெருமூச்சையும், உறுமலையும் வெளிப்படுத்தும். நடுப் பகலிலே படகோட்டிகளும்; பிரயாணிகளும் மத்தியான உணவுக்குச் சென்ற பிறகு அங்கு சந்தடியே இராது. ஒளியைப் பரப்பும் வானவெளியின் கீழே ஊமையாகிவிட்ட இயற்கையின் அமைதியும், மர நிழலின் கீழே ஊமைப் பெண் சுபாவும் தங்களை மறந்து இருப்பார்கள்.

சுபாவுக்கு இரு நண்பர்களும் இருக்கத்தான் செய்தார்கள். அந்த நண்பர்கள் அவளது அன்புப் பசுக்கள்தான். மனிதர்களைப்போல பேச்சுத் தெரிந்திரா விட்டாலும் அவளது செய்கையாலும், சாடையாலும் சுபாவின் உள்ளத்தை நன்றாக அறிந்துகொண்டன. அவளது கோப தாபங்களையெல்லாம் மனிதர்களைக் காட்டிலும் வெகு நன்றாகப் புரிந்துகொண்டன. சுபா தினமும் காலை, பகல், மாலை என்று மூன்று முறை அவைகளைக் கண்டு தடவிக்கொடுத்து ஆனந்திப்பாள். எப்போதாவது அவள்

உள்ளத்திலே வேதனை ஏற்படுமானால் வழக்கத்திற்கு மாறாக உடனே தன் நண்பர்களிடம் சென்று கண்ணீர்பொழிவாள். அவள் நண்பர்களும் அவள் வேதனையை உணர்ந்து அநுதாபக் கண்ணீர்சொரிவது வழக்கம்.

❀ உள்ளக் கருத்தினை எவரிடமும் எடுத்துக் கூற முடியாத ஊமை அவள்.

❀ அவள் இதய ஓட்டத்திலே எத்தனையோ எண்ணச் சுழல்கள்.

❀ அவற்றைப் பிறநக்குவெளிப்படுத்த இயலாத் நிலையில் அவள் மனம் படும்பாட்டை அழகுபட விவரிக்கிறார் கவியரசர் தாகூர்.

இப்போது பிரதாப் என்ற சிறுவன் சுபாவுக்குத் துணையாகக் கிடைத்துவிட்டான். பிரதாபின் முக்கிய ஆசையும், விளையாட்டும் மீன் பிடிபபது. அது அவனுக்கு ஒரு பொழுதுபோக்கு. மீன் பிடிப்பதிலேயே மிகுந்த நேரத்தை வீணாக்கி வந்தான். மீன் பிடிக்கும் போது சந்தடி செய்யாமல் அமைதியாக இருக்கவேண்டும். சுபா பேசமுடியாதவள். ஆகவே அவள் அவனுக்குத் தொந்தரவு கொடுக்காத துணையானாள். இருவரும் தங்களுக்கு ஏற்ற துணை கிடைத்தது குறித்து நிரம்ப மகிழ்ந்தார்கள். பிரதாப் தன்னுடன் வெற்றிலை கொண்டு வருவான். அதை வாங்கி அவனுக்கு மடித்துக் கொடுப்பாள் சுபா. அதிலே அவளுக்கு மகிழ்ச்சி. உலகத்திற்கு, தான வெறும் பாரமாக இருக்கவில்லை. தானும் மற்றவர்களைப்போல ஏதாவது உதவியும். வேலைகளும் செய்யமுடியும் என்று அவன் எண்ணும்படி செய்ய அவள் மனம் மிக விழையும்.

“நான் ஒரு நீரரசியாக மட்டும் இருந்தால் நீர் மட்டத்திற்கு மேலே பாம்பின் முடியிலிருக்க வேண்டிய மாணிக்கத்தைக் கொண்டு வருவேன். அங்கே மீன் பிடித்துக் கொண்டிருக்கும் பிரதாப் மாணிக்கத்தை வேண்டி நீரினுள் குதிப்பான். அங்கே வந்ததும் வெள்ளி அரண்மனையிலே தங்கச் சிம்மாசனத்திலே பொன்னுலக அரசனின் ஒரே மகளாக சுபா வீற்றிருப்பாள். அவளைக் கண்டதும் பிரதாப் ஓடிவந்து அவளைக் கட்டி அணைத்து.........” இதற்குமேல் அவள் சிந்தனை ஓடாது. உடனே தான் ஏழை பாணிகந்தாவின் மகள் என்ற நினைப்பும், அதிலும் ஒரு ஊமைப் பெண் என்ற நினைப்பும் வரும். உடனே அவள் மனம் சூம்பிவிடும்.

சுபா மணப் பருவத்தை அடைந்து விட்டாள். அவளுக்கு மணமுடிக்க வேண்டுமே என்று அவளது பெற்றோர் கவலைப்படலாயினர். ஊமைப் பெண்ணை யார் மணந்து கொள்வார்கள். ஊரார் சுபாவின் தாய் தந்தையரைப் பற்றிக் குறைகூறத் தொடங்கினர். ‘இவ்வளவு பெரிய பெண்ணை வைத்துக்கொண்டு யாருக்காவது முடிச்சுபோட்டு வைக்காமல் காலங் கடத்துகிறார்களே?’ என்று ஆளுக்கொரு விதமாகப் பேசலாயினர். பாணிகந்தாவின் செவிகளும் அங்கு மிங்குமாக இவ்வார்த்தைகளைக் கேட்கத்தான் செய்தன. ஊரார் எங்கே தங்களைக் குலத்திலிருந்து நீக்கி ஒதுக்கப் பட்

...வ விடுகிறார்களோ ...று பயப்படவுஞ் செய்தார். நல்ல மாப்பிள்ளை கிடைக்க வில்லையே என்ற ஏக்கம் அவரைப் பிடித்தாட்டியது. அவர் மனைவியும் அவரை நச்சரிக்கவும் ஏசவும் தொடங்கினாள். ஒரு நாள் பாணி கந்தா தன் மனைவியின் ஏசல் பொறுக்க மாட்டாமல் கோபமாக வெளியே புறப்பட்டார். தம் பெண்ணிற்கு மாப்பிள்ளை கிடைக்கும் வரை இந்த வாயிற்படி மிதிப்பதில்லை யென்று சங்கல்பம் செய்தவராய் வெளியேறினார். நாலைந்து நாட்கள் வீட்டுப் பக்கம் திரும்பவே யில்லை அவர். சுபாவும் அவள் தாயும் இன்னது செய்வதென்று அறியாது திகைத்தனர். சுபாவின் உள்ளம் நைந்து புழுவெனத் துடித்தது. ஒருநாள் பாணிகந்தா திரும்பி வந்தார். அவரது கண்களிலே ஓர் தெளிவு காணப்பட்டது. தன் மனைவியிடம் கல்கத்தாவுக்குப் புறப்பட வேண்டும் என்றார்.

கல்கத்தாவிற்குப் புறப்படுவதற்காக எலலாம் தயார் செய்து கொண்டிருந்தார். பாசுவின் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. தன் தாய் தந்தையர்களின் செய்கைகளை ஓர் ஊமைப் பிராணியைப் போல மிரள மிரளப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வை தன் தந்தையிடமிருந்து ஏதோ அறிய விரும்புவதாக இருந்தது. ஆனால் தாய் தந்தையிடமிருந்து சிறிதளவு செய்தியையும் அவளால் அறிய முடியவில்லை. அன்று மத்தியானம் பிரதாப் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். இப்போது பிரதாப்தான் எவ்வளவு வளர்ந்து விட்டிருக்கிறான்!

பிரதாப் சுபாவை நோக்கி!....... "உனக்கொரு கணவனைக் கண்டு பிடித்து விட்டனர் உன் பெற்றோர். அவனை மணந்துகொண்டு நீ மகிழ்ச்சியா யிருக்கப் போகிறாய்... ஹூம்... உன் மகிழ்ச்சியில் என்னை அடியோடு மறந்துவிட மாட்டாயே?" என்று கூறிவிட்டுப் பதிலுக்கு எதிர்பாராதவன்போல் தன் பார்வையை நதிப்பக்கம் திருப்பிச் கொண்டான். அவளுக்கு அழுகை வந்துவிடும்போல் இருந்தது. "நான் என்ன குற்றம் செய்தேன் பிரதாப்? என்னை ஏன் இவ்லாறு துன்புறுத்துகிறாய்?" என்று அவள் விழிகள் கேட்டன. ஆனால் பிரதாப் அதைக் கவனித்தால் தானே! அங்கே இருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. வீட்டுக்கு வந்தாள். அங்கே தந்தை உட்கார்ந்திருப்பதைக் கண்டு 'ஓ' வென்று கதறியவாறு அவர் காலடியில் வீழ்ந்தாள். தன் கண்ணீரால் தந்தையின் பாதங்களைக் கழுவலானாள். பாணிகந்தா தன் மகளுக்கு ஆறுதல் மொழி கூறித் தேற்றினார்.

மறுநாள் காலை கல்கத்தாவுக்குப் புறப்பட ஏற்பாடாயிற்று. தன் இளமைப் பருவத்து நண்பர்களான பசுக்களிடம் விடைபெறச் சென்றாள். தன்னிடம் அநுதாபம் காட்டிவந்த அந்த ஜீவன்களை விட்டுப் பிரியப்போகிறோமே என்ற எண்ணம் அவள் கண்களிலே நீர்த் துளிகளை உண்டாக்கியது. பகுத்தறிவில்லா ஜீவன்கள்தான் என்றாலும் அவைகள் அவளின் வேதனையை உணர்ந்துகொண்டு பதிலுக்குக் கண்ணீர் சொரிந்தன. வெகு நேரம் அவைகளைத் தடவிக் கொடுத்துவிட்டுப் பிரியா மன

முடன் பிரிந்தாள் சுபா.

கல்கத்தாவிற்கு வந்த பிறகு ஒருநாள் சுபாவின் தாய் அவளை அழகுபடுத்திக் கொண்டிருந்தாள். அவளுக்குச் சடை பின்னி, நகை போட்டு அவளது இயற்கை அழகை மழுங்கச் செய்து, செயற்கை அழகை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள். சுபாவின் கண்களிலே நீர் பெருகியது. அவள் தாய், நல்ல நாளிலே இப்படி மூதேவி மாதிரி அழுகிறாளே என்று கடிந்து வசைமாரி பொழிந்தாள். மாப்பிள்ளை வந்தால் இன்னின்ன மாதிரி நடந்து கொள்ள வேண்டும் என்று நாடகத்திற்கு ஒத்திகையைபபோல் சொல்லிக் கொடுத்தாள். மாப்பிள்ளையும் வந்து சேர்ந்தார். பெண் பார்க்கும் படலம் தொடங்கியது. **கடவுள் என்ற உருவம் தனது பலிக்கு ஏற்ற பொருத்தமான ஜீவனை நாடி வந்திருப்பதாக எண்ணி நடுங்கிக் கொண்டிருந்தனர் சுபாவின் பெற்றோர்.** எங்கே இந்த ஜீவனை—அந்தக் கடவுளின் திருப்திக்காகத் தாம் கொடுக்கும் பலிப் பொருளை—ஏற்றது அல்ல என்று அந்தக் கடவுள் மறுத்து விடுகிறதோ என்று அவர்களுக்குப் பயம். வந்தவர் வெகுநேரம் ஆராய்ந்தபின் பெண் தனக்குப் பிடித்தம் என்றார். சுபாவின் கண்களிலே தோன்றிய நீரைக் கண்டு அந்த யுவன் 'பெண் மிகுந்த இளகிய உள்ளம் கொண்டவள் போலும்; தாய் தந்தையரைப் பிரிய வேண்டும் என்ற எண்ணம் அழுகையைத் தூண்டிவிட்டிருக்கிறது' என்று எண்ணலானார். அவளது அழுகையால் எங்கே காரியம் கெட்டு விடுகிறதோ என்று பயந்த அவள் தாய் தந்தையர் இதையறிந்து உள்ளுக்குள் சிரிப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

சுபாவுக்கு மணம் முடிந்தது. இரண்டாவது நாளே சுபாவின் தாய் தந்தையர் தம் ஊருக்குப் புறப்பட்டு விட்டனர். தம் மகளை



வேறொருவன் கையில் ஒப்படைத்த பிறகு இனி அவர்களுக்கு அங்கென்ன வேலை? அவர்கள் எண்ணம் கைகூடியது. அது பழுதாகு முன்னே நழுவிக் கொள்ள வேண்டாமா? ஒரு மகத்தான பொறுப்பினைத் தங்களிடமிருந்து அகற்றியதற்கும், குலத்திலிருந்து எங்கு சுற்றத்தார் ஒதுக்கி விடுவார்களோ என்ற பயத்தைப் போக்கியதற்கும் மனமார மகிழ்ந்தனர்.

சுபாவின் கணவன் நரேனுக்கு இங்கிலாந்திலே இந்திய அரசாங்கத்தின் அலுவலகத்திலே வேலை. ஆகவே நரேனும் சுபாவுடன் மறுநாளே புறப்பட்டு விட்டான்.

லண்டன் சென்ற அன்று இரவே சுபா ஊமைப் பெண் என அறிந்தான். அவன் மனம் எட்டிக் காயாகி விட்டது. அவளை ஏசவும், உதாசீனம் செய்யவும் தொடங்கினான். அவனை ஏமாற்றி விட்டார்க்களே என்று அவனுக்கு அடக்க முடியாத ஆத்திரம்; கோபம். தாயகத்திற்கே போய்விடுமாறு அடிக்கடி கத்துவான். சுபா நரேனின் கால்களைப் பிடித்துக்கொண்டு தன் கண்ணீரால் அவனது பாதங்களைக் கழுவித் தூய்மையானதாக்குவாள். நரேன் அவளை உதைத்துத் தள்ளி விட்டு அவள் பிடியிலிருந்து கால்களை விடுவித்துக் கொண்டு ஆபீசுக்குச் சென்றுவிடுவான். அவளுடன் அன்பொழுகப் பேசுவதே கிடையாது. பாவம் சுபா என்ன செய்வாள்? குற்றம் அவளுடையதல்லவே! அவள் யாரையும் ஏமாற்றவில்லை. ஏமாற்றும் எண்ணமும் அவளுக்குக் கிடையாது. தன் உண்மை நிலையைத் தன் கண்ணீர் மூலம் வெளிப்படுத்தினாள். அதை நரேன் வேறு விதமாகப் புரிந்துகொண்டால் அவள் என்ன செய்வாள்?

சுபாவின் வீட்டிற்கெதிரே தேம்ஸ் நதி சலனமின்றி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. நரேன் ஆபீசுக்குச் சென்று விட்ட பிறகு சுபா அந் நதிக் கரையில்போய் உட்கார்ந்து கொண்டு முடிவில்லாத் தன் உள்ளத்து வேதனையைத் தன் கண்ணீர் மூலம் வெளிப்படுத்தித் தேம்ஸ் நதியின் நீருடன் கலக்க விடுவாள். தேம்ஸ் நதியும் **அவள் கண்ணீரும்** இரண்டறக் கலந்து **கண்ணீர்த் துளிகளின் மகத்தான சக்தியை** உலகுக்கு எடுத்துக் காட்டுவதுபோல 'ஓ' வென்ற பேரிரைச்சலுடன் மகத்தான பிரளயமாகப் பெருக்கெடுத்துப் பழமைக் கறைகளை உடைத்துக் கொண்டு ஓடலாயிற்று.

❀


## மாணவர்களுக்கான நூல்கள்

| | |
|---|---|
| ஸ்ரீமகள் இங்கிலீஷ்-தமிழ் கையகராதி | 2 8 0 |
| ஸ்ரீமகள் தமிழ்க் கையகராதி | 1 8 0 |
| நீதிநூல் தொகை I | 1 8 0 |
| ,, ,, II | 3 8 0 |
| திருக்குறள் சிறப்புரை | 1 4 0 |
| திருக்குறள் (தீப்பெட்டி அளவு) | 0 8 0 |
| ராமுலு ஆங்கில ஆசான் | 1 8 0 |
| நேரு இந்தி ஆசான் | 1 8 0 |
| வீர பாண்டியன் கட்ட பொம்மன் | 1 0 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1**

**ப**சிக்கு உண்ணச் சோற்றுப் பருக்கைகள் மாத்திரம் போதும் என்றிருப்போர் பிச்சைக்காரர்களைத் தவிர்த்து மிகச் சிலர்தான் உண்டு.

சுகம் பெறும் எதிலேயும் மனிதன் மாற்றத்தையே விரும்புகிறுன்.

உறங்கிச் சுகம் காண்பவனும் இருக்கிறுன்—நடு இரவு வரை தூங்காமல் விழித்திருந்து சுகங் கண்டு, பின்பு தூங்குகிறவனும் இருக்கிறுன். ஊனே உண்டு உறக்கமின்றி ரயிலடி, பஸ் ஸ்டாண்டு, சினிமா—நாடகத் தியேட்டர்கள்—யாவற்றையும் சுற்றிச் சுற்றிச் சுகம் தேடி அலைகிறவனும் இருக்கிறுன்.

கையருகில் சுகம் கிடைக்க வகை இருந்தாலும் தூரத்திலே கிடைக்கும் சுகத்தை எட்டிப் பிடிப்பதிலே தான் மனிதனுக்குத் தீவிர ஆவல். மனிதன் வளருகிறுன்—பின்னர் மாற்றத்தையே விரும்புகிறுன் எத்துறையிலும், எல்லாக் கோணங்களிலும். ஏன் கனவு காண்பதிலே கூட இப்போது யாருமே வேழத்தை விரட்டியடிக்கும் பழைய காலக் காட்சியைக் காண விருமபுவதில்லையே. சினிமா ஸ்டார்களோடு பஞ்சணை சுகம் பெறுவது போன்ற கனவைத்தானே காண விரும்புகிருர்கள்!

இவ்வாறு எல்லாவற்றிலும் மாறுதல் அவசியமாகும்போது மனைவாழ்வுக்கு மாத்திரம் ஒரே வழிதான் இருக்க வேண்டுமோ? “ஏக பத்தினி விரதனுக இரு என்ருல் எப்படி நியாயமாகும்.”

இவை **சங்கரனின்** கருத்துரைகளாகும்.

* *


சிற்றூர்களில் விரோதம் என்றவுடனே **கொள்ளிக்கட்டை ஏந்திக் கோயில்களிலும்** வைக்கோற் போர்களிலும் தீயிட்டால் தண்டனை தவருது என்பது சரியானுல் திரிபுரம் எரித்த சங்கரனிடம் நியாயம் கேட்க வேண்டாமா? தண்டனை தான் வேண்டாமா? அதுபோலவே நமது சங்கரனுடைய தத்துவத்தையும் வாழ்வின் நடைமுறையையும் நிச்சயமாகக் கண்டிக்கக் கூடாது. நியாயமும் கேட்க முடியாது. அப்படி யாராவது நியாய அநியாயம் பற்றி விரிவுரையாற்றினுல் “உடம்பில் பாதியைப் பார்வதிக்கு வழங்கி உமையொருபாகனுக வீற்றிருக்கும் சிவனுர் சடைமுடியில் கங்கையையும் ‘அடிஷனலாக’ வைத்துக் கொள்ளவில்லையா? இது பெரும் ஆக்கிரமிப்பு என்று முறையிடத் தேவலோகத்தில் என்ன ஐ. நா. சபையா இருக்கிறது. இந்த லட்சணத்தில் என் செய்கையைக் கண்டிக்க வந்துவிட்டீரே,” என்று கிண்டல் செய்வான் அவன்.

யார் வீட்டில்தான் இட்லி தோசை போடாமல் இருக்கிருர்கள, வயிற்றுக்கே வழியில்லாதவர்களைத் தவிர? பின்பு ஏன் ஹோட்



# பிடி சாம்பல்

விருதை, ந. இராமசாமி



டல்கள் யாவும் தேன் கூடுகளாகத் தோன்றுகின்றன? இதுதான் உண்மை; மனிதன்தான் நாக்கும் கரமும் நீண்ட பிராணி.

வீட்டரசி தனத்தினிடம் வேண்டா வெறுப்பாக நடக்கிறானா? இல்லை. பேச்சில் குறைச்சலில்லை. பேணுவதில் பேதமில்லை. செய்கைகளிலும் சிறிதளவு கூடத் தளர்ச்சி கிடையாது. 'பேசாத பேரின்ப லீலை,' இங்கேயும் உண்டு ஒவ்வொரு இரவிலும்.

இருப்பினும் அவனுக்கு 'வெளி உலகத்து வேல்விழி மாதரின் விரிந்த வலையும்' தேவைப்பட்டது. தவிர்க்க முடியாது நீண்டு கொண்டே இருந்தது அவனது பிரயாணம்.

* *

ஊரிலே பெரிய இடம்—உரமேறிய பொருளாதார வசதி—எனவே அம்பலவாணருக்குப் பெரிய லேவாதேவிக்காரர் என்ற பட்டம். அவருடைய திரண்ட செல்வத்தைக் கட்டி ஆள்வதற்கு வருங்கால வாரிசு இல்லாமல் ஏங்கினார். பிள்ளைக் கலி தீர்க்க ஒரு மகவு வேண்டுமே; அந்தச் சுய தேவை முதல் மனைவியின் மூலம் நிறைவேறப் போவதில்லை என்று எண்ணி வருந்திக் கிடந்த வேளையில்தான் முதல் மனைவி முத்தம்மாள் திடீரென்று இறந்து போனாள். நாகரிக மிக்கவளாகவும் கவர்ச்சிகரமான பெயருடையவளாகவும் தேடிப் பார்த்துத் திருமணம் புரிந்து கொண்டால் 'பிள்ளைப்பேறு' தவறாமல் கிடைக்கும் என்று கருதினாரோ என்னவோ ரஞ்சிதம் என்ற அசல் நாகரிக யுவதியை மணந்து கொண்டார். பணம் பக்கமேளம் வாசிக்கும்போது ரஞ்சிதம் மட்டுமென்ன, படித்துப் பக்குவம்

பெற்ற இளம் மாணவியர் படையையே உரிமையாக்கி விட முடியுமே.

ஆரம்பத்தில் அம்பலவாணர் கூட அக மகிழ்ந்துதான் வாழ்ந்தார் இப்படிப்பட்ட அழகான பெண்ணொருத்தி மனைவியாக வாய்த்தாளே என்று. அவள் இங்குமங்கும் நடமாடும் ஓவியமாக உலவியதைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தார். ஆனல் அந்த ஓவியத்தைத் தொட்டு உணர்ந்து உணர்ச்சி வயமாகி உலகை மறக்கும் 'போதை' தற்போது இல்லாமல் போயிற்றே என்று முயன்று அறிந்துகொண்ட பிறகு 'கொட்டாவி' விடுவதைத் தவிர வேறு வழி. தன் உடல் தினவு வெறும் 'சோடா கேஷ்' என்பதை வெளியில் கூற முடியுமா வெட்கமின்றி. இந்த ஏக்கமோ அல்லது துக்கமோ அவர் கூனிக்குறுகிப் போய் விட்டார். ஒருநாள் அந்த வயதான உயிர் அவரையும் ஏமாற்றிவிட்டு எங்கோ ஓடி விட்டது. அம்பலவாணர் மாண்டார். இனி ரஞ்சிதம் இளம் விதவை.

ஆனல் கணவனேயிழந்த 'கைம் பெண்' என்பதற்காக இயற்கை அழகைச் சிதைத்துக் கொள்ள அவளது சிந்தை இடந்தரவில்லே. மாருக இயற்கை அழகுக்குச் செயற்கை அலங்காரத்தை இன்னும் எவ்வாறெல்லாம் கூட்டிக் கொள்ளலாம் என்பதிலேயே கவனமாக இருந்தாள்.

* *

அம்பலவாணரிடம் வட்டிக்குக் கடன் வாங்கி, வாழ்வின் 'பற்றுக் குறைப்' பட்ஜட்டை 'லெவல்' படுத்தும் வாடிக்கையான புள்ளிகளுள் சங்கரனுமொருவன். அம்பலவாணர் பரலோக வாசியான பிறகு 'கடன் கொடுப்பார் இனி



## இதை நம்புங்கள்!

திருவள்ளுவரின் திருக்குறளே தமிழ் நாட்டிற்குப் பெருமையளிக்கிறது. தமிழனுக்குத் தனிச் சிறப்பையளிக் கிறது. அந்த உண்மையை நாம் உணர்ந்திருக்கிறோம். வள்ளுவர் வாக்கின் பெருமையை உலகோர் அனைவரும் உணர வேண்டுமென்பதே நம் ஆவல். குறளின் பெருமையினை அறியாதார் தமிழ் நாட்டில் இருக்க முடியாது. நல் வாழ்வு வாழ வள்ளுவர் வகுத்திருக்கும் வழியினை மக்கள் எல்லோரும் தெரிந்து கொண்டு அதனைக் கடை பிடித்து நிற்கச் செய்வது நமது கடமை. குறளைப் பற்றிய புத்தகங்களுக்கு குறைவில்லை. ஆனால் புத்தகங்கள் இருந்து மட்டும் போதாது. குறளை நன்றாக ஆராய்ச்சி செய்து அதன் உண்மைகளை அழகாக எடுத்துச் சொல்லக்கூடிய நாவன்மை படைத்தவர்களைத் தெரிந்தெடுத்துப் பல இடங்களிலும் பேச ஏற்பாடு செய்ய வேண்டும். புதைந்து கிடக்கும் உண்மைகளை அப்படி எடுத்துச் சொன்னால் படிக்க நேரமில்லாதவரும், படிக்கத் தெரியாதவரும் பயனடைவர். எத்தனையோ கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் போடுகின்றோம். குறள் விரிவுரை கூட்டங்களும் நிறைய நடத்த வேண்டும். நம் நல்ல காலம் நாட்டில் மக்களிடைப் புது உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

—முதலமைச்சர் காமராசர்

யாருமில்லையே,' என்று கவலைப்பட்டானா? இப்போதுதான் அவசியமில்லா விட்டாலும் அடிக்கடி பண்ணை மாளிகைக்குச் சென்று கடன் கேட்டு வாங்க வேண்டுமென்ற துணிவு அதிகமாயிற்று அவனுக்கு. ஏன்? அங்கே கடன் தருபவள்—வருபவர்க்கெல்லாம் பேட்டி கொடுப்பவள் ரஞ்சிதமல்லவா! கடன் என்ற காரணங் காட்டிப் போவது—சந்தர்ப்பம் கிட்டும்போது வலையை வீசுவது இது அவனது திட்டம். ஆனால் அந்தத் திட்டம் நிறைவேறும் அவசியம் ஏற்படவில்லை அவனுக்கு. வலையும் வீசும் திறமையும் ஆடவர்க்கு மட்டுமா உரித்தானது? ரஞ்சிதமே முந்திக் கொண்டாள். வலையை வீசினாள் திறமையோடு. அவள் அருந்தும் மோர்ச் சாதத்திற்கு அவன் ஊறுகாய் ஆக்கப்பட்டான்.

தனத்திற்குக் கிடைத்ததோ வெறும் சோறு—ரஞ்சிதத்திற்கு வாய்த்ததோ தொடுகறியோடு சாப்பாடு. 'அண்டாப்பானை' நம்மிடமிருக்கும்போது, அன்றாடம் ஒரு செம்புத் தண்ணீரைத் தர்மம் செய்வோமே என்ற கருத்து சங்கரனுக்கு. தாக சாந்தி செய்வது புனிதமானது; அதுவும் இந்தச் 'சம்மர் வெக்கேஷனில்' எவ்வளவு பெரும்புண்யம். நிலைக்கண்ணாடியில் தானே தன் 'ஹார்லிங் ஹேர்' முடியைப் பார்த்துப் பூரிக்கும்போது 'உளம் கனிந்து உருகுகிறேன் சங்கர். ஓடி வா!' என்று ரஞ்சிதம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதைக் குற்றமெனக் கூறலாமா? எந்நேரமும் கையில் புகையும் சிகரெட்—நறுக்கு மீசை—ஓரக்கண் பார்வை—போதாதா இவை. அவனும் ஒரு பக்கத்துச் சேலை முந்

தானே சரிய. ஓரக்கண்ணால் பார்க்கும்போது.........

*　　*

அவனொரு சாதாரண அரிசி மில் தொழிலாளி. மாதத்தின் கடைசி வாரத்தில் அரைப் பட்டினியோடு போராடுவதுதானே தொழிலாளர் வாழ்க்கை. இந்தக் கடைசி வாரக் குமுறல் ஏற்படாமல் அவனுக்கு ரஞ்சிதம் உதவுவது வாடிக்கை. அந்த அரிசி மில்லும் அவளுக்குப் பாத்தியப்பட்டது. எத்தனையோ தொழிலாளர்கள் அங்கு பாடுபடுகிறார்கள். அவர்களெல்லாம் ரஞ்சிதத்திடம் கெஞ்சிக் கூத்தாடிக் கடன்தானே வாங்க முடியும். ஆனால் சங்கரனுக்கு வழங்கிய கரன்சிகள் கடனல்ல, அன்பளிப்பு. அதனால் அவனது தோற்றம்—நடையுடை பாவனை எல்லாம் ஏற்றங் கண்டது. சங்கரன் கரன்சிகளை மட்டுமல்ல அவளுடைய கட்டுடலையே ஏற்றுக் கொண்டான். 'அண்டங் காக்காய்' மாதிரி எத்தனையோ அவதாரங்கள்! இவர்கள் யாவரும் இரவில் உறங்கியே காலம் கழிக்கிறார்கள் என்று அர்த்தமா? இவர்களும் இரவை இன்பச் சுரங்கமாக ஆக்கிக் கொண்டவர்கள்தான். உண்மையை அப்பட்டமாகக் கூறுவதாயின் இவர்களே இரவில் அதிக நேரம் தூங்காதவர்கள். கருப்பு என்றால் வெறுப்புக் கொள்வதும் விவேகமல்ல. ரஞ்சிதம் மட்டுமென்ன, கருங் காக்காய்தான். ஆனால் கட்டான மேனிக்கு—கரு விழிகளின் கூர்மைக்கு இவ் வுலகையே ஈடு கொடுத்தாலும் போதாது,' என்றல்லவா எண்ணினான் சங்கர். ஆம்! கருப்பு நிறத்தில்தான் கவர்ச்சியுமதிகம்.

## இதை நம்பாதீர்கள்

இந்து சமயத்தின் அறநூல்களில் கூறப்பட்டுள்ள கர்ம விதி என்ற தத்வங்கள் முழுமையும் மாறுதல் இல்லாமல் குறளில் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கர்ம விதி என்பது தமிழில் ஊழ் எனப்படும். மனிதனின் சிந்தனைகள், ஆசைகள், செயல்கள ஆகியவை எல்லாம் ஒன்று சேர்ந்து அவனுடைய அடுத்த பிறவியின் நிகழ்ச்சிகளுக்கு ஆரம்ப காரணமாக நிற்பவை என்பதே கர்ம விதியின் கோட்பாடு.

குருட்டு அதிர்ஷ்ட மென்று சாதாரணமாக கருதுவதோடு கர்ம விதி அல்லது ஊழையும் ஒன்றாக கருதி விடக்கூடாது. ஒரு பிறவியில் ஏற்படும் நல்ல அதிர்ஷ்டங்கள் துரதிர்ஷ்டங்கள் அனைத்தையும் முந்திய ஜன்மங்களில் செய்த முயற்சியின் பயன்கள் என்று கர்மத்தைப் பற்றிய இந்து சமயக் கொள்கை விளக்கும். மனிதர்கள் தங்களுடைய செயல் ஒவ்வொன்றுக்கும் நியாயமாகவும். இயற்கையாகவும் ஏற்படும் பயனை அடைந்து அதனபடியே தங்கள் சுபாவத்தையும் நோக்கங்களையும் அமைத்துக் கொள்கின்றன. கர்ம விதி கடுமையான நீதிதான். அது தவறுவதே இல்லை ஆனால் ஒரே வாழ்க்கையின் நன்மையும், தீமையும் மரணத்தோடு விடுவதில்லை.

—ஆச்சாரியார்

உயிரையும் இழக்க அஞ்ச மாட்டாள். ஆனால் உடைமையை மாற்றாருக்குக் கொடுக்க உள்ளம் ஒப்புவாளா தமிழ் மகள்.

மில்லுக்குப் போகிற நேரம் தவிர மற்றப் பொழுதெல்லாம் முகாமிட்டான் பண்ணை மாளிகையில். மோக வெறிக்குமொரு அளவு வேண்டாமா? சர்வ சதாவும் ரஞ்சிதத்தோடு கொஞ்சிக் குலாவுவது என்றால் உடைமைப் பட்ட பெண்மை உள்ளம் உருக்குலையாதா? தாங்க முடியாமல் தவித்தாள் தனம். 'ரஞ்சிதமோ பணக்காரி—தேகத்தில் தெம்பு தேவையான அளவு இருக்கும். தன் கணவரோ எளியவர்—உழைப்பால் உடல் தேய்ந்திருக்கும். எனவே அவள் திமிருக்காகத் தன் கணவரின் உடம்பு இளைத்துச் சருகாகி உதிர்வதா?' இப்படி நினைத்து நினைத்து நெஞ்சுருகினாள் தனம், பாவம்!

தாய்க் குலம் எல்லாவற்றிலும் தாராளமே. தளராத உறுதியுங் கூட. ஆனால் இல்லற வாழ்வின் 'துருப்புச் சீட்டு' மட்டும் ஏக போக உரிமையாய்த் தன் கையிலேயே இருக்க வேண்டுமென்பதை எந்தப் பெண்ணும் விட்டுக் கொடுக்க மாட்டாள்.

செத்தும் சாகா நிலையில்—இருந்தும் இன்பம் இல்லா நிலையில்—எத்தனை நாட்களுக்குத்தான் ஏங்கியிருக்க முடியும்.

அதற்காகக் கணவனை நிந்தித்தாளில்லை. நயமாகவே பேசிப் பார்த்தாள்—சினந்தாளில்லை, செயலில் இதமுடன் நடந்து காட்டினாள்—தனம். வீட்டுச் செலவைச் சிககனமாகவே செய்து மாதம் தோறும் பற்றாக்குறை ஏற்படாமல் மீதமிருக்குமாறு இல்லறத்தை நடத்திக் காட்டினாள். இன்பம் என்ற சரக்கைப் பெற்றுக்கொண்டு 'ரேட்'டாகத் தரும் பணம் அவசியமில்லை எனத் தெளிவாக்கினாள். ஆனால் காலம் கடந்த முயற்சி இது. இப்போது ரஞ்சிதம் தேன்—அதனுள்ளே மூழ்கி ஆழ்ந்து விட்டவன் சங்கர்.

* *

கூடிய விரைவில் பண்ணை மானேஜராகப் போகிறான் எனும் பேச்சு பலமாக அடிபட்டது ஊரெங்கும்.

ஒருநாள் நேரடியாகவே நின்று அவனைப் போக விடாமல் வழி மறித்தாள் தனம். முறையிட்டால் இது நியாயமாவென்று, அவன் கூறிய சமாதானம் விசித்திரமாக மட்டுமல்ல, அவள் சித்தத்தையே சிதற அடித்து விட்டது.



> மகளிர் கூட்டத்தாருக்கு மாசு கற்பிப்போர் ஆடவர் மட்டுமல்ல...
>
> அவர்களுக்கு மத்தியிலும் பெண்ணுருவில் சில காளான்கள் முளைத்து விடுகின்றன.
>
> தனம் மாதர் குல மாணிக்கம்—ரஞ்சிதம் மங்கையர் வர்க்கத்தைக் கெடுக்கும் மாசு.

"என் நன்மைக்கு மட்டுமா போகிறேன். நமது குடும்ப நன்மைக்காகவும்தான். போன மாதம் உனக்கு 'நெக்லஸ்!' இந்த மாதம் பனாரஸ் சேலை!! எப்படி வாங்கினேன்? ரஞ்சிதத்தின் அன்புக் கரங்களில் மிதக்கிறேன். ஏதோ சிறிய உழைப்பு. பிரதி உபகாரமாகக் கிடைப்பதோ மேல் வருமானம். நான்தான் வருங்கால மானேஜர். இந்தச் சுகபோக வாழ்வை வேண்டாமென வெறுப்பதா?" என்று ஆணித்தரமாகப் பேசினான் சங்கரன்.

"ஆனா ஒண்ணும் மட்டும் மறந்திடாதீங்க. பண்ணையம்மா பழக்கம் உங்க உடம்பைக் கெடுக்கிற—உயிரைக் குடிக்கிற விஷம்," என்று வேண்டிக் கொண்டாள் தனம்.

"புரியாமல் பேசுகிறாய் தனம். புலம்பாதே. பெருமைப்படு. நம்ம வீட்டுக்காரருக்கு நல்ல கிராக்கி இருக்கிறதே என்று பெருமைப்படு."

—என்று கூறி தடுத்த கரத்தை உதறித்தள்ளி விட்டுப் போய் விட்டான்.

அவளுக்கு உலகமே இருளாகத் தோன்றியது. வாழ்வு சூன்யமாகி விட்டதாக உணர்ந்தாள். மாற்றாளின் மஞ்சத்திற்கு மணவாளனை அனுதினமும் அனுப்பி விட்டு மனம் வெதும்பி வாழ்வதா? இதுவுமொரு வாழ்வா? வீறிட்டுக் கதறினாள். வேதனை தாள முடியாமற் துடித்தாள். ரிஷி பத்தினிகளின் உருவங்களையெல்லாம் 'தபோ வலிமையால்' தோற்றுவித்து கணவனோடு கூடி அவனுடைய ஆசையைப் பூர்த்தி செய்து வைத்த அக்கினி பகவானின் மனைவியல்லவே தனம்! அந்த மென்மையான உள்ளம் வெடித்தது. விளைவு? பிறருக்குப் பாதகமில்லை அதனால். ஒரு பாட்டில் கிரோஷின் ஆயிலுக்கு ஒரு சேலைக்கு—ஒரே ஒரு நெருப்புக் குச்சிக்கு நஷ்டம். அவ்வளவுதான். பற்றி எரியும் நெருப்பு வீட்டின் முகட்டைக் கிழித்து வெளி வருவதைக் கண்ட அக்கம் பக்கத்தார் விரைந்தோடிச் சென்று கதவை உடைத்து உள்ளே நுழைந்தார்கள். அங்கே தனம், நெருப்பாகிக் கிடந்தாள். சதைகளின் ஈரமும் தீயினால் தீய்ந்து விட்டது. இப்போது எலும்புக்கூடு மட்டும் விறகுக் கட்டைகளாகக் கனல் பெருக்கி எரிந்து கொண்டிருந்தது. இன்



னும் சற்று நேரத்தில் நீர்பூத்த சாம்பலாகி விடும். இனிமேல் தனம் என்னும் பெயருடைய அந்த அனபு உருவததைக் காணவே முடியாது—உருவாக்கவும் இயலாது. சுற்றி நின்ேறார் அடுத்து ஆகவேண்டிய கர்மத்தில் ஈடுபட்டனர்.

தகவல் கிடைத்தவுடன் ஓடோடியும் வந்தான். அங்கே என்ன இருந்தது பார்ப்பதற்கு? வெறும் சாம்பலைத்தான் வெறிக்க, வெறிக்கப் பார்த்துக் கொண்டே நின்ருன்.

*   *


**திருமணப் பரிசுக்குரிய அரிய நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| தம்பதிகள் சுகமாய் வாழ்வதெப்படி? | 3 | 12 | 0 |
| திருக்குறள்—பரிமேலழகர் உரை | 5 | 0 | 0 |
| திருக்குறள் சிறப்புரை | 1 | 4 | 0 |
| முல்லைக்காடு | 0 | 8 | 0 |
| நல்ல பெண்மணி | 2 | 4 | 0 |
| இன்ப நிலா | 1 | 0 | 0 |
| புது வாழ்வு | 1 | 0 | 0 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 | 12 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1**


பண்ணை மாளிகையின் செல்வாக்கு! தனத்தின் தற்கொலைக்கும்—சங்கரனுக்கும் சம்பந்தமில்லாமல் ஆக்கியது. எவ்வித இடையூறுகளையும் அனுப்விக்காமல் நழுவி விட்டான் அவன்.

*   *

'இறைத்த கிணறு ஊறும்,' என்பது பழமொழியாக இருக்கலாம். அதே நேரத்தில் 'அளவுக்கு மீறினல் அமிருதமும் நஞ்சு,' என்ற மற்ருெரு பழமொழியும் எதிர்வாதம் செய்வதை மறக்கலாமா? ஊற்றின் அளவை உணராமல் தேவைக்கும் மிஞ்சி அள்ளிக் கொட்டினல்...பிறகு தட்டுப்பாடு வரத்தானே செய்யும்!

இரத்தக் குறைவு ஏற்பட்டால் உற்சாகம்—உரம்-எல்லாம் கெட்டு விடும். முதலில் ஜலதோஷம் போலத் தோன்றியது. நாளடைவில் இருமலாக மாறிற்று. டாக்டர் பரிசோதனை செய்தார். சோதனையில் கண்ட சரியான முடிவு... டி. பி! இப்போது நம் நாட்டில் சர்வசாதாரண நோயாகப் பரவி வரும் காசநோய்.

அட்சய பாத்திரமும் வற்றி விட்டது. இனி ரஞ்சிதத்திற்கு ஊட்டமளிக்க உரமேது அவனுக்கு. கம்யூனிசத்தை அமெரிக்கா வெறுப்பதுபோல காசநோயை அவள் வெறுத்தாள். எனவே டாலர் உதவியை முன்னறிவிப்பின்றி நிறுத்தி விட்டாள். நேற்றுவரை சங்கரனுக்கு டாலர் மாளிகை வாசம், இப்போது காசநோய் விளைவித்த நாசத்தால்...?

டப்பாவில் பெருங்காயம் இருந்தால்தானே! ஆண்டுக் கணக்காகப் பெருங்காயம் இருந்த டப்பாவில் வாசனை இருக்கலாம். அதனல் பலன் உண்டா? காற்ருேடு கலந்து

மறையும் வாசனை போன்ற ஆசை இருக்கலாம் அவனுக்கு. ஆனல் சக்தி வேண்டுமே என்பதுதான் ரஞ்சிதத்தின் கேள்வி. யாராவது 'எம்டி' டப்பாவை வைத்துக் கொண்டு அழுவார்களா என்ன என்று பகிரங்கமாகவே கேட்டாள் அவள். மயிலேக்காளேக்கு வலுவுள்ளவரை மதிப்புதான். இப்போது சக்தியிழந்து கட்டிற்கு உதவாது என்ற நிலேமை ஏற்பட்ட பிறகு கழிநீர்த் தொட்டியைக்கூடக் காட்டக் கூடாது என்பது அவளுடைய அனுபவ உண்மை. மற்ருெரு காளேயை வாங்க வேண்டியது தானே! கல்லூரிக் காளே **கனக சுந்தரம்** அல்லவா இப்போது ஏர்க்காலில் கழுத்தைக் கொடுத்திருக்கிருன். இளேஞன்—திடங்தோள் வீரன். இவனுடைய இளமை வேகம் இன்னும் சில ஆண்டுகட்குப் போதுமானதே. ஆனல் ரஞ்சிதம் என்ன என்றென்றும் இளமை நீங்கா எழிலரசியா? இல்லே தேவாமிர்தம் உண்ட தேவ கன்னிகையா? அவளும் கரைந்து கொண்டுதான் வருகிருள். இருந்தாலும் அவளுக்குத் தேவையான பாத்திரம் மாத்திரம் இளமை குன்ருு ஆணழகனக இருக்க வேண்டுமென்பதைத் தான் அவ்ளது இரண்டாவது செலக்ஷனை கனகசுந்தரத்தைக் காணும்போது புலனுகிறது. ஆமாம்! பழைய தகர டின்னே சக்தியுள்ள கரம் தட்டினல் ஓசையில் கூட இனிமை இருக்குமல்லவா!

* *

ஒரு நாள் எங்கெங்கோ சுற்றி அலேந்து விட்டு மாளிகைக்கு வந்தான். அங்கே தனி அறையொன்றில் ரஞ்சிதமும் கனக சுந்தரமும் சின்னஞ் சிறு சிருர்கள் போல விளேயாடிக் கொண்டிருந்தனர். சாவித் துவாரத்தின் வழியாகப் பார்த்தான். கண்டு களிப்படையும் காட்சியா அது? அவன் மடிமீது தலேயைக் கிடத்திப் படுத்திருந்தாள் அவள். மெல்லிய கன்னங்களே மெள்ளக் கிள்ளினுன்—அவள் துள்ளினுள். உடனே துள்ள விடாமல் குப்புற விழுந்து அவளே அமுக்கிக் கொண்டான். இந்தக் காட்சியைக் காணும்போது உள்ளம் குளிருமா? குமுறினுலும் பலன் என்ன? கதவில் முட்டிக் கொண்டான். சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து ஓடி வந்தாள் ரஞ்சிதம்.

கதவைத் திறந்தாள். சங்கரனேக் கண்டாள். 'சே. உன் தொல்லேயே பெரிய தொல்லேயாப் போச்சு. என்ன வேணும்?" என்று கேட்


# இலக்கிய நூல்கள்

| | | ரூ. அ |
|---|---|---|
| திருக்குறள் பரிமேலழகர் உரை | | 5 0 |
| திருக்குறள் விளக்கவுரை | ... | 3 8 |
| திருக்குறள் சிறப்புரை | ... | 1 4 |
| திருக்குறள் மூலம் | ... | 0 8 |
| விவேக சிந்தாமணி மூலமும் உரையும் | ... | 0 8 |

**ஸ்ரீமகள் கம்பெனி**

சென்னே—1




டாள் ஆணவத்தோடு. ஏதோ பேச வாயைத் திறந்தவன் மறு கணம் கரங்களால் வாயை ஓங்கி அடித்து மூடிக் கொண்டான். ஒரு ரூபாய்த் தாளை எடுத்து அவன் மீது வீசியெறிந்து விட்டு "இன்று முதல் உனக்கு இங்கு சாப்பாடு கிடையாது. வெளியிலே போய்ச் சாப்பிடு," எனக் கட்டளையிட்டாள்.

அந்த ஒரு ரூபாயைக் கையிலெடுத்தான். அது அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பது போலப் பிரமை தட்டியது. ஒருவிதமான அதிர்ச்சி ஏற்பட்டது. தலை சுழன்றது. நிலை தடுமாறினன். பயங்கரமாகச் சிரித்தான். அதற்கு மேல் அங்கு நிற்க முடியவில்லை அவனல். அங்கிருந்து விரைந்தான்.

## காட்டுக்குச் சென்ருலும் விடாது!

இவ்வுலக வாழ்வைத் துறந்து காட்டிற்குச் சென்ருலும் அங்கும் இக்காதல் கிளர்ச்சி இளைஞர்களை விடாது. ஏனெனில், அது மலர்கள் தோன்று மிடமாகவும், பறவைகளும், வண்டுகளும், கூடுமிடமாகவும் இருக்கிறது. காதலர்களின் இரகசியங்களைக் கிளரவல்ல அந்தரங்கமான மூலைகள் பல அங்கு மிளிர்கின்றன. மாலதி மலர்களை முத்தமிடும் நிலவொளியானது, ஒரு காதல் அதாக ஆழ்ந்த பொருளோடு அமைந்திருக்கிறது. ஆனல் அதை அறிபவர்கள், ஐம்பது பிராயத்துக்கு மிகக் குறைந்தவர்களே.

—நாகூர்.

லொக் லொக் என்ற இருமல் தொடர்ந்து ஹிருதயத்தை முட்டிட—வாயிலிருந்து ரத்தம் கொட்டிட—ஓடினன்.

அவன் எதிரிலே அந்தப் பழைய வீடு பாழடைந்து கிடந்தது. அங்கே தனம் பேயாக நடமாடுகிருள் என்ற பீதி எவருமே குடியிருக்க வரவில்லை. அவ் வீட்டை எறிட்டுப் பார்த்தான். பலமான ஒரு இருமல். குபு குபுவென ரத்தம் கக்கினன். எதையாவது அள்ளி வாயில் போடலாம் எனும் துடிப்போ அல்லது ஹிருதயத்தின் வெடிப்போ—மிரள மிரளச் சுற்றிலும் பார்த்தான்.

சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்தான்—பிரித்தான். அதிலிருந்ததை உள்ளங்கையில் கொட்டினன். ஒரு பிடி அளவுதான். அன்று பிணமானளே தனம்—அவளுடைய சாம்பல்தான்! ஏனே அன்று அந்தப் பிடி சாம்பலை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்தான். அப் பிடி சாம்பலை மீண்டும் உற்று நோக்கினன். "பண்ணையம்மா பழக்கம் உங்க உடம்பைக் கெடுக்கிற—உயிரைக் குடிக்கிற விஷம்," இவ் வாக்கியத்தை மீண்டும் நினைவுபடுத்திப் பிடி சாம்பல் பேசுவதாக உணர்வு கொண்டான். மற்ருெரு பயங்கரமான இருமல். பிணி தீர்க்கும் மருந்து என்ருே வியாதி போக்கும் 'மந்திர விபூதி,' என்ருே நிச்சயமாகக் கருதியிருக்க மாட்டான். ஏனேவொரு இறுதி ஆசை! அந்தப் பிடி சாம்பலை அப்படியே வாயிலே கொட்டினன்—விழுங்கினன். கடைசி இருமல்—ரத்தப் பெருக்கு—அவ்வளவுதான். கீழே சாய்ந்தான்.

❀

# இராமன் நிகழ்ச்சி

[தி. மு. குலசேகரன்]

விஞ்ஞானி சர். சி. வி. இராமன் கண்ட ஆராய்ச்சி உண்மைதான் 'இராமன் நிகழ்ச்சி.'

கடல் நீரின் நிறம் ஒருபொழுது இராமன் உள்ளத்தைக் கவர்ந்தது. கடல் நீர் எப்படி நிறம் பெற்றது என்ற கேள்விக்கு விடைகாண விவேகமான ஆராய்ச்சி செய்தார்.

நீருக்கு நிறமில்லைதான். ஆனால் சூரிய ஒளி நீரிற் பாயும்போது, நீர் ஒரு குறித்த நிறத்தை அடைகிறது. இதற்குக் காரணம், 'ஒளிச் சிதறல்' என்னும் விளைவு. நீரில் உள்ள கூட்டணுக்கள், சூரிய ஒளியைச் சிதறச்செய்கின்றன. எனவே ஒரு குறித்த நிறத்தை மட்டும் அப்போது ஏற்கின்றன என்ற உண்மையைக் கண்டறிந்த பிறகு, இராமன் ஒளிச் சிதறலைப் பற்றித் தீவிரமாய் ஆராய்ந்து ஒரு பெரு நிகழ்ச்சியைக் கண்டார். அதுதான் 'இராமன் நிகழ்ச்சி.'

குறித்த பண்புகளை உடைய ஒரே வகைக் கிரணங்களை இராமன் ஒரு குறித்த திராவகத்தினுள் செலுத்தினார். திராவகத்தினின்று வெளிக் கிளம்பிய கிரணங்களைச் சோதிக்கப்புகின் அவை வேறுபட்டுக் காணப்பட்டன. இந்த மாறுபாட்டுக்குக் காரணம் அத் திராவகத்திலிருந்த கூட்டணுக்களே ஆகும். அந்தக் கூட்டணுக்களே திராவகத்தினுட் புகுந்த கிரணங்களைச் சிதற அடித்து, கிரணங்களின் பண்புகளையும் மாற்றிவிடுகின்றன. ஆகவே இதுவும் ஒளிச் சிதறலே ஆகும் என்ற விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்ததார். நிகழ்ச்சி' என்று பெயர் பெற்றது.

குறித்தவிதமாய் அமைக்கப்பட்ட கூட்டணு, குறித்த பண்புகளையுடைய கிரணத்தைத் தன் அமைப்பிற்கு ஏற்றவாறு சிதற அடித்து, குறித்த மாறுபாட்டை அக் கிரணங்களில் ஏற்படுத்துகின்றது என்ற இராமன் நிகழ்ச்சியின் முக்கியத்துவம், இரசாயண ஆராய்ச்சிக்கோ ஒரு ஊன்றுகோல் போன்று விளங்கியது. குறித்த பண்புகளை உடைய ஒரேவகைக் கிரணங்களினால் ஏற்பட்ட குறித்த மாறுபாட்டைக் கொண்டு திராவகத்திலுள்ள கூட்டணு எத்தகைய அமைப்பைப் பெற்றுள்ளது என்பதைக் கண்டறிய முடியும். இது காரணம் பற்றியே 'இராமன் நிகழ்ச்சி' உலகெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## மறு பெயர்

காதல் என்பது வேறொன்றும் அல்ல! புரட்சியின் மறு பெயர்

—காண்டேகர்.

## உணர்ச்சியே அல்ல!

காதல் உடலைப்பற்றிய உணர்ச்சியே அல்ல! அழகை மட்டும் ஆசிப்பதல்ல! நிறத்தைக் கருதி நிற்பதும் அல்ல! ஆண்மையை எண்ணி இருப்பதும் அல்ல.

—நாமக்கல் கவிஞர்

## இன்ப நோய்!

காதல் என்பது உள்ளத்தை உருத்தும் மலர். ஈயத்தால் செய்யப்பட்ட மெல்லிய சிறகு! பிரகாசமான மூடுபனி! குளிர்ச்சி பொருந்திய பெருந்தீ! இன்ப நோய்! விழித்துக் கொண்டே தூங்கும் தூக்கம்

—ஷேக்ஸ்பியர்.

# இதுதான் வினையோ



கோவி. மணிசேகரன்

மனிதன் ஒன்றின்மேல் நம்பிக்கை வைக்கிறான்; அதன் காரணமாக நன்மையும் பெறுகிறான். நம்பிக்கையே அவன் வாழ்க்கை நலத்தையும் உயர்த்தச் செய்கிறது.

நம்பிக்கையற்ற நடமாடும் மனித உருவங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவர்கள் முகத்தில் எப்போதுமே ஜீவக்களை இருப்பதாகத் தெரியவில்லை. ஏன், வாழ்க்கைக்குத் தேவையான அன்றாட காரியங்களைக்கூட அவர்கள் கவனிக்க மறந்து விடுகின்றனர். நம்பிக்கையற்ற அந்த மனக்குழப்பமே அவர்களை, எல்லாக் காரியங்களுக்கும் தடைசெய்கிறது; தோல்வியிடமும் தோழமைக் கொள்ளச் செய்கிறது.

'நம்பிக்கையே கண்கண்ட தெய்வம்' என்று நாளைக் கடத்திவரும் நல்லவர்களுள், ஒருவர்தான் போலும், நாகலிங்க சுவாமிகள்!

பழுத்த உடலைப் பக்குவப்படுத்தி, காலத்தை நல்ல வழிகளில் கரைத்துவரும் நாகலிங்க சுவாமிகளின் பூர்வீகம், வில்லியனூர் வாசிகளுக்கு இதுவரையும் தெரியாது—தெரிந்து கொள்ளவும் முடியவில்லை. காரணம், அவர் மக்களிடம் பேசுவதே வானத்துச் சூரிய மண்டலம்!

சூரியமண்டலம் எப்போதுமே தோன்றாது; தோன்றினாலும் அதிக நேரமா நீடிக்கும்?

வில்லியனூர், புதுவைக் கடுத்துள்ள ஒரு சிறு கிராமம். அந்தக் கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில் தனிவாசம் புரிந்து வருபவர்தான் நாகலிங்க சுவாமிகள். மௌனத்தை அதிகமாக விரும்புகிறவர்கள் தனிமைநாடுவது இயற்கை. அவர்கள் அதிகமாகப் பேசுவதே தன் உள்ளத்தோடுதான்!

பனை ஓலைகளால் செப்பனிடப்பட்ட சிறு குடிசை; அதைச் சுற்றிலும் செடி, கொடிகள்; தோட்டப் புறத்திலே மூலிகைக் காடு; அதனுள் எவருமே பிரவேசிக்க முடியாத முள் வேலி; ஒரு பர்லாங் தூரத்திலமைந்த சிறு மடுவு; இவைகள்தாம் சுவாமிகளின் வாழ்க்கைக்குச் சுகத்தைத் தேடி தருபவைகள்!

தெய்வ தரிசனத்தைத் தேட மனமில்லாதவர், அருகாமையிலேயே எழுந்தருளியிருக்கும் கோகிலாம்பாள் சன்னதியில் ஒரு நாளும் அவர் பாதம் பட்டதே கிடையாது. இதனால், ஒரு சிலர் அவரை நாத்திகர் என்றுகூட கருதுவதுண்டு; அவர்களுக்காக சுவாமிகள் வருந்துவதும் கிடையாது.

உள்ளத்தில் நம்பிக்கையை உலவவிடும் தெய்வமாகக் கருதி, தன்னைத்தானே அறிந்துகொள்ள முற்படும் நாகலிங்க சுவாமிகள், "நம்பிக்கையற்ற நாசகாலர்களும், தன்னை யுணராத தற்குறிகளும் வந்துபோகும் கோயிலில் என்ன இருக்க முடியும்?" என்ற முடிவுக்கு வந்தவர்போலும்!

உள்ளமே கோயில், உயிரே ஒளி விளக்கு என்ற சித்தாந்தத்திற்கு வந்துவிடும்போது உலகமே இருட்டாகத்தானே தெரிகிறது?

நாகலிங்க சுவாமிகளின் பெயர், புதுவைக்கடுத்துள்ள நகரவாசிகள் அத்தனைப் பேருக்குமே தெரிந்திருந்தது. அவரைக் கண்டால் பலரும் தலைவணங்குமளவில் அவரிடம் ஒரு மகத்துவமிருந்து வந்தது. அந்த மகத்துவம் வேறெதுவுமில்லை, நாகம் கடித்தவர்களை நான்கே நாழிகைகளில் பழைய நிலைமைக்குக் கொண்டுவந்து விடுவார். இப்படிப் பிழைத்தவர்களின் பட்டியல் ஏராளம்!

பழம்பெரும் சித்தர் நூல்களையும், மருத்துவ நிகண்டுகளையும், ஓலைச் சுவடிகளின் வாயிலாக உணர்ந்த பெரும் மருத்துவ ஆராய்ச்சியாளர்.

மருத்துவத்தின் குழப்பக் கோணங்கள் எல்லாவற்றிலுமே தன் அறிவின் நிழலைப் படியவைத்த ஒரே காரணம்தான், இப்போது அவர் மகத்துவத்தின் செல்வப் புதல்வனுகி, அதன் மடியில் தவழ்வது! மௌனத்தின் சாதனை ஏதோ ஒரு மகத்துவத்திற்குக் கொண்டுவந்து விடுவதாக பெரியவர்கள் சொல்லுகிருர்களே, அது எத்தனை உண்மையாகத் தெரிகிறது!

மகத்துவத்தில் போலி மகத்துவமுமிருக்கத்தான் செய்கிறது. அப்படி யிருந்தால், நாகலிங்க சுவாமிகள், செல்வப் புதல்வனுகி இருக்கமாட்டார்; தத்துப் புதல்வனுகி யிருப்பார்.

நாகம் கடித்தால் நஞ்சை இறக்கும் நல்ல மருந்து எதுவென கண்டுபிடிக்க, பலநாள் ஆராய்ந்த பிறகே ஒருநாள் வெற்றி கண்டார். மந்திரத்தாலல்ல, இயற்கை தந்துள்ள மூலிகையின் உதவியில் தான்.

வில்லியனூருக்கு அடுத்துள்ள கிழ ஓடை (நீண்டகாலமாக உள்ள ஓடை) நாமக்கட்டி ஓடை போன்றவைகளுக்கு தினம் விஜயம் செய்வார்; எதையாவது தோண்டி எடுத்து ஆராய்வார். ஓலைச் சுவடிகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு. 'என்ருவது ஒருதினம் வெற்றி கிட்டியேதீரும்' என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில், தன் காரியத்தைக் கவனித்து வந்தார்; வெற்றியும் கண்டார்; புகழும், புன்னகைக் காட்டியது!

---

**சில சமயங்களில் கற்பனையை விட, உண்மையான சம்பவங்கள் மேம்பட்டு விடுகின்றன. அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது இக் கதை.**

நர்கம் ஒருவனைத் தீண்டியதென்றால், அடுத்த மணிநேரம் நாகலிங்க சுவாமிகளின் வாசற்படியில் 'கார்' வந்து நிற்கும். இதனால் அவருக்குக் கிடைத்த வருவாய் அதிகமானாலும், அந்தப் பனை ஓலைக் குடிசையை ஏனோ அவரால் விட முடியவில்லை. அப்போது, குவிந்து வரும் பணத்தின் எதிர்காலம்? நல்ல நம்பிக்கையில் தன்னை ஐக்கியப் படுத்தி வாழ்ந்துவரும் அவரிடம் ஒரு திட்டம் இல்லாமலா போய்விடும்?

* *

"நாகலிங்க சுவாமிகளாம், நாகலிங்க சுவாமிகள்!"

"நல்லபாம்பு கடித்துவிட்டால், விஷத்தை இல்லவா இறக்கிவிடுறாராம்!"

"இதெல்லாம் 'டூப்' படிக்கிற சமாச்சாரம்பா!"

"டெய்லி டூப் பத்திரிகைங்க வராப்லே இது ஒரு பர்மனன்ட் டூப்!"

"இந்தச் சுவாமியாரை ஒரு நாளைக்கு சோதிச்சுப் பார்த்திடணும்!"

இப்படியான உரையாடல்கள், சில சில்லறைகளிடமிருந்து வெளியாயின.

நம்பிக்கையின் பரிதாபப் பார்வைக்கு ஆளான சில குள்ள மனப்பான்மை யுடையவர்கள், நாகலிங்க சுவாமிகளின் விஷயத்தில் அலட்சியக் கண்ணோட்டத்தைச் செலுத்தலானார்கள். கொய்யாமரம் மஞ்சளாக இருப்பதினாலேயே அதனிடம் சந்தனமா மணத்துவிடுகிறது?

நாகலிங்க சுவாமிகளைச் சோதித்து, அவர் குட்டை வெளிப்படுத்த வேண்டுமென்று ஒரு கும்பல் கிளம்பிற்று. அந்தக் கும்பல் புதுவைக்கும், வில்லியனூருக்கும் இடையேயுள்ள கோரிமேட்டைக் கடந்ததும் ஆலோசிக்கத் தொடங்கியது; அதன் பிறகு ஒரு முடிவுக்கும் வந்தது; முடிவை செயல் ரூபமாக்கவும் முனைந்தது!

விட்டில் பூச்சிகள்கூட விளக்கை அணைத்துவிடலாம் என்ற எண்ணத்தோடுதான் புறப்படுகின்றன. ஆனால், முடிவு......

பக்கத்து புதரிலிருந்த மூங்கிற் கிளைகளை வெட்டி ஒரு பாடை கட்டினார்கள். பாடையிலே, நெய்த தென்னங்கீற்றுப் போடப்பட்டது. கும்பலிலே ஒருவனை அழைத்து அந்தப் பாடையிலே படுக்கவைத்து நால்வர், தங்கள் தோள்களிலே சுமக்க, ஏனையோர் அழுகுரலோடு, நாகலிங்க சுவாமிகளின் இருப்பிடத்தை நோக்கினார்கள்.

காலம், சில நேரங்களில் கற்பனைக்கும் எட்டாத முறையில் மனிதரிடையே விளையாடிவிட்டுப்



போய்விடுகிறது. அப்படித்தானே என்னமோ, இந்தக் கும்பலுக்கும், அதன் புரியாத விளையாட்டுக்குப் புண்பட்டு, புலம்ப வேண்டிய நிலைமை ஏற்படப்போகிறது!

நாகலிங்க சுவாமிகளின் இருப்பிடத்தை நெருங்க, நெருங்க ஒவ்வொருவரும் தங்களைத் தயார் செய்து கொண்டனர், எவ்வாறு நடிக்க வேண்டுமென்று.

இருப்பிடத்தையும் அடைந்தார்கள்; எடுத்துவந்த பாடையையும் இறக்கினார்கள். எல்லோர் முகங்களிலும் நடக்கப்போகும் நிகழ்ச்சிக்குக் கேள்விக்குறி எழும்பிக் கொண்டிருந்தது. பாடையில் கிடத்தப்பட்டவன், அசையாத பிணம்போலவே காட்சியளித்தான்.

ஒரு கும்பல் தன் வாசற்படியில் வந்து காத்துக்கிடப்பதையுணர்ந்த நாகலிங்க சுவாமிகள், என்னமோ, ஏதோவென்று அவசரமாக வெளியே ஓடிவந்தார்.

எல்லோரும் அவரைக் கை கூப்பி வணங்கிய பிறகு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கலானார்கள். அந்தச் சமயத்தில் ஏனோ ஒருவர் வாயிலிருந்துகூட விஷயம் வெளிப்படவில்லை.

"என்னப்பா, விஷயம்? நாகம் தீண்டி விட்டதா?"—இது நாகலிங்க சுவாமிகளின் கேள்வி.

எல்லோரும் தலை யசைத்தனர். ஆனால், ஒரு நெஞ்சழுத்தக்காரன் மட்டும் முன்னே வந்து, "சுவாமி! என் தம்பியை நாகம் தீண்டிவிட்டது. இந்தச்சமயம் தாங்கள்தான் காப்பாற்ற வேண்டும். நீங்கள் கைவிட்டால் வேறு கதியில்லை," என்றான் அழும் பாவனையோடு.

நாகலிங்க சுவாமிகளும் உண்மைதானென்று எண்ணி, உள்ளே சென்று, ஒரு செம்பில் நீரும், ஒரு பெட்டியையும் கொண்டுவந்தார்.

உடலை அசைத்துப் பார்த்தார். கை, கால்களை மடக்கிப் பார்த்தார். விரைத்த கட்டைபோல் தென்பட்டது. மூக்கிலே விரலையும்



இடது மார்பிலே மற்ருெரு கையையும் வைத்துப் பார்த்தார், மூச்சோ, அடிப்போ காணவில்லை.

"கடித்து எத்தனை மணிநேரம் ஆயிருக்குமப்பா?"

"சுமார் ஒன்றரை மணி நேரம் ஆயிருக்கும் சுவாமி!"

"ஆளைப் பிழைக்கச்செய்ய முடியாதப்பா! உயிர் போய்விட்டது."

இதைக்கேட்ட எல்லோரும் சிரித்துவிட்டனர்.

"நிஜமாகத்தான் சொல்லுகிறீர்களா சுவாமி?"

"இந்த விஷயத்தில் மட்டுமல்ல, எந்த விஷயத்திலும் நான் விளையாட்டுக்காரப் பிள்ளையில்லை."

மீண்டும் ஒருமுறை எல்லோரும் சிரித்தனர். "டேய்! எழுந்திருடா! பாம்புக் கடிச்சா பிழைக்கச்செய்யரவராம்! பாம்பே கடிக்கலே இவனை, என்னுடான்னு செத்துப் போயிட்டானும். 'டுப்கார ஆசாமி'. எழுந்திரடா ஏகாம்பரம்!" என்ருன் கும்பலில் ஒருவன்.

ஆனல், ஏகாம்பரம்?

நீண்டத் தூக்கத்திலாழ்ந்து கிடந்தான்.

பலவாறு தட்டி எழுப்பிப் பார்த்தார்கள். உண்மையிலேயே பிணமாகிக் கிடந்தான் ஏகாம்பரம்.

எல்லோரும் 'கோ' வென்று கதறத் தொடங்கினர்கள். ஒரு சிலர் அவனை அசைத்துப் பார்க்கும்போது, பாடையைத் தள்ளினர்கள். அப்போது......

பச்சை மூங்கிலின் சந்திலிருந்து ஒரு கருநாகம் ஓடி வந்தது. அதைக் கண்ட அந்தக் குள்ளப் புத்திக் கும்பல் மிரண்டு ஒதுங்கியது.

"விளையாட்டுக்காக, இவர்கள் பச்சை மூங்கிலை வெட்டிப் பாடை கட்டி ஒருவனைப் படுக்கச்செய்து நம்மைச் சோதிக்க வந்தார்கள். ஆனல், மூங்கிலில் உண்மையிலேயே பாம்பிருந்து கடித்துவிட்டது. விளையாட்டு வினையாகிறது என்கிருர்களே, ஒருவேளை இதுதான் வினையோ?" என்று மனத்துள் எண்ணியவராய் நாகலிங்க சுவாமிகள் குடிசையுள் நுழைந்தார்.

சில சமயங்களில் கற்பனையைவிட, உண்மையான சம்பவங்கள் மேம்பட்டு விடுகின்றன; அதற்கு எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சி அவருக்கு விளங்கிற்று.

குறும்பு நோக்கோடு வந்த அந்தக் கும்பலும், உயிரோடு பாடை கட்டி வந்தவனை, பிணத்தோடு பாடையில் கிடத்தித் தூக்கிக் கொண்டு சென்றது.

இலங்கை ஏஜெண்டு

**KALAIMAGAL COMPANY**

124, Sea Street

**COLOMBO.**

P. B. No. 765.

Phone No. 5950.

# கூலி

## ரா. தணலன்

சூடான தேநீரை உறிஞ்சி ரசித்துக் குடித்தபடி அவன் மேற்கே பார்த்தான்.

இள நீல நிறமாய் வளைந்து மலைகள் அழகே உருவாய் நின்றன. அவை அவன் இதயத்தைக் கவர்ந்து இழுத்தன. மனதை மயக்கும்படியாக அந்த மலைகள் அழகாக இருந்தன. அந்த மலைகள்...

அவன் சிந்தனை ஒரு கணம் தேங்கிற்று. தேநீரைக் கையில் வைத்தபடி யோசித்தான். அவை எவ்வளவு அழகாக விளங்குகின்றன!--எவ்வளவு அமைதி நிறைந்தவையாகக் காணப்படுகின்றன, தூரத்திலமர்ந்து பார்க்கும் பொழுது......

ஆனால் அங்கே வாழ்க்கை அமைதியாக இல்லை. அழகாக இல்லை.

அங்கும் மனிதர்கள் வசிக்கிறார்கள். கொடும் விலங்குகளும்தான் வசிக்கின்றன.

---

"தினசரி பத்தணாக் கூலி. அதென்ன சும்மா கிடைக்குங்களா...? அப்படி இப்படி கொஞ்சம் இதமாகத் தான் நடந்துக்கணும்"
—என்றான் கிழவன்
—ஆனால் அவன் அப்படிக் கருதவில்லை.

கோடைக் காலம் அங்கே இனிமையாக இருக்கும். செல்வர்கள் சுகவாசத்திற்காகச் செல்வார்கள். ஆடல் பாடல்களுடன் இன்பமாகக் களிப்பார்கள். மலைகளில் வேட்டை ஆடுவார்கள். இளம் பெண்களைத் தேடி வரும்படி தாசர்களை ஏவுவார்கள். "கள்ளச் சரக்கு"களை அருந்துவார்கள். உற்சாகமாக ஒரு மாதம், இரண்டு மாதம் தங்கிவிட்டு வருவார்கள். அவர்களைப் பற்றிச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

அங்கேயே வசிக்கிறார்கள், எஸ்டேட் முதலாளிகள் சிலரும், நடுத்தர வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், உபாத்தியாயர்கள், குமஸ்தாக்கள் போன்றவர்களும். முதலாளிகள் எங்கே இருந்தாலும் முதலாளிகள்தான். அவர்களைக் குளிரோ, கோடையோ, மழையோ எதுவுமே ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால் அவர்களை ஆண்டவன் 'வெதர் ப்ரூஃபாக' (கால மாறுபாட்டால் பாதிக்கப் படாதவை) படைத்துவிட்டான். நடுத்தர மக்களின் பாடு கொஞ்சம் கஷ்டம்தான். ஆனால் அவர்கள் எப்படியோ வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால......

இவர்களைத் தவிர வேறு வகையான மனிதர்களும் அங்கே வசித்

தார்கள். அவர்கள் வாழ்க்கை தான் நரகமாக இருந்தது.

அவன் கோடை காலத்தில்தான் அங்கு போயிருந்தான். பணக்கார நண்பர்கள் சிலர் அவனை அழைத்துப் போயிருந்தனர்.

பணம் சில சமயங்களில் விபரீதமான வஸ்துக்களைக்கூட விலைக்கு வாங்குகிறது. உபயோகப் பொருள்களையும், அழகுச் சாதனங்களையும் போல, கலைப் பொருள்களையும் கண்ணுக் கினியவைகளையும்போல் மனதை மகிழ்விக்கக் கூடிய எல்லாவற்றையும் விலைக்குவாங்க முயல்கிறது. ஓய்வு, உல்லாசம், சிரிப்பு, பொழுதுபோக்கு, விளையாட்டு இவறறைக்கூட அது விலைக்கு வாங்குகிறது. மனிதர்களையே கூட வாங்கிவிடுகிறது. அறிவையும் அது அப்படிச்செய்ய முயல்வதுதான் விந்தை! விந்தை என்ன? உலகத்தில் அப்படியும்தான் நடககிறது.

அவன் ஒரு எழுத்தாளன் என்பதால்தான், அநத நண்பர்கள் அவனை அழைத்துச் சென்றனர்.

மலைமேல் இருந்த அந்தச் சிறிய நகரத்தில் அழகான பங்களாக்கள் இருந்த அந்தப் பகுதியில் அவன் ஒரு மாளிகையில் தங்கியிருந்தான்.

வேளா வேளை சாப்பாடு. நிறைய ஓய்வு. நல்ல புத்தகங்கள். இவற்றோடு அழகான சூழ்நிலை. பார்த்த பக்கமெல்லாம் மலர் நிறைந்த உயர்ந்த பெரிய மரங்கள். பூங்காவனங்கள். கோடை வாசத்திறகாக வந்த அழகிய உடை தரித்த ஆண்கள், பெண்கள். நல்ல கார் சவாரி. இவற்றை எல்லாம்


# இனிய எழுத்தோவியங்கள்

**விருதை ந. இராமசாமி எழுதியவை:**

| | | | |
|---|---|---|---|
| புத்துணர்ச்சி | ... | 2 | 0 |
| இன்ப நிலா | ... | 1 | 0 |
| தளபதி | ... | 1 | 0 |
| தாமஸ் மசாரிக் | ... | 1 | 0 |
| புது வாழ்வு | ... | 1 | 0 |
| என் மகள் | ... | 0 | 8 |

**கோவி. மணிசேகரன் எழுதியவை:**

| | | | |
|---|---|---|---|
| ஹாம்லெட் | ... | 2 | 0 |
| ஜூலியஸ் ஸீஸர் | ... | 1 | 0 |
| புரட்சிப் புலவன் அம்பிகாபதி | ... | 1 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி**

சென்னை—1



அவன் மிகவும் ரசிக்கத்தான் செய்தான். அவற்றைப்பற்றி நினைக்கும் பொழுது அவன் மனம் இன்னும் இனித்தது. ஆனல் அங்கே......

அவன் வேண்டாத வேலை ஒன்றைச் செய்யக் கிளம்பி வேதனையைச் சம்பாதித்துக் கொண்டான். அதை நினைக்கும்பொழுது இப்பொழுதுகூட அவன் உள்ளம் கசந்தது. துயரத்துடன் அவன் நினைத்தான்—பாவம்! அந்த மனிதர்கள் தான் எவ்வளவு கேவலமாக வசிக்கிருர்கள்!!

பாவம்......!!!

அனுதாபப் படுவதைவிட நடுத்தர வர்க்கத்தாரால் வேறென்றும் செய்யமுடியாது. கசாப்புக் கடைக்காரர்களும், ஆடுகளும் சமுதாயத்திற்குத் தேவையாகத்தான் இருக்கின்றன. அதைப்போல் கஷ்டப் படுகிறவர்களும் அவர்கள் கஷ்டத்திற்குக் காரணமானவர்களும் கூடச் சமுதாயத்திற்குத் தேவைதான் என்றுகூட அவர்கள் பேசுவார்கள்.

'விதி' என்ற மூலாம் பூசிவிட்டால் காட்சி இன்னும் ரொம்ப அழகானதாகக்கூட மாறிவிடும்!

அவன் மலைவாசத்துக்கு வந்த இரண்டாம் நாள். அவர்களுக்கு விறகு தேவையாக இருந்தது. அடுப்பெரிக்கவும் கணப் பெரிக்கவும் அது இன்றியமையாததல்லவா? பக்கத்திலே விறகுக் கடைகள் இருந்தன. ஆனல் அதைவிட

மாலையில் விறகு கொண்டுவரும் தலைச் சுமைக்காரர்களிடம் வாங்கினால் மலிவாக இருக்கும் என்று வேலைக்காரன் சொன்னான். அவன் மலைவாசி. அங்கத்த பழக்கவழக்கங்கள் வசதிகள் எல்லாம் அவனுக்கு நன்ருகத் தெரியும். அவன் சொன்னால் சரிதான். அவன் அவர்களுக்கு மாமூல் 'சீசன்' வேலைக்காரன்.

மாலை வந்தது. மலைகளிலிருந்து விறகுச் சுமைகளைத் தூக்கிக் கொண்டு ஆண்களும், பெண்களும், கிழடுகளும், சிறுசுகளும் சாரி சாரியாக இறங்கிக் கொண்டிருந்தனர். குச்சிகளும், சுள்ளிகளும் ஒன்றிரண்டு வெட்டிய விறகுகளும் வைத்துச் சிறிய சிறிய சுமையாகக் கட்டி அவர்கள் தூக்கிக்கொண்டு வந்தனர்.

ஏழை மலைவாசிகள்! அந்த விறகுக் கற்றைகள் அவர்கள் உயிரைக் காப்பாற்றி வந்தன.

வேலைக்காரன் தெருவில் நின்று விறகுக்காரர்களைக் கூட பிட்டான். ஏழெட்டுபபேர் முண்டியடித்துக் கொண்டு ஓடிவந்தனர். அவர்கள் தலையிலிருந்த அந்த விறகுக் கற்றைகள் அரிசி, உப்பு, புளி ஆக வேண்டும். விறகைச் சாப்பிட முடியுமா? அது வேகத்தான் வைக்குமேதவிர வேகாது.

விறகுக் கற்றைகளை இறக்கிப் போட்டுவிட்டு அவர்கள் அவற்றின அருகிலே நின்றுகொண்டும், உட்கார்ந்துகொண்டும் வம்பளந்து கொண்டிருந்தனர். வேலைக்காரன் கற்றைகளின் அளவுக்குத் தகுந்தவாறு விலைபேசத் தொடங்கினன். வீட்டுத் தலைவி அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். ஒரு கிழவன், இரண்டு நடுத்தர வயதுப் பெண்கள், ஒரு யுவதி, மூன்று சிறுமிகள், ஒரு பையன் ஆக எட்டுப்பேர், எட்டு மலைவாசிகள் அங்கே நின்றனர். அவர்களுடைய கரிய உடலிலிருந்தும், நெற்றியிலிருந்தும் வியர்வை வழிந்துகொண்டிருந்தது. அவர்கள் களைத்துப் போயிருந்தனர் என்பது பார்த்த மாத்திரமே தெரிந்தது.

கிழவன் முழங்கால்வரைக்கூடக் காணுத துண்டைச் சுருட்டிக் கட்டிக் கொண்டிருந்தான். பெண்கள் சீலைத் துண்டுகளைக் கட்டி மேலே ஒவ்வொரு துண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்தனர். அந்த இளம் வயது மங்கை மாத்திரம் ஒரு பழைய கிழிசல் ரவிக்கை போட்டுக் கொண்டிருந்தாள். சிறுவர்கள் வெறும் கோவணம்தான் கட்டிக் கொண்டிருந்தனர். குளிர் காலத்தில் இவர்கள் எப்படிக் காலம் தள்ளுவார்கள் என்ற கவலை அவன் மனத்திலெழுந்தது.

அவர்கள் எப்படி வாழ்கிருர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை அவன் மனத்தில் வலுப்பட்டது. அது அனுவசியமானது. அதைப் பற்றி அவன் கவலைப்பட்டிருக்க வேண்டியதில்லை. அவர்கள் எப்படி வாழ்ந்தால்தான் என்ன? அவன் என்ன பிரம்மாவா? அழித்தெழுத.........

ஆனால் அவன் சும்மா இருக்கவில்லை. அந்தக் கிழவனை விசாரிக்கத்தான் செய்தான்.

"நாங்க இருக்கறதுங்களா...... தோ பாருங்க; மேக்காலே ஒரு மைல் போனு எங்க குடிசை இருக்குது...... ஆமாங்க குடிசையிலே தானுங்க இருக்கரேம்......

குளிருங்களா...... அது எங்களை என்ன செய்யுங்க... அதெல்லாம் குளிர் காலத்திலே கம்முன்னு இருக்குமுங்க...... மழைபேஞ்சா கஷ்டம்தாங்க. ஆனா மழை என்ன எப்பவுமா பேயுது...... பேஞ்சா பேஞ்சிட்டுப்போகுது. ரெண்டு நாளைக்குக் கஷ்டம் அம்புட்டுத் தான்.........அதுக்கென்னங்க எப்படியோ காலந்தள்ளறோம். எல்லாம் வழக்கம்தானுங்க. பழகிப் போயிட்டா எல்லாம் சரியாப் போகும்."

அவன் கேட்ட கேள்விகளுக்குக் கிழவன் இப்படியாகப் பதில் சொல்லிக்கொண்டு வந்தான்.

அவர்கள் பிழைப்பு எப்படி நடக்கிறது என்பதைப்பற்றி அவன் விசாரித்தான். கிழவன் சொன்னான்: "பொளைப்பு என்ன பொளைப்புங்க... வீட்டிலே பசங்க புள்ளைங்க இருக்கிறது. எல்லாம் தோட்டத்துக்குப் போயிடுங்க. டீ இலை புடுங்குறதுக்குத்தான். அது தாங்க எங்க சனங்களுக்குத் தொழிலு. ஆம்பிளைகளுக்குச் சமயத்திலே மரம் அறுக்கிறது, ரோடு போடறது இந்த வேலை எல்லாம் கிடைக்கும்...

"ரோடு போடறதுன்னா உங்க ஊர்கள்ளே போடற மாதிரின்னு நினைச்சுக்காதீங்க. மலை மேலே அது ரொம்பக் கஷ்டமான வேலை. மொதல்லே மரங்களை எல்லாம் வெட்டித் தள்ளணும். அதையெல்லாம் வேபாரிக வெலைக்கு வாங்கிக்குவாங்க. அப்புறம் பாறைகளை எல்லாம் உருட்டிப் பள்ளத்திலே தள்ளணும்......

கிழவன் சொல்லிக் கொண்டு வந்தவன் சற்று தூரத்தில் நின்ற அந்த இள மங்கையைப் பார்த்தான். ஏதோ நினைத்துக் கொண்டவன்போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு, "அது ரொம்பக் கஷ்டமான வேலைங்க...... அதா பாருங்க. அந்தப் பாதை போடறப்போ இந்தப் புள்ளை புருசன் மேலே பாறை உருண்டு வந்து விழுந்து பள்ளத்திலே தள்ளீட்டுது. உடம்பெல்லாம் சப்பை சங்காரமாப் போச்சுங்க...... எல்லாம்


# எங்களிடம் ஷேக்ஸ்பியர்

| | | ரூ | அ |
|---|---|---|---|
| ஒரு துளி இரத்தம் | ... | 2 | 0 |
| ஹாம்லெட் | ... | 2 | 0 |
| ஜூலியஸ் ஸீஸர் | ... | 1 | 0 |
| ரோமியோ ஜூலியத் | ... | 1 | 0 |

விபரங்களுக்கு:

**ஸ்ரீமகள் கம்பெனி**

122, வரதாமுத்தியப்பன் தெரு

சென்னை—1

> **மனோபாவம்**
>
> எப்படிப்பட்ட காதலும் ஒரு சுய லட்சியத்தை—அதாவது தனதிஷ்டத்தை—திருப்தியைக் கோரித்தான் ஏற்படுகின்றதே தவிர வேறில்லையென்பது காதலர்களென்பவர்களின் மனோபாவத்தைக் கவனித்தால் விளங்காமல் போகாது.
>
> —பெரியார் ஈ. வே. ரா.

துண்டு துண்டாப்போச்சு...... யுவதி முகத்தை மூடிக்கொண்டு வெளியே போய்விட்டாள்.

கிழவன் சொன்னான், "இந்தப் பேச்சை எடுத்தது தப்பாப் போச்சுங்க. பாவம் அந்தப் புள்ளை ரெண்டு நாளைக்கு அழுதுக்கிட்டே கெடக்கும். இதெல்லாம் சாதாரணங்க. மலையிலே குடியிருக்கறதுன்னா லேசா எல்லாம்தான் இருக்கும். அவனுக்கு ஒரு பையன் இருந்தானுங்க. நல்ல பையன். மூணு வயசு அதுக்கு. அதையும் சிறுத்தை தூக்கீட்டுப் போயிட்டுது...... இப்ப அந்தப் புள்ளை ஒண்டியாத்தாங்க இருக்குது......

மலை வாழ்க்கையின் பயங்கரம் அவன் மனதில் சுரீர் என்று உறைத்தது. பாதைபோடும் அந்த வேலையில் பாறைகள் உருண்டு ஆட்களை அடித்துப் படு பாதாளங்களிலே தள்ளி உருத் தெரியாமல் சிதைத்துவிடுகின்றன. வனவிலங்குகள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு போய்விடுகின்றன. சில சமயங்களில் அவை ஆட்களையே அடித்துக் கொன்றும் விடலாம். ஆனால் கிழவன் சாதாரணமாகக் கூறினான்.

அவன் மேலும் சொல்லிக் கொண்டுபோனான், "அது தலையெழுத்துங்க. அதுவும் தோட்டத்திலே வேலைக்குப் போயிட்டிருந்தது. தினசரிப் பத்தணாக் கூலி. வாரம் ஆனதும் சனிக்கிழமை அன்னைக்கு மூனே மூக்கா ரூவா சொளையா வாங்கலாம். இப்படியா காத்தாலே இருந்து வெறகு வெட்டி ரெண்டணாவுக்கும் நாலணாவுக்கும் கொண்டாந்துப் போடணும். அது லேசான வேலைங்க. டீ இலை புடுங்கறது......

"உம், இந்தப் புள்ளைக்குப் புத்தி இல்லே. எவனோ மேஸ்திரி இவ மேலே ஆசைப்பட்டு வம்பு பண்ணினான்னு அவன்கிட்டே மொரண்டு பண்ணிக்கிட்டு வேலையை விட்டுட்டா தினசரி பத்தணாக் கூலி, லேசான வேலைன்னா சும்மா கெடைக்குங்களா? அப்படி இப்படிக் கொஞ்சம் எதமாத்தான் நடந்துக்கணும்... இப்பக் கஷ்டப் படுதே யார் கொடுக்கறா......?"

கிழவன் அந்தப் பத்தணாக் கூலியை நினைத்துப் பெருமூச்சு விட்டான். வேலைக்காரன் விறகுக்குரிய பணத்தைக் கொண்டுவந்து கொடுக்க அவன் வாங்கிக்கொண்டு, "நான் வர்றேங்க," என்று கும்பிடு போட்டுவிட்டுப் போனான். அவன் சிந்தனையிலாழ்ந்தபடி நின்றான்.

பத்தணாக் கூலி......

வாழ்க்கை, மானம், உயிர் எல்லாவற்றிற்கும் பத்தணாக் கூலி...!

அந்த இளம் பெண்ணின் கரிய முகம் அவன் மனக் கண்முன் வந்துபோயிற்று. அவனும் பெருமூச்சு விட்டான்.

அவன் கையிலிருந்த தேநீர் ஆறிச் சில்லிட்டுப் போயிருந்தது. அவன் எதிரே மலைகள், இள நீல நிறமாய், அழகாய், அமைதியாய் நின்றன. அங்கே வாழ்க்கை......




லார்ட் கவிஞன் பைரனைத் தெரியாதவர்கள் ஆங்கில மொழியின் இலக்கியத் தோட்டத்திலே யாரும் இருக்கமுடியாது. ஆங்கில மொழிக்கே அழகுசெய்த, புகழ் பரப்பிய பெருங்கவிஞர்களில் அவனும் ஒருவன். இறவா இலக்கிய உலகம் இறந்துவிட்ட இலக்கிய மன்னர்களை மறவாது, மங்காத புகழ்படைத்தோர், காய்ந்து உதிர்ந்துபோகாத இலக்கியக் கனிகளாக மக்களின் மனத்தோட்டத்திலே பூத்துக் குலுங்கினர்.

உலக மகாகவி ஷேக்ஸ்பியர், பெருங்கவிஞன் மில்டன், எழிற் கவிஞன் வொர்ட்ஸ்வொர்த், புரட்சிக் கவிஞன் ரீஸால், சிந்தனையெழிலன் டிக்கன்ஸ், கவிக்குயில் கீட்ஸ், ஷெவிச் செல்வன் ஷெல்லி, புகழ் புலவன் போப், மார்லோ, கரதே மஹாபார் போன்றவர்கள் எல்லாம் ஆங்கில மொழிக்கு அரண் அமைத்து, உலகம் புகழ, தங்கள் உள்ளக்கிடக்கையெல்லாம் ஒன்று திரட்டி அழகு மொழியிலே...... ஏராளமாகப் பாடினார்கள். இரவுப் பகல் என்று பாராமல் எழுதினார்கள். இன்பம் கண்டபோதெல்லாம் ஆடினார்கள்.

இலக்கியக் கண்ணாடியிலே மனிதவாழ்வின் இன்னல்களை, இன்பங்களை, மனித உணர்ச்சிகளை, உணர்வுகளையெல்லாம் எழிற் கவிதைகளாக்கி குவித்தார்கள். அவர்களின் கருத்துப் படையல்கள், சிந்தனைக் குவியல்கள் எல்லாம் உலகிற்குப் புதுமைதான்.

பரந்து விரிந்து கிடக்கும் வானத்தைப் பார்த்தான். அங்கே பண் பாடித்திரியும் பறவையினங்களைப் பார்த்தான...... அலைமோதும் பெருங்கடலை, கொடுமைப் புயலை, அமைதியைப் பார்த்தான், செழித்து வளர்ந்து செம்மையாக்கப்பட்ட பசுமை நிலத்தைப் பார்த்தான். மலர்ந்த மலர்களை, முறிந்த மரம் செடி, கொடிகளைப் பார்த்தான். காலைக்கதிரவனின் பொன்னிறத்தை மலையின் மடியிலே நினைந்துபார்த்தான். திரும்பிப் பார்த்தான். பார்த்த இடமெல்லாம், எண்ணத்தில் எல்லாம், நடந்த நிலத்தில் எல்லாம் இயற்கை யெழிலின் வர்ணஜாலத்தைப் பார்த்தான். இயற்கையெழிலில் அவன் உறங்கினான். அவன் வாழ்ந்தான். ஏராளமாக எழுதினான். அவனுக்கு அங்கேதான் இன்பம் இருந்தது. அந்த எழிற் கவிஞன்தான் வொர்ட்ஸ்வொர்த். ஒரு இலக்கியக்கனி.

படிப்பில்லை—பணமில்லை-- வாழ வழி இல்லை—காலம் துரத்தியது. எழுதும் ஆற்றல் உண்டு, எண்ணமுண்டு. வாழும் வழி நெறியைக் காணோம்—எனவே கூத்துநடக்

கும் இடத்திற்கு ஓடினான். கோமான்களின் குதிரைகளுக்கு காவல் இருந்தான். கண்விழித்தான். பாரி படிப்பில்லாமல் எழுதநினைத்தான். எழுதினான். பாடநினைத்தான் பாடினான். ஆட நினைத்தான் ஆடினான். வாழ்க்கையின் விசித்திர விநோதங்களை வேடிக்கையாகக் கூறினான். கொடுமைக் காரர்களின் குரங்கு மனத்தை, பொறாமைக் குணத்தை எழில் நங்கையர்களின் விழிகளிலே விளையாட விட்டான். அவர்களின் வஞ்சக இதயத்திலே புதைத்து வைத்தான். அவர்களின் செவ்விதழோரத்திலே செதுக்கி வைத்தான்! பேராசைக் காரர்களை, மோசக் காரர்களை, துரோகமிழைக்கும் துரோகிகளை அரசர்களின், பிரபுக்களின், கோமான்களின் உருவிலே நடமாட விட்டான் மனித வாழ்வை நாடகமாக்கி விட்டான். பாடல்கள் பல எழுதினான் பெரும் புகழ் கொண்டான். அவன் உலகிற்கே ஒரு பெருங்கவிஞன், பெரும் புலவன் உலகமகாகவி ஷேக்ஸ்பியர். பார்வையற்றக் குருடனாய் இருண்ட உலகிலே அவன் நடந்தான். இல்லை! அவன் இலக்கிய உலகிலே பரவசப் பார்வையுடன் நடந்தான். அவன் கவிதா உள்ளம் கரைபுரண்டோடியது. கண்ணிழந்த அவன் கவிதை உள்ளத்தை இழக்கவில்லை. எழுதி, எழுதி இறவாத புகழ் பெற்று விட்டான், கருத்துக்களஞ்சியம் மில்டன்.

இதோ எழில் விழியாள்களின் இதயத்திலே நடமாடுகிறான் ஒரு கவிஞன், பைரன்!

தன் உள்ளத்தையெல்லாம், கருத்தையெல்லாம், அழகையெல்லாம், அன்பையெல்லாம் பொன்னுடலழகிகளின் புன்னகை தவழும் விஷச்சரிப்பிலே எழுதிவைத்தான். அதுதான் அவன் கவிதை. அவன் வாழ்வும் அதுதான். அவன் அழகிலே நடந்தான், அவன் அழகிலே பேசினான், அவன் அழகிலே உறங்கினான்.

அவன் பார்க்கும் பார்வையில் எல்லாம் பருவவெழில் படைத்த பாவையர்களின் விழியாட்டம் தானிருக்கும். அங்கேதான் அவனுக்குக் கவிதாசக்தி பிறக்கும். கேட்கும் மொழியெல்லாம் கிளிமொழியாள்களின் கொஞ்சும் குரலழகைக் காண்பான். பேசும் பேச்சுக்களில் எல்லாம் பொற்கொடியாள்களின் உள்ளத்து உணர்ச்சிகளைத்தான் கொட்டித் தீர்ப்பான்.

பெண்களே கதி மோட்சம் என்று திரிந்தான். ஓடினான். எங்கும் வாழவில்லை. ஏமாற்றத்தின் உருவிலே ஓடி ஒளிந்துவிட்டார்கள் அவன் இதயத்திலே இன்பம் கண்ட எழிலரசிகள்.

கண்ட கட்டழகிகளின் முழங்காலிலே மண்டியிட்டான். பைரனின் அன்புக்கு ஏங்கித்தவித்த எழிலரசிகள்...............அவனை விட்டே மறைந்து விட்டாள். அவனை மருந்தாக்கி விலக்கினர்.

பைரன் ஏமாறவில்லை. ஏனென்றால் அவன் யாரையும் நம்பவில்லை. நம்பினவளும் கைவிட்டுப் போய்விட்டாள். எல்லாப் பெண்களும்தான் அவனைக் காதலித்தார்கள். ஆனால் ஒருத்தியும் உண்மையாக அவனோடு வாழவில்லை. இதோ......அவன் கவிதைகளின் ஒரு சில!......

"ஓய்வு நேரம்" எனும் பகுதியின் கீழ் பெண்ணுக்கு என்ற சிறு பாடலில் பைரன் பேசுவதைப் பார்ப்போம்.

......பெண்ணே!—'உன்னை யார் பார்க்கிருளோ அவளையே நீ நேசி என்று அனுபவம் எனக்குச் சொல்லியிருக்கக் கூடும்! உன் உறுதி *மொழி பொய்! வீண்! ஆனல் உன் எழிலையெல்லாம் என் முன் வைத்தாய்! உன்னைப் புகழ நான் எல்லாவற்றையும் மறந்தேன்! ஓ நினைவே! நம்பிக்கை இருக்கும்போது உன் கிருபையும் இருக்கிறது! ஆனல் நட்பு முறிந்ததும், நம்பிக்கை ஓடியதும் எத்தனை காதலர்கள் உன்னைத் தூற்றுகிருர்கள்.'

'பெண்ணே! நீ ஒரு அன்பான, அழகான மோசக்காரி! உன்னை நம்ப எத்தனை இளைஞர்கள்! நாம் முதன் முதலில் சந்தித்தபோது எப்படி உணர்ச்சிகள் மேலோங்கின!'

'நீலநிற விழிகளிலே உருண்டன கண்கள்! கருமை ஒளி! சிவந்த விழிகளுக்கிடையே ஓர் விதக் கவர்ச்சி.'

'எவ்வளவு சீக்கிரம் ஒருவர் உள்ளத்தை ஒருவர் அறிந்தோம்!'

"கேள்!......உன் பொய்யன்பை! உண்மையில் உன்னைக் கடைசி வரையில் நம்பினேன்! ஆனல் நீ ஒரே நாளில் உன் மனத்தை மாற்றிக் கொண்டாய்! உன் செயல் எப்பொழுதும் அழியாது, என்றும் இருக்கும்! பெண்ணே!...... உன் வார்த்தைகளை மணல் மீது தான் எழுதவேண்டும்!'—அதே பகுதியின் கீழ் கவிஞன் பைரன் 'அந்தக் கண்ணீர்'—என்பதைப் பற்றிச் சொல்லுகிருன் சற்றுக் கேட்போம்.

'காதலும், நட்பும் நம்மிடையே இருக்கும்போது அன்பு சுரக்கிறது. உண்மை தோன்றும் போது உதடுகள் சிரித்துக் குரலெழுப்புகின்றன! ஆனல் உண்மை அன்பிற்குச் சோதனை கண்ணீரே தான்!'

'அதிகச் சிரிப்பு போக்கிரிகளின் சதி! அது அதிக வெறுப்பை, பயத்தைத் தரும்! உயிர் பார்வையாகிப் பேசும்போது அமைதியாகப் பெருமூச்சு விடு! அது கண்ணீரோடு மறைந்து விடும்!'

'இறந்து போகும் நமக்கு அமைதியான இரக்கம் எழுகிறது! கொடுமையிலிருந்து உயிர் விளக்கமாகத் தெரிகிறது! இந்தப் பரிசுத்தத்தில் இரக்கம் கறைந்து விடும்! அந்தக் கறை கண்ணீரால் வெளி உலகிலே பரவும்!'

'அலை புரளும் அட்லாண்டிக் சமுத்திரத்தில் புயலுக்கிடையே உள்ளது அவன் இருண்ட பிரயாணம்! அந்த அலையிலே தவறினல் அங்கே அவனுக்குச் சமாதி இருக்கும். அதோ! பசுமை நிறம் கண்ணீரோடு பிரகாசிக்கிறது!'

'போர் வீரன் மரணத்தைத் தன் வாழ்நாளில் ஓர் மலர் மாலை

---

* பிற நாட்டுப் பொன்னேடுகளில் அழியா இடம் பெற்றவன் பைரன்.

* பைரன் எழுதாத கருத்தில்லை—வரையாத வர்ணனைகள் கிடையா.

* காதல் இலக்கியத்தைத்தான் பைரன் எத்துணை அருமையாக ஊட்டுகிருன் பாருங்கள்.

---

யாக்கிக் கொள்கின்றான்! போர்க் களத்தில் துன்பத்தோடு எழுகிறான். ஒவ்வொரு காயங்களையும் கண்ணீரால் கழுவுகிறான்!'

'அவன் ஆயுதங்களை விட்டு, அதிக கௌரவத்தோடு தன் காதலியைக் காண வந்தால் அவன் துன்பத்திற்கெல்லாம் பரிசு......காதலியின் அன்புத் தழுவல்தான். அவள் இமையிலிருக்கும் கண்ணீரை முத்தமிடுவான்!'

'இளமையின் இனிமைத் திரையே! உண்மை நட்பின் இருப்பிடமே!—அங்கே 'அன்பு'—ஒவ்வொரு ஆண்டும் ஓடுகிறது. உன்னை விட்டுப் போக மனமில்லை. நான் துக்கப்படுகிறேன் கடைசிப் பார்வைக்காகத் திரும்புகிறேன். ஆனால் உன் அன்பின் ஆழத்தை உன் கண்ணீரால் காண்கின்றேன்!'

'என்னுடைய மேரிக்காக நான் ஒன்றும் கூறுவிடினும்......அவள் என் இதயத்திற்குகந்தவள். அவள் நிழலின் கீழ் அந்த நினைவை நினைக்கிறேன். என் உள்ளத்தையெல்லாம் கண்ணீரால் பெற்றுக் கொண்டாள்!'

'மாற்றான் மனத்திலே அவள் வாழ்ந்தாலும் அவள் பெயர் என் இதயத்திலிருக்கும். ஒரு காலத்தில் என்னுடையவள் என்று எண்ணும்போது நீண்ட பெருமூச்சு வருகிறது. அவளைக் கண்ணீரால் மன்னித்து விடுகிறேன்!'

'என் இதயம் கொண்ட நண்பர்களே! உங்களிடமிருந்து பிரியப் போகிறேன். இந்த எண்ணம் என் உள்ளத்திற்கு அருகில் இருக்கிறது. மறுபடியும் பார்க்க முடியுமானால் சந்திக்கலாம். நாம் பிரியலாம் ஓர் துளி கண்ணீரோடு!'

ஒ கறை படிந்த கண்ணீரே!

'என் மரணத்திற்கு அழகிய சமாதி வேண்டாம்! அது குழந்தைகளின் கோட்டை. எனக்காக எந்தப் புகழ்க் கதையும் வேண்டாம்! நான் கேட்பதெல்லாம் — விரும்புவதெல்லாம் — ஒரே ஒரு துளிக் கண்ணீர்தான்!"

"ஓய்வுநேரம்" என்ற அதே பகுதியின் கீழ் 'மேரிக்கு—ஓவியத்தை பெற்றது'ம்—என்ற தலைப்பில் கவிஞன் பைரன் கூறுகிறான் கேட்போம்!

'மேரி! அழியக் கூடிய கலை ஓவியத்தைக் கொடுத்தாய்! இருந்தாலும் அது உன் எழிலை நினைவுறுத்துகிறது! அதனால் நிலையில்லாப் பயம் கொண்ட என் இதயம் மாறுகிறது! நம்பிக்கை மலர்கிறது! என்னை வாழவிடுகிறது!'

'...இங்கே உன் பொன்னிறக் கூந்தல் மிருதுவான நெற்றியில் அலை மோதிப் பாய்கிறது! உன் கவர்ச்சி தரும் கன்னங்கள் அழகான அச்சிலிருந்து வந்தவை! செவ்விதழ்களுக்கு நான் அடிமையாகிவிட்டேன்'—

'இங்கே நான் சொல்லமுடியும் ஆச்சரியம்!! இல்லை! இல்லை!!—அந்தக் கண்கள் நெருப்புக் குழம்பில் தவழ்கின்றன! எல்லாம் அந்த ஓவியக்காரனின் தவறு! அவனை அவ் வேலையிலிருந்து நீக்கிவிடு!'—

'இங்கே நான் அழகின் வர்ண ஜாலத்தைப் பார்க்கிறேன்! ஆனல் நீல நிற விழிகளுக்கு அழகொளி தரும் குளுமைக் குளிர்ச்சி எங்கே? அது ஆனர் நட்சத்திரம் கடலில் விளையாடுவது போலிருக்குமே!'—

'இனிமைச் சித்திரமே! நீ என் அருகே உயிரில்லாத, உணர்ச்சியில்லாதவளாய் இருக்கிறாய்! மற்றவைகளும் அப்படிதானிருக்கின்றன! என் உள்ளத்திற் குகந்தவளைக் காப்பாற்று! தேவையில்லாத பயத்துடன் அதை அவள் அனுப்பியிருப்பாள். சந்தர்ப்பம் என் ஊசலாடும் உயிரை உலுக்கும்! உணர்ச்சியற்று அதோ அவள் உருவம் அங்கே இருக்கிறது! எல்லாம் மறைந்த உணர்ச்சியிலே நடந்துவிட்டது!'

'மணிக்கணக்காய், வருஷக்கணக்காய், நிமிஷக் கணக்காய் அது என்னைக் குதுகலப்படுத்தும்! என் நம்பிக்கை இருளுக்கு மத்தியில் எழுகிறது! அது வாழ்வின் கடைசித் துன்பத்தில் தோன்றும்! அப்பொழுது அன்புள்ளவளே என்னைப் பார்!—'

'ஓர் அழகான யுவதிக்கு'— என்று கவிஞன் பைரன் எழிலாக எழுதுவதைச் சற்று படிப்போம்.

'இனிமைப் பெண்ணே! நாம் ஒரே ஒரு முறை ஒருவரை ஒருவர் சந்தித்திருந்தாலும் அந்தச் சந்திப்பை நான் என்றும் மறவேன்! மறுபடியும் சந்திக்க முடியாவிட்டாலும் அந்த நினைவு நம்


# கனிச் சுவை ததும்பும்
# கதைக் குவியல்கள்

**இராதாமணாளன் எழுதியவை:**

| | | |
|---|---|---|
| அரண்மனை அழகிகள் | ... | 1 8 |
| முல்லைக்காடு | ... | 0 12 |

**கவிஞர். சுப்பு ஆறுமுகம் எழுதியவை:**

| | | |
|---|---|---|
| நல்ல பெண்மணி | ... | 2 4 |
| வீரபாண்டியன் கட்டபொம்மன் | ... | 1 0 |

**தில்லை வில்லாளன் எழுதியவை:**

| | | |
|---|---|---|
| அந்தப்புரம் | ... | 0 12 |
| திருடர்கள் இராஜ்யம் | ... | 0 6 |

**நெல்லை வேந்தன் எழுதியது:**

| | | |
|---|---|---|
| மின்னல் | ... | 1 0 |

## ஸ்ரீமகள் கம்பெனி
## சென்னை—1

## சிறுவர்களுக்கான சிறந்த கதைப் புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| பச்சைப் பாவாடை | ... | 0 8 |
| பொம்மை வண்டி | ... | 0 8 |
| சேரநாட்டு வீரன் | ... | 0 8 |
| பாபு சர்க்கஸ் | ... | 0 8 |
| திருக்குறள் கதைகள் I | ... | 0 8 |
| திருக்குறள் கதைகள் II | ... | 0 8 |
| திருக்குறள் கதைகள் III | ... | 0 8 |
| திருக்குறள் கதைகள் IV | ... | 0 8 |
| வேடிக்கைக் கதைகள் I | ... | 0 8 |
| வேடிக்கைக் கதைகள் II | ... | 0 8 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1**


மிடையே இருக்கும்! இருந்தாலும் இதுவரை நான் உன்னைக் காதலிக்கின்றேன் என்று சொல்லமாட்டேன்! உன்னை என் இதயத்திலிருந்து விரட்ட உணர்ச்சிகள் மனத்தோடு போராடுகின்றன! அது முடியாது! அது மேலும் மேலும் வளர்கிறது. முடியாமல் நான் என் பெருமூச்சுக்களை அடக்கிக் கொள்கிறேன்! கடைசியாக ஒரு பதில்! ஒரு வேளை இது 'காதல்' இல்லை என நினைக்கிறேன். எப்படியிருந்தாலும் நம் சந்திப்பை என்றும் மறவேன்!

'என்ன இருந்தாலும் நாம் எப்பொழுதும் அமைதியைக் குலைக்காமல் கண்களோடு கண்கள் பேசினோம்! நம் நா எதை எதையோ பேசி அனுபவமில்லாத கதையைச் சொல்லியது. வஞ்சகத்தை நம் உதடுகள் மாற்றிவிடும். உஷ்! உஷ்!!.........அவை நம் இதயங்களின் கட்டளைகள்! ஆனால் ஆத்துமக் கண்களை இகழ்ச்சியினால் வெறுப்படையச் செய்கிறது! அதைப் போலவே நம் பார்வையும் மாறும்! நம் மகிழ்ச்சியெல்லாம் மறுபடியும் வெளி வரும்! எந்தச் சக்தியும் நம்மை தடுக்க இல்லை! அது நம்முடைய ஒரு விதச் சக்தி என்று சொல்! நான் உன்னைப்பற்றிச் சிந்திக்கின்றேன்! ஒரு வேளை நீயும் என்னைப் போல் அலைவாய்! இதை எனக்காக நான் சொல்கின்றேன்! நீ இரவிலும் பகலிலும் தோன்றுகிறாய்!

'எழுந்திரு—எழிலில் எழிந்திடு! நித்திரையில் உன் புன்னகை மறைகிறது! அந்தக் காட்சி அந்தச் சமயத்தில் சந்தோஷத்தையளிக்கிறது. அது அரோரா தேவதையின் கவர்ச்சியைத் தோற்கடிக்கிறது! இன்ப நித்திரையைக் கலைப்பதற்காக வேண்டி; அது முடிவில்லா, இருளுக்கு அழைக்கிறது. ஓ...அங்கே! எதிர்கால விதி துன்பமாய், இன்பமாய்க் காத்திருந்தாலும், காதலில் தோற்றாலும், புயலில் சிக்கினாலும் உன்

## அன்று—இன்று

'மிண்டோ சாகப்! சென்ற சந்திப்பின் போது நீங்கள் மதுபானத்தை அறவே விட்டொழித்த செய்தியினை அறிந்து பெரிதும் மகிழ்ந்தேன்—ஆனால் இன்று நீங்கள் மீண்டும் மது அருந்தியிருப்பதைக் கண்டு வருத்தம் மேலிடுகிறது!'

'ஆம், தோழரே! அன்று உங்களுக்கு மகிழ்ச்சி தோன்றிற்று. இன்று நான் மகிழ்ச்சி கொள்கிறேன். வித்தியாசம் சிறிது தான்! என்றார் சஆதத் கஸன் மிண்டோ உண்மையில் மகிழ்ச்சி பொங்க.

—நரேஷ் குமார் ஷாத்

நினைவை மட்டும் மறக்கமாட்டேன் ஐயோ!......மறுபடியும் சந்திக்கமாட்டோம்! நம் பழைய பார்வையைப் பரிமாறிக்கொள்ள முடியாதே! உன்னை விட்டுப் பிரிகிறேன்; இந்தப் பிரிவுக்காக என்னை ஜெபம் செய்யவிடு. அது அன்பின் பாதுகாப்பு! 'பிதாவே என் காதலியை யாதொரு துன்பமில்லாமல் பாதுகாத்துக்கொள்!' சமாதானமும் பரிசுத்தமும் அவளை விட்டுப் போகாது! ஆனால் இன்பம் அவள் இதயத்தை விட்டுப் போய்விட்டது.

அவ்வப்போது பைரன் எழுதிய சிறுசிறு கவிதைகளில் சில: ஏதன்ஸ் பெண்களே! நாம் பிரிகிறோம். ஏதன்ஸ் நகரப் பெண்களே! நாம் இங்கே பிரிகின்றோம்! என் இதயத்தை என்னிடம் கொடுத்துவிடுங்கள்! அது என்னிடமிருந்தது! அதைக் கொடுத்துவிட்டு மற்றதை எடுத்துக்கொள்ளுங்கள்! நான் போகும் முன் என் வார்த்தையைக் கேளுங்கள்!

'உங்களின் முடியாத கூந்தல் ஆப்கான் நாட்டுக் குளிர்காற்றினால் அலைந்து இடம் மாறி உங்களின் விழிகளின் மேல் விழுகிறது! உங்களின் வர்ண ஆடைகள் கன்னங்களை முத்தமிடுகின்றன. குளிர கண்கள் மானைப் போலிருக்கின்றன!

'அந்த உதட்டை நான் சுவைக்க விரும்புகின்றேன். இனிமையான வார்த்தைகள் பேசத் தவறினால் அதையெல்லாம் மலர்கள் சொல்லும், காதலின் மாற்றம் துன்பமும் இன்பமும்தான்!

'ஏதன்ஸ் நகரப் பெண்களே! நான் போய்விட்டேன்! உங்களை விட்டுப் பிரிந்துவிட்டேன்! இஸ்தாம்புல் நகரதிற்குச் சென்று விட்டாலும் நீங்கள் தனிமையில் இருக்கும் பொழுது இனிமையாக என்னை நினைவு படுத்திக்கொள்ளுங்கள்! ஏதன்ஸ்...என் உயிரையும் இதயத்தையும் பெற்றுவிட்டது! நான் உன்னைக் காதலிக்க முடியுமா? இல்லை! இல்லை!!'


# நடிக்கவும் படிக்கவு மேற்ற நாடகங்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| வாழ்க்கை வாழ்வதற்கே | ... | 0 | 12 |
| தூக்குமேடை | ... | 1 | 8 |
| நச்சுக் கோப்பை | ... | 0 | 12 |
| புரட்சிப்புலவன் அம்பிகாபதி | | 1 | 0 |
| ஜூலியஸ் ஸீஸர் | ... | 1 | 0 |

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை-1.


## தெய்வம் எதற்கு

காதலுக்கு ஒப்பானதுமில்லை; உயர்வானது மில்லை. அஃது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. அதற்கு மேற்பட்ட தொன்று இருத்தல் கூடாது. கடந்த ஒன்றைக் கடவுள் என்று சொல்வது மரபு. 'இதனால் காதற்கடவுள்' என்றோர் ஆட்சியும் பிறந்தது போதும், காதலனுக்குக் காதலியினுஞ் சிறந்த பொருள் வேறொன்றுமில்லை. இவளுக்கும் அப்படியே. அவனுக்கு இவள் கடவுள்; இவளுக்கு அவன் கடவுள். இவர்க்கு வேறு தெய்வம் எற்றுக்கு?

—திரு. வி. க.

"அழும் பெண்ணுக்கு" என்ற தலைப்பில்: 'அரசகுல மகளே நீ அழு! அது அரசனுக்கு இழுக்கு! ஒரு நாட்டுக்கே அழிவு! ஆ!...ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் தந்தையின் தவறைக் கழுவட்டும், மகிழ்ச்சி! அழு!—உன் கண்ணீர் பரிசுத்தமானது என்று. துன்பப்படும் நாடுகளுக்கெல்லாம் அது நல்லது! ஒவ்வொரு கண்ணீர் துளியும் வருங்கால மக்கள் சிரித்துச் சிரித்து உனக்கு அளிக்கட்டும்!'

காதலின் முதல் தோற்றத்தைப் பற்றிக் கேட்கப்படும் போது பைரன் இப்படிக் கூறுகிறான்.

'காதலின் பிறப்பு!...ஆ!......ஏன் அந்தக் கொடுமையான கேள்வியைக் கேட்டாய்? அநேக கண்களை நீ பார்த்திருக்கிறாயா? அது அங்கே பார்ப்பதிலேதான் வாழ்விற்குத் தோன்றுகிறது. அந்த முடிவையும் தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் இதயம் குமுறுகிறது; பயங்கரம் முன்னே தெரிகிறது! அது அமைதியான துன்பத்திலே அமிழ்ந்திருக்கிறது! ஆனால் வாழ்......நான் அதைப் பிடிக்கும் வரை!'—

பைரனின் மணநாளுக்காக அவன் எழுதிய சிறிய சிந்தனைக் குவியல்:

"இங்கே ஒரு மகிழ்ச்சிக்குரிய வருடம்! காரணத்தோடு உங்களைக் கேட்கின்றேன். நான் சொல்ல அனுமதி கொடுங்கள்! இக்காலத்தில் . நல்லவைகளுக்காக என்னை வாழ்த்துங்கள்! ஆனால் கொஞ்சமாகவே இருக்கட்டும், நீங்கள் இந்த நாளிலே இருப்பதைப் போல்!'

பிறந்த நாளைப்பற்றி கவிஞன் பைரன் எழுதியிருப்பது: 'வாழ்வின் சோர்ந்த பாதையிலே, இருண்ட தேய்ந்து போன பாதையிலே முப்பத்திமூன்று வருஷங்களை இழுத்திருக்கிறேன். எனக்காக இந்த வருடங்கள் என்ன வைத்திருக்கின்றன? முப்பத்து மூன்றைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை!

"அவள் அழகிலே நடக்கிறாள்.

"பெண்ணே! நான் குளுமையும் இருளும் பொருந்திய நாட்டிலே பிறந்திருந்தால் அங்கே சாகமாட்டேன்! இத்தாலிய நாட்டுப் பெருங் கவிஞனுக்காகக் கற்பனைக் கவிதையெழுதுகிறேன்! அது தென் பகுதியில் புகழ் கொள்ளும்! அதற்கு நீதான் காரணம்! அவனின் அமரத்துவப் பிணைப்பில் நான் சிறியவனாக இருந்தாலும் உன் இளகிய இதயம் என்னை மன்னிக்கும்! நீ அழகின் இளமையால் பேசுகிறாய்! பேசுவதைப் போல் கீழ்ப்படியவும் இருக்கிறாய்! ஆனால் அவை எல்லாம் குளு பொருந்திய தென் பகுதியில் தான்; அங்கேதான் உன் கவர்ச்சியெல்லாம், பேச்செல்லாம்! அது எவ்வளவு இனிமையான மொழி.........இனிமையான காவிவிருந்து! ஓ!...... எந்த முயற்சிதான் அதை அடையாமலிருக்க முடியும்!'

### கலைமன்ற சந்தா விபரம்

உள்நாடு

| | |
|---|---|
| வருடச் சந்தா | 12—0 |
| ஆறு மாதச் சந்தா | 6—0 |

வெளிநாடு

| | |
|---|---|
| வருடச் சந்தா | 13—0 |
| ஆறு மாதச் சந்தா | 6—8 |

# நீதி சிரித்தது

☆ ஏ. நாகப்பன் ☆

வேலை முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் என்னைத் தேடிக் கொண்டு யாரோ ஒரு பெண் வந்திருந்தாள் என்ற திடுக்கிடும் செய்தியைக் கூறினாள் என் மனைவி. "மிஸ்டர் ரகு இருக்கிறாரா?" என்று கேட்டாளாம் அந்தப் பெண். "வேலைக்குப் போயிருக்கிறார்," என்று கூறியவாறு என் மனைவி வீட்டிற்குள்ளிருந்து வெளியில் வருவதற்குள் அந்தப் பெண் வேகமாக நடந்து போய்விட்டாளாம்.

யார் அவள், எங்கிருந்து வந்தாள், அவள் பெயர் என்ன என்ற விவரங்களைத் தெரிவதற்காக மண்டை மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை எனக்கு ஏற்படவில்லை. என்னைத் தேடிக்கொண்டு ஒரு பெண் வந்தாள் என்றால் அவள் எனக்கு முன்பே அறிமுகமானவள் என்று தானே பொருள்? எனக்கு அறிமுகமானவர்களில், அதுவும் பெண்களில் ஒரே ஒருத்திதான் இருந்தாள்! அதனால் அந்தப் பெண் உயரமா? குட்டையா? நீலப் புடவை சுட்டியிருந்தாளா? சிவப்புப் புடவை கட்டியிருந்தாளா? என்ற விவரங்களைக் கேட்டு என் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

ஆனால் அந்தச் செய்தியானது என் உள்ளத்தில் பெரும் திகிலை ஏற்படுத்தி விட்டது. உடம்பின் ஒவ்வொரு அணுக்களிலும் பயம் கலந்து விட்டது. உள்ளத் துடிப்பின் ஓசையிலே கூட ஒரு மாறுதல். பயத்தின் பிரதிபலிப்பு. முகத்தில் வேர்வை கொப்பளித்தது. கைக் குட்டையால் அதைத் துடைத்தவாறு என் அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டேன்.

கையில் காப்பியுடன் உள்ளே நுழைந்த என் மனைவி, என் நிலையைப் புரிந்து கொண்டாளோ என்னவோ தெரியவில்லை. அவள் என்னையே பார்த்துக் கொண்டு நின்றாள். வழக்கத்துக்கு மாறாக முகத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதலும் மௌனமும் ஒரு குழப்பமான நிலையை அவளுக்கு ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

*** காதலிப்பது—காதலியின் வயிறு கனக்க ஆரம்பித்தவுடன் கம்பி நீட்டுவது**

*** இன்றைய இளைஞர்களின் கண்ணாம்பூச்சி விளையாட்டு. அத்தகையோருக்கு நல்ல படிப்பினை தருகிறாள் இக் கதையில் வரும் கதாநாயகி.**

அவள் கேட்டாள்— "அந்தப் பெண்யார்? உங்களுக்குத் தெரியுமா?"

"என்னைத் தேடி வருகிற அளவுக்கு எந்தப் பெண்ணிடமும் எனக்குப் பழக்கம் இல்லையே. யாராக இருக்கக் கூடும் என்றுதான் நானும் யோசிக்கிறேன்!"—ஒரு பச்சைப் பொய்யை மனமறிந்து கூறினேன்.

மறுநாள் வேலைக்குச் சென்றபோது ஆபீஸிலுள்ளவர்கள் ஆளுக்கொரு கேள்வியைக் கேட்டார்கள். "என்னடா பேய் அறைந்தவன் மாதிரி இருக்கறே?" என்றார் ஒருவர். "பெண்டாட்டி கோபப்பட்டிருப்பாள்," என்றார் பதிலுக்கு இன்னொருவர். "ஆமாம்! புதுத் தம்பதிகள்; இதெல்லாம் சகஜந்தானே!" என்று ஒத்தூதினர் இன்னொருவர். அவர்களின் வாயை அடைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

எனக்கென்னமோ வேலையே ஓடவில்லை. மத்தியானம் வரையில் எப்படியோ வேலை செய்துவிட்டு அரை நாள் லீவு போட்டுவிட்டு வெளியே வந்தேன். "ஊம்! ஊம்! எல்லாம் கொஞ்ச நாள் இப்படியெல்லா இருக்கும் பிரதர்! பாவம்! ஆபீஸில் வேலை ஓடவிலலை போலி



குக்கு. எப்படி ஓடும்? மாப்பிள்ளைக்கு வீட்டு ஞாபகம்! ஊம்! போ, போ!'' என்று கிண்டல் செய்தான் என் சக குமஸ்தா.

வீட்டையடைந்தபோது எந்தப் பெண் என்னைப் பார்க்க வந்து விட்டுப் போனதாக என் மனைவி கூறினளோ அவளே வீட்டிற்குள் உட்கார்ந்து கொண்டிருந்தாள். என் தலை சுற்றியது. வீட்டிற்குள் நுழைந்ததும் 'வணக்கம்' என்று கை கூப்பினுள். அவள் குரல் கம்மிப்போயிருந்தது. கண்கள் குளமாகி இருந்தன.

அவள் தொடர்ந்து கூறினுள்:—

"உங்கள் திருமணத்திற்கு எனக்கு அழைப்பிதழ் அனுப்பவில்லையென்ற போதிலுங்கூட எப்படியோ உங்களுக்குத் திருமணம் என்பதைத் தெரிந்து கொண்டேன். திருமணத்திற்கு வர முடியவில்லை. அதனுல் இப்போது நேரில் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். என் திருமணப் பரிசுதான் இது,'' என்றவாறு ஒரு சிறிய டிரங்க் பெட்டியை என்னிடம் கொடுத்தாள். பொத்தானை அழுத்தியதும் இயங்குகிற இயந்திரப் பொம்மையைப் போன்று நான் கைகளை நீட்டி அதை வாங்கினேன. அவள் மேற்கொண்டு அங்கே நிற்கவில்லை. விரைவாக நடந்து வெளியே போய் விட்டாள்.

யார் அவள்? உங்களுக்கு அவளைத் தெரியுமா? எங்கிருந்து வருகிருள் என்பன போன்ற ஓராயிரம் கேள்விகளை என் மனைவி என்னிடம் கேட்டாள். நான் ஒரு பதிலும் கூறுமல் டிரங்க் பெட்டியைத் திறந்தேன். அதற்குள் ஏதோ ஒரு பொருள் வெள்ளைத் துணியால் நன்கு சுற்றி மூடப்பட்டிருந்தது. அதன் மேல் ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது. விவரிக்கவொண்ணுத பலவித உணர்ச்சிகளால் என் இருதயம் வெடித்து விடுவது போன்றிருந்தது. நடுங்குகிற கைகளால் கடிதத்தைப் பிரித்தேன். கடிதம் இதுதான்......—

...வேலை மாற்றலாகி விட்டது எனக் கூறிப் பம்பாயிலிருந்து புறப்பட்டு இங்கே வந்தீர்கள். ஒரு வாரத்தில் என்னை வந்து அழைத்துப் போகிறேன்—பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறினீர்கள். ஆனுல் நீங்கள் சென்று ஒரு வருடமாகியும் எந்த விவரமும் தெரியவில்லை. சீர்திருத்தம் என்றுசிரித்துச் சிரித்துப் பேசி என் உள்ளத்தைக் கவர்ந்தீர்கள். நான் என்னையே உங்களிடம் ஒப்படைத்தேன்.உயர் சாதி, பணம்



விருக்குமிரான தாய்தந்தையர் இவர்களைக்கூட நான் உங்கள் பொருட்டு இழக்கச் சம்மதித்தேன். அதற்குப் பிரதியுபகாரமாகத்தானோ என்னவோ என் வயிற்றைக் கனக்க வைத்து விட்டீர்கள். நான் ஒரு நாள் வீட்டை விட்டே வெளியேறினேன். இங்கு வந்து நான்கு மாத காலமாக அலைந்தேன். மதராஸ் வீதிகளில் உங்களைத் தேடி அலைந்து திரிந்ததால் கையிலிருந்த கொஞ்சம் பணமும் கரைந்து விட்டது. பிறகு நகைகளை விற்று இரண்டொரு வாரம் காலந் தள்ளினேன். கடைசியாக உங்களுக்குத் திருமணமாகி விட்டது என்ற விவரத்தையும் உங்கள் இருப்பிடத்தையும் தெரிந்து கொண்டேன். நீங்கள் என்னை வஞ்சித்து விட்டீர்கள். பெண்களை ஏமாற்றித் தங்கள் மனம் போன போக்கில் நடக்கலாம் என்று எண்ணியிருக்கும் தங்களைப் போன்ற சதிகாரர்களைச் சும்மா விட்டு விடலாமா? வேறொரு பெண்ணாக இருந்திருந்தால் குளத்திலோ, குட்டையிலோ விழுந்து தன் உயிரைப் போககிக் கொண்டிருப்பாள்.

ஆனால் நான் அப்படிச் செய்யும் கோழையல்ல. நீங்கள் தந்த பரிசை உங்களுக்கே தந்திருக்கிறேன். குழந்தையின் கழுத்தை நெறித்துக் கொன்று பெட்டிக்குள் அடக்கம் செய்திருக்கிறேன். பார்த்து மகிழுங்கள். இத்துடன் உங்களை விட்டு விட்டேன் என்று எண்ணி விடாதீர்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் விரைந்து கொண்டிருக்கிறேன். இக் கடிதத்தைப் படித்து முடிக்கும்போது போலீஸ் வேன் உங்களை வரவேற்க வந்து விடும் என்று எண்ணுகிறேன். உங்களுடைய, என்னுடைய, பிற்கால வாழ்க்கையைப் பற்றி நான் யோசிக்கவில்லை. காரணம் யோசிக்க வேண்டிய அவசியம் இல்லாததுதான். என் வாழ்க்கையைப் போன்றே உங்கள் வாழ்க்கையும் நாசமாகி விட வேண்டும் என்பதுதான் என் ஆவல். அது நிறைவேறத்தான் போகிறது. வருகிறேன்......

மாலா.

கடிதத்தைப் படித்து முடிப்பதற்கும் போலீஸ் வேன் வீட்டின் முன் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. கைகளில் விலங்கு மாட்டப்பட்டது. என் மனைவி அவள் பிறந்தகம் சென்று விட்டாள். நான் ஜாமீனில் வெளியில் வந்தேன். என் பெயரில் கிராமத்தில் இருந்த கொஞ்ச நிலத்தையும் வீட்டையும் விற்று வக்கீல் வைத்து வாதாடினேன். உண்மைக்குத் திரை போட்டு மறைக்க என் சார்பில் வக்கீல் மிகத் திறமையாக வாதாடினார். நான்கு மாத காலம் வழக்கு நடந்தது. கடைசியாக நீதிபதி இவ்வாறு தன் தீர்ப்பைக் கூறினார்—"ரகுவைக் குற்றவாளியென நிரூபிக்கப் போதிய சாட்சிகளும் சான்றுகளும் இல்லாததால் ரகு நிரபராதி என்று கருத வேண்டியிருக்கிறது. எப்படியோ தவறான வழியில் பிறந்த குழந்தையை ரகுவுக்குப் பிறந்தது எனக் கூறுவது நியாயமற்ற செய்கை என்றே கருதுகிறேன். தவறான வழியில் நடந்து குழந்தையைப் பெற்றதுடன் அதைக் கொன்ற குற்றத்திற்காகச் சட்டப்படி மிகக் கடுமையான தண்டனையளிக்க வேண்டியிருப்பினுங்கூட குற்றவாளி ஒரு பெண் என்பதால் ஏழு வருடம் கடுங்காவல் தண்டனை அளிக்கிறேன். ரகுவை விடுதலை செய்ய உத்தரவிடுகிறேன்."

கோர்ட் கலைந்தது. நீதி சிரித்தது.

# கலைமன்றம்
## ☆பார்லிமெண்ட்☆

மாவடிக்கால்
கடையநல்லூர் அஞ்சல்
தென்காசி வட்டம்
8-6-55.

அறிவொளி குன்றாப் பெரியீர்,

'கலைமன்றம்' புதிய மெருகுடன் பவனி வருவது கண்டு அன்பு மழை பொழிகின்றேன். விரும்புபவர் சுவை மிகுந்த செந்தமிழ்த் தேன் அருந்தி வாழட்டும்; வெறுப்பவர் அறியாமை நிறைந்த பழமைப் படுகுழியில் வீழ்ந்து மாளட்டும். ஏனோதானோ என்றில்லாமல் மக்கள் முன்னேற்றத்தில் நாட்டங்கொண்டு புதுமைக் கருத்துடன் பகுத்தறிவுச் சுடர் பரப்பித் திராவிடந்தனில் இன்ப நடம் புரிந்து வரும்—தமிழ் மணம் கமழும் கலை 'மன்றம்' நீடு வாழ்க.

—எஸ். எம். நிறைமதி.

* *

அப்பிபட்டி,
சின்னமனூர் (வழி)
(மதுரை மாவட்டம்)

அன்புசால் ஆசிரியர்க்கு,

நலம். வேண்டுவதும் விழைவது மதுவே. தங்களின் 'கலைமன்றம்' தூற்றப்பட்ட பலரால் போற்றப்படும் அளவில் இப்போது வெளிவருவதைக் கண்டு உளம் பூரிக்கிறேன்.

—சு. பாண்டியன்.

* *

43, ஆண்டி செட்டித்தெரு
குகை, சேலம்.

அறிவு சான்ற நண்பர்க்கு,

'கலைமன்றம்' கண்டேன். தங்களின் நீண்ட நாள் எழுத்து நடையைக் கண்டதும் தங்களுடன் நேரில் பேசுவது போலவும், தங்களின் சொற்பொழிவைக் கேட்பது போலவும், எனது உள்ளத்தில் ஒருவித எண்ணம் உண்டாகிறது. கண்ணோட்டம், வெட்டும் ஒட்டும் என்ற பகுதிகளில் வரும் விஷயங்கள் நகைச் சுவையோடு நற்கருத்துக்களை ஊட்டுகின்றன. 'எரிமலை,' என்ற பகுதி பகுத்தறிவு மேடைகளுக்காகத் தரப்படும் நல்ல குறிப்புகள். 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் தரப்படும் பதில்கள் ஆணித்தரமாக உள்ளன. 'பாரதிதாசன் கவிதை அரங்கம்' மூலமாக நம் நாட்டில் இன்னும் பல பாரதிதாசன்களைத் தோற்றுவிக்கப் போகிறீர்கள். ஏன் என்ற பகுதியில் கேட்கப்படும் வினா—வாசகர்கள் வழங்கும் விடைகள் மிக நன்று. படித்தவர்க்கும்—படியாதவர்க்கும் மூளைக்கு நல்ல வேலை தரும் சிறந்த பகுதி என்பது எனது அபிப்பிராயம். ஆனால் ஒரு குறையை மட்டும் கூறாமல் இருக்க என்னால் முடியவில்லை. பிரசுரமாகும் ஓவியங்களில் தங்

களின் கவனம் போதாது. ஆதலின் இனி வரும் இதழ்களிலேனும் இக் குறையைத் தவிர்த்து வெளியிட வேண்டுகிறேன்.

—சி. பத்மநாபன்.

[இம்மூன்று வாழ்த்துரைகளுக்கும் எமது நன்றி. மென்மேலும் மெருகேற்றி 'கலைமன்றம்' இதழை வாரந்தோறும் வாசகர்கட்கு நல்விருந்தாகப் படைப்பதே எங்கள் தலையாய கடன். நண்பர் பத்மநாபன் பி. ஏ., அவர்கள் கூறியுள்ள அந்தக் குறையைத் தவிர்க்க நாம் நேரடியாகக் கவனம் செலுத்துகிறோம். கவர்ச்சிமிக்க ஓவியங்களே இடம் பெற்று எழுத்தோவியங்களை அழகுபடுத்தும்—ஆ—ர்.]

தென்மலை
**4-5-55.**

...'கலைமன்றம்' இதழில் திராவிடர் முற்போக்கு வார இதழ் என்ற வாக்கியம் எடுபட்டதின் நோக்கம் என்ன?

—தாமரைச்செல்வன்.

[கலைமன்றத்தின் எந்தவொரு பக்கத்திலேனும் நோக்கம் சிதைந்து விட்டதாகக் காட்ட முடியுமா? கொட்டை எழுத்தில் 'நோக்கத்தை' அச்சிட்டால்தான் கலைமன்றம் வாங்குபவர்களின் கண்களுக்கு நமது கருத்துத் தென்படும்என்று எண்ணவில்லை நாம்.

—ஆ-ர்.]

சென்னை
**3-6-55.**

ஐயா,

தாங்கள் எனக்கு மூன்றாம் பரிசாக அனுப்பிய விருதை-ந. இராமசாமி எழுதிய 'தாமஸ் மசாரிக்' கிடைக்கப் பெற்றேன். உங்களின் இந்தப் பரிசானது என்னை மேலும் எழுதத் தூண்டுகிறது. நான் முதன் முதல் பத்திரிகையில் ஏதாவது எழுத வேண்டுமென்ற எனது முதல் முயற்சியே களிப்பூட்டும் வண்ணம் ஒரு நூலைக் கொடுத்தது.

—இரா. வைத்தியலிங்கம்.

[இன்னும் பல பரிசுகளைப் பெற முயலுங்கள். ஆரம்ப எழுத்தாளர்களை ஊக்குவிப்பதுதான் எங்கள் முதற் குறிக்கோள். இதனை ஒவ்வொரு இதழிலும் நிலை நாட்டி வருகிறோம். 'கலைமன்றம்' மூலமாகச் சிறந்த எழுத்தாளர்களை உருவாக்கி நாட்டிற்கு அறிமுகமாக்கி வருகிறோம்—ஆ—ர்.]


# சிலந்திக் கூடு

**ஏ. வி. பி. ஆசைத்தம்பியின்**

அரிய கற்பனைக் களஞ்சியம்

சூழ்நிலையும் சந்தர்ப்பமும் மனித வாழ்வை ஓர் சிலந்திக் கூடாக மாறுவதைச் சித்தரிக்கும் சிறந்ததோர் கதை விருந்து! விறுவிறுப்பான தமிழ் நடை! படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் சொற் சித்திரம்.

**விலை ரூ. 1—0—0**

**கலைமன்றம் — சென்னை-1.**





# அழகு எரிந்தது

T.A. துரைராஜன்

## 5

### சுகுமார்:

டாக்டர் சுகுமார் எம். பி. பி. எஸ். என்ற போர்டை வாசலிலே, தொங்க விட்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை, அளவிட்டுக் கூற முடியாது.

என் வாழ்க்கையின் லட்சியம், பள்ளிக்கூட வாழ்விலே பக்குவமடையாத பிஞ்சு நெஞ்சிலே தோன்றிய லட்சியம் ஒரு நாளாவது ஸ்டெதாஸ்கோப்பைக் கையிலே சுழற்றிக் கொண்டு, கம்பீரமாக நோயாளிகளின் கட்டிலோரத்திலே போக வேண்டும் என்பதுதான்.

ஒருநாள் என் சொந்தக்காரர் ஒருவரைப் பார்க்க, அம்மாவுடன் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன். அங்கு நான் கண்ட காட்சி.

கட்டிக் கொண்டவள்கூட, கிட்டச் செல்லக் கூசும் அத்தனை ஆபாசமாக, அருவருக்கத்தக்க, அழுகிப்போன உடலைக்கதர் நூலைக் கையாளுவதைப் போல, முகத்திலே புன்னகையுடன் எவ்வளவு கவனமாகக் கவனிக்கிறார்கள் அந்த நர்ஸுகள். இரவிலே தனியறையிலே சந்திக்கப் போகும் இதய ராஜாவுடனே இன்று என்ன இன்பக் காவியம் பாடலாம் என்று ஒத்திகை பார்க்க வேண்டிய மனதில் எந்த நோயாளிக்கு என்ன எந்த மருந்தைக் கொடுக்கலாம் என்று உருப் போடுகிறார்கள், அந்தத் தியாகச் சின்னங்கள். என் மனத்திலே அவை எப்படியோ ஒரு ஆணித்தரமான தீர்மானத்தை உண்டாக்கி விட்டன.

மாம்பலத்தில் அமைதியான தெருவிலே அழகான பங்களா. அதிலே சின்னஞ் சிறிய டிஸ்பென்ஸிரி. துணைக்கு வயதான சித்தி. சிரித்துப் பேசி மகிழச் சிங்காரச்

சகோதரி கிரிஜா. இத்தனை வைபோகத்துடன் என் வாழ்க்கை ஆரம்பித்தது.

சித்தி எனது சொந்தச் சித்தியல்ல. என் அம்மாவின் உடன் பிறந்த சகோதரி. கணவனையிழந்த பிறகு மகள் கிரிஜாவுடன் என்னுடன்தான் இருக்கிருள். சித்திரம் உருவாகிக் கொண்டிருக்கும் போதே தூரிகை உடைந்தாற் போல் நான் படித்து, வாழ்க்கையின் வெற்றிப் படிகளிலே கால் எடுத்து வைக்கும் போதே என் பெற்றோர்கள் கொள்ளை நோய்க்குப் பலியானார்கள். சித்திதான் என்னைப் பெற்றெடுத்தவளை விடப் பெருமையோடு கவனித்துக் கொண்டாள்.

கிரிஜா ஒரு அபூர்வப் பிறவி. ஒரு விநாடி கூட அமைதியாக இருக்க மாட்டாள். சதா துரு துருவென எதையாவது செய்து கொண்டே இருப்பாள். விடிந்து பொழுது சாய்வதற்குள் தெருவில் உள்ள அத்தனை வீடுகளுக்கும் ஒரு முறையாவது விஜயம் செய்து விடுவாள்.

கிரிஜா ஒருநாள் ஒரு புதிய செய்தி கொண்டு வந்தாள். "அண்ணு இன்றைக்கு நம் தெருவிலே புதுசா வந்திருக்காங்களே அவுங்க வீட்டுக்குப் போயிருந்தேன்," என்று ஆரம்பித்தாள்.

"ஏன் உனக்குப் புதிய தோழி கிடைத்து விட்டாளா? சரி. ஆரம்பியேன் அவளுடைய சுய சரிதையை," என்றேன் கேலியாக.

"அவுங்களைப் பத்தி உனக்கென்ன அண்ணு அவ்வளவு அக்கரை," என்று சற்று மிடுக்காகவே கேட்டவள், பிறகு, அவளாகவே, "அம்மா, இரண்டு பொண்ணு ஆக மூன்று பேர் இருக்காங்க; பெரியவள் பெயர் ராணி. சின்னவள் குமுதா, ராணி எங்கேயோ சினிமாவிலே வேலை செய்கிருளாம். குமுதா சும்மா தானிருக்கா. அண்ணு, ராணி ரொம்ப நல்லவள். எங்கிட்டே சிரிச்சு நல்லாப் பேசினு? ஆனு சின்னவள் குமுதா ரொம்ப ராங்கிப் பிடிச்சவ. ரெண்டு பேரும் நல்ல அழகு," என்று முடித்தாள்.

ஒருநாள் மாலை ஐந்தரை மணி இருக்கும். கிரிஜா ஜவுளிக் கடைப் பொம்மை போல் என் அறைக்கு வந்து, "அண்ணு இன்றைக்கு அந்த ராணி நடிக்கிற என்னமோ மெயிலுங்கர நாடகம் பார்க்கலாம் வா," என்று கெஞ்சினுள் குழந்தையைப் போல. என்னதான் வயதானலும் தனக்கு மிகவும் பிடித்தவர்களிடம் குழந்தையைப் போல்தானே, வெகுளித்தனமாக நடந்து கொள்ளுகிருர்கள் பெண்கள். அதிலும் கிரிஜாவுக்கு அவளுடைய பருவம் கூடத் தடையுத்தரவு போட்டு வைக்கவில்லையே.

"சரிதான் நாடகத்துப் பெயர் கூடத் தெரியாமே நாடகம் பார்க்கக் கிளம்பிட்டியா?" என்றேன் கேலியாக.

"நல்லாப் படிச்சவங்க கூட, இங்கிலீஷ் படப் பெயர் தெரிந்தா பார்க்கப் போருங்க. எவ்வளவு அலட்சியமாக, ஓடியனுக்குப் போறேன், குளோப்புக்குப் போறேன்னு சொல்லி மழுப்புராங்க. நீ, என்னைப் போய்க் கேலி செய்யரையே அண்ணு," என்ருள்.

கிரிஜாவுடன் எதிர் வார்த்தையாடுவது அவ்வளவு சுலபமான காரியமா?

நாடகம் சாதாரணந்தான்.

ஆனால் ராணி அதைப் பிரமாதமாக ஆக்கி விட்டாள். கற்பனைக்கும் கருத்துக்கும் பொருந்தாத கதை கூட வார்த்தை ஜாலம் செய்பவனின் கையிலே கிடைத்து விட்டால் ஒரு தனி அழகு பெற்றுவிடத்தானே செய்கிறது. அப்படித்தான் அழகுபடுத்தி விட்டாள் நாடகத்தை ராணி. அவளுடைய நடிப்பை விட அவளுடைய பேசும் விழிகளின் நடிப்புத்தான் சபையை அதிகம் கவர்ந்தது—நாடகத்தின் காதல் கட்டத்தில் சற்றுக் கட்டு மீறித்தான் நடித்தாள் என்றாலும் பார்த்தவர் அத்தனை பேர் உணர்ச்சியையும் ஒரு ஆட்டு ஆட்டி விட்டாள்.

நாடகம் பார்க்கிறோம் என்பதை மறந்து விட்டேன். எனக்குப் பக்கத்தில் கிரிஜா இருக்கிறாள் என்பதுகூட எனக்கு நினைவில்லை. மெய் மறந்து ஒவ்வொரு காட்சியிலும் ராணி தோன்ற மாட்டாளா என்று எதிர் பார்க்க ஆரம்பித்து விட்டேன்.

"யார் இந்தப் பொண்ணு," என்று உணர்ச்சி வசத்திலே உளறி விட்டார் ஒருவர். திரும்பிப் பார்த்தேன், பட உலகிலே பிரபல்யமுள்ள ஒரு டைரக்டர். தலை நரைத்தவர்தான். என்றாலும் ஆசை நரைக்கவில்லையே.

நாடகம் முடிந்தது. கிரிஜாவுடன் ஸ்டேஜுக்குச் சென்றேன். "இது


## ஆசைத்தம்பியின்

# அரிய நூல்கள்

| | | ரூ | அ |
|---|---|---|---|
| கசந்த கரும்பு | ... | 1 | 8 |
| தனி அரசு ஏன்? | ... | 1 | 0 |
| முள் | ... | 1 | 0 |
| சிலந்திக்கூடு | ... | 1 | 0 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | ... | 0 | 12 |
| இருண்ட வாழ்வு | ... | 0 | 12 |
| கொலைகாரி | ... | 0 | 12 |
| அவள் வாழ்வு | ... | 0 | 8 |
| மனைவி | ... | 0 | 12 |

விபரங்களுக்கு:

**ஸ்ரீமகள் கம்பெனி**

122, வரதாமுத்தியப்பன் தெரு

**சென்னை—1**

தான் ராணி, அண்ணா," என்று அறிமுகப்படுத்தினாள் கிரிஜா.


கை குவித்தாள் ராணி. பதிலுக்கு என் கரங்கள் குவிந்தன. ராணியைப் பார்த்ததும் எனக்கு நன்றாகச் செழிப்பாக வளர்ந்த வாழைமரத்தின் நினைவுதான் வந்தது. நல்ல வாட்ட சாட்டமான கட்டுடல். அதே சமயம் "புறப்பட வேண்டாமா ராணி," என்று கேட்டுக் கொண்டு ஒரு பெண் எங்கள் அருகே வந்தாள்.

"இவள்தான் அண்ணா குமுதா. ராணியோட தங்கச்சி," என்றாள் கிரிஜா.

கடாவ், வாயில் சேலை விளம்பரத்திலே போடுவார்களே ஒரு கொடிபோன்ற கோமளவல்லியை. அந்த நினைவைத்தான், குமுதாவின் தோற்றம் என் மனதிலே உண்டாக்கியது.

"சீக்கிரம் மேக்கப்பைக் கலைச்சிட்டு வா, எல்லோரும் சேர்ந்தே போயிடலாம்," என்றாள் கிரிஜா.

காரிலே வரும்போது ஒருவருமே அதிகமாகப் பேசவில்லை. ராணியின் வீட்டருகிலேயே காரை நிறுத்தினேன்.



"ரொம்ப தாங்ஸ்," என்று ஏக காலத்தில் பேட் பாடினார்கள் சகோதரிகள். பதிலுக்குச் சிரித்துக் கொண்டே காரைச் செலுத்தினேன். "இங்கிலீஷ்லே என்ன தாங்ஸ் வேண்டியிருக்கு," என்றேன் கேலியுடன்.

"கான்வெண்டிலே படிச்சவ ராணி," என்று வக்காலத்து வாங்கினாள் கிரிஜா.

* *

மார்கழி மாதப் பனியிலே, சில்லிட்டுப் போன படுக்கையிலே சாய்ந்தேன். தலையணைகளுக்கு மட்டும் வாயிருந்தால் அவைகள் சொல்லும் கணக்கற்ற சோகக் காவியங்கள். எண்ணற்ற இன்பக் காவியங்கள் உணர்ச்சி வசத்திலே உள்ளத்திலே அலை மோதும் உல்லாச எண்ணங்கள்! இதயக் குமுறல்களை உளறிக் கொட்டுவது படுக்கையில்தானே. ஆத்திரமும், அழுகையும் அளவுக்கு மீறிக்குமுறி வரும் சமயம் அடைக்கலம் புகுவதும் படுக்கையில் தானே.

பனியில் சில்லிட்டுப் போன பஞ்சுத் தலையணையில் கன்னம் படும்போது, மனதிலே ஒரு தனி இன்ப உணர்ச்சி ஏற்பட்டது. பஞ்சுத் தலையணைக்குப் பதில் ராணியின் பட்டுக் கன்னங்கள் இருந்திருந்தால்......

சினிமாக்காரியைப் பற்றியா சிந்தனை செய்கிறாய். எடுப்புச் சாப்பாட்டைப் பற்றியா எண்ண ஆரம்பித்துவிட்டாய்! என்று என் உள்ளே ஏதோ ஒன்று கேள்வி போட ஆரம்பித்தது.

எனக்குச் சினிமா உலகில் சிறந்த பழக்கம் உண்டு. அந்த உலகத்திலே, வாழ்க்கை நடத்தும் கலையரசிகளின் வாழ்வைப் பற்றியும் ஓரளவுக்கு நேரிடையாக அறிந்து கொண்டவன்.

எனக்குப் பெண்ணின் பிரேமையை விலை கொடுத்து வாங்கும் புண்ணியவாளர்கள்கூடச் சரக்கைக் கண்ணோட்டம் செலுத்தித்தானே பேரம் பேசுகிறார்கள். அந்தச் சீமான்கள் விரும்புவது பெண்ணை—தாயை அல்ல, டாக்டர் சார்," என்று கதறினாள்.

என்னால் அந்தக் காட்சியைப் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அந்த அபாக்கியவாதியின் கண்ணீர் கருத்தையழித்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு இஞ்செக்ஷன் போட்டேன்.

மொட்ட விழாத தென்னம் பாளையைச் சீவித்தானே பதனீர் இறக்குகிறார்கள்.

ஒருநாள் காலை பத்து மணியிருக்கும். நோயாளிகளின் சந்தடி ஓய்ந்து விட்டது. என் அறையிலே உட்கார்ந்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தேன். கிரிஜா, ராணியை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். கொதிக்கும் வெந்நீரில் போட்டு எடுத்த ரோஜா மலர் போல் பொலிவிழந்து நின்றாள் ராணி.

"அண்ணா ராணிக்கு ஜுரமடிக்கிறதாம்," என்றாள் கிரிஜா.

மேஜையின் மீது கிடந்த ஸ்டெதாஸ்கோப்பை எடுத்துக் கொண்டு அவளருகே சென்றேன். அதற்குள் உள்ளே இருந்து சித்தி கிரிஜாவைக் கூப்பிட்டாள். கிரிஜா ஓடினாள். ராணி தனியாக நின்றாள்.

அவளுடைய கையைச் சுதந்திரமாகத் தாங்கி இஞ்சக்ஷன் போடும் போது என்னையே நான் மறந்து

விட்டேன். குளோரபாரம் எனக்கே நான் கொடுத்துக் கொண்டதுபோல் ஒரு தனி மயக்க நிலையிலிருந்தேன். என் உடல் முழுதும் வியர்த்து விட்டது. என் அங்கங்கள் அத்தனையும் ஏதோ ஒரு விசித்திரமான வியாதி வந்து வெடவெடவென நடுங்கின. எத்தனையோ பெண்களைத் தொட்டு வைத்தியம் செய்திருக்கிறேன். அப்போது எல்லாம் தோன்றாத இந்தப் புதிய உணர்ச்சி, ராணியைத் தொடும்போது மட்டும் எப்படித் தோன்றியது! எனக்கே புரியவில்லை, எனது இந்த அனுபவம். அந்தப் புதிய அனுபவத்திடையேயும் அந்த அழகியின் அழகு முகத்தின் மேல் பதித்த கண்களை மட்டும் எடுக்க மறந்து விட்டேன். எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த ராணி திடீரென நிமிர்ந்து என்னை நோக்கினாள். தன்னையே வெறித்துப் பார்க்கும் என்னைக் கண்டதும் அவளையும் மீறி எழுந்த வெட்கத்தால் தலை குனிந்தாள். அவள் குனிந்தாளே தவிர அவளது விழிகள் தாழ்ந்து விடவில்லை. ஒய்யாரமாகப் பார்த்துக் கொண்டே இருந்தாள். வள்ளுவன் குறள் அங்கே அரங்கேறியது.

"மருந்து கொடுத்தாச்சா அண்ணா," என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தாள் கிரிஜா. அப்போதுதான் தெரிந்தது நான் இன்னமும் ராணியின் கையை விடவில்லை என்று.

"ஓ, கொடுத்தாச்சே," என்று சமாளித்துக் கொண்டேன். ராணி என்னவோ ஒரு கள்ளச் சிரிப்புச் சிரித்தாள். சிநேகிதிகள் புறப்பட்டார்கள். புறப்படும்போது ராணி ஓட்டிச் சென்ற அந்தக் கண்ணோட்டத்தின் பொருளை விளங்க வைக்க வள்ளுவன் இன்னும் ஒரு காமத்துப்பால் பாடத்தான் வேண்டும்.

அவள் நோய்க்கு மருந்திட்டேன் நான். அவளோ எனக்குப் புதிய நோயைத் தந்து விட்டுச் சென்று விட்டாள். என் நோயைத் தீர்க்கும் டாக்டர்?-ராணியேதான் வர வேண்டும். வேறு எவராலும் என் வியாதியைப் புரிந்துகொள்ளக் கூட முடியாதே.

ராணி அடிக்கடி என் வீட்டிற்கு விஜயம் செய்ய ஆரம்பித்தாள். சில சமயம் குமுதாவும் உடன் வருவாள். ஆனால் குமுதா ராணியைப் போல் அவ்வளவு சுமுகமாகப் பழக மாட்டாள்.

உடலிலுள்ள குறைபாடுகளைத் தெரிந்துகொள்ள எக்ஸ்ரே கண்டுபிடித்த அறிவாளி உள்ளத்திலே உதித்தெழும் உணர்ச்சி அலைகளைப் படம் பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அப்படி ஒரு கருவியிருந்தால், பிறகு உதட்டிலே அமிர்தமும் உள்ளத்திலே நஞ்சும் கொண்டு உலவும் ஊதாரிகளின் உண்மை ஸ்வரூபம் வெளிப்பட்டு விடுமே!

ராணியின் உள்ளத்திலே என்ன உணர்வு தோன்றியிருக்கும்? சுழல் விளக்கை போல் சுழலும் அந்த விழிகளின் அர்த்தம் என்ன? என்று பல கேள்விகள் ஒரு கோணத்தில் எழுந்தன.

என் முயற்சி வீண் போகவில்லை. ராணியே என் கேள்விக்குச் சாதகமான பதிலைக் கொடுத்து விட்டாள்.

என் அறைக் கதவு அருகே நின்று கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். என்னையும் கடைக்கண்ணால் பார்க்கத்தான் செய்தாள். ஏதோ ஒரு துண்டுக் காகிதத்தைக் கையிலெடுத்து வைத்துக் கொண்டு தயங்கி நின்றாள்.

ஒரு அளவை மீறி விட்டால் நம்மையும் மீறி ஒரு துணிச்சல் ஏற்படத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட துணிச்சலில்தான் நான் அவளருகே சென்றேன்.

கையிலே இருந்த காகிதத் துண்டை நீண்டினாள் ராணி சிரித்துக் கொண்டே. பிரித்தேன் அதிலே:—

“கண்டு கேட்டு உண்டுயிர்த்து
உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.”

என்ற குறள் முத்துப்போன்ற எழுத்துக்களிலே மின்னியது.

அவளுடைய செய்கை எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

“இந்தக் குறளுக்கு அர்த்தம்,” என்று கேட்டாள் அந்தத் துணிச்சல்காரி.

இன்னமும் புரிந்து கொள்ளாததற்கு நான் என்ன ரிஷ்யசிருங்கரா?

“நடிப்பிலே விளங்க வைக்கிறேனே,” என்று சொல்லிக்கொண்டே அவளை என்னருகே இழுத்தேன். மலரைப் பறிக்கும்போது மலர் செடியே, துவண்டு கையிலே வருவதுபோல் துவண்டாள் அந்தத் துடியிடை.

காரின் ஹாரன் சப்தம் எங்கள் மோகன நிலையைக் கலைத்தது. திடுக்கிட்டு விலகினோம்; எதிரே இருந்த ஜன்னலிலே காரை விட்டு கிரிஜா இறங்கிக் கேட்டைத் திறப்பது தெரிந்தது.

“ஒத்திகையை ஒத்தி வைப்போம்,” என்று மெல்லிய குரலிலே சொல்லிச் சிரித்தாள் ராணி!

இன்னமும் அங்கேயே நிற்க எனக்கு அத்தனை துணிச்சல் ஏற்படவில்லையே! என் அறைக்குக் கிரிஜா உள்ளே வருமுன் போய் விட்டேன்.

எனக்கும் ராணிக்கும் தொடர்பு ஏற்பட்டு விட்டது. ஆனால் மனம் விட்டுப் பேசும் சந்தர்ப்பம் மட்டும் எங்களுக்குக் கிடைக்கவேயில்லை. நான் கிரிஜாவின் கண்களிலே மண்ணைத் தூவி விட்டு அவளைச் சந்திக்க வேண்டும். சதா கூடவே சுற்றும் குமுதாவை விட்டுத் தனியாக வரவே முடியாத நிலை. துடித்துக் கொண்டிருந்தோம் அந்தத் தனிமைக்காக ஏங்கி.

குமுதா ஓர் அபூர்வப் பிறவி! ராணியின் சகோதரி என்பதற்குச் சற்றும் பொருத்தமில்லாதவள். கலகலப்பாகப் பேசிப் பழகும் ராணியுடன் பிறந்தும் எப்படித்தான் அவளுக்கென்று வாய்த்ததோ அந்த விசித்திரமான மௌனம்.

—வளரும்.

**“கலை மன்றம்” வாரந்தோறும் சுதேசமித்திரன், ஹிக்கின்பாதம்ஸ் ரயில்வே ஸ்டால்களிலும் கிடைக்கும்.**

**—மானேஜர்**

# கலை

"பூங்குயில்"

## 1

கலை—போற்றப் படுகின்றது;
கலை—வேண்டப் படுகின்றது;
கலை—தூண்டப் படுகின்றது;
கலை—கலைஞனின் ஆத்ம ரூபம்!

மலர்கள் தோன்றிக் கொண்டே மணம் பரப்புகின்றன; வண்டினங்கள் ரீங்கார மிட்டு, மதுவினைப் பருகிப் பரவச மடைகின்றன; ஆம்; கலைகளும் இது போலவே தான்!

உண்மை நிரம்பிய அனுபவத்
திலே
வண்மை செறிந்த கலை மலரும்
போது
மனித இனம் சுவைத்துச்
சுவைத்து
இன்பம் துய்க்கின்றது;
உய்கின்றது!

## 2

கலை—சில சமயம் கலைஞனை
நடத்தும்;
கலைஞன்—கலைதனை நடத்து
வான் சில நேரம்!
ஆகாய மார்க்கமாய் அந்த
ரத்தில்
அவன் மனம் அலை பாயும்.

கலைகளின் பெருமை! அப்பப்பா... எண்ணத் தொலையாது; ஏட்டினிலே கொள்ளாது.

நடனக் கலை—கடலைவிட விரிவு;
சிற்பக் கலை—அற்புத விருந்து;
ஓவியக் கலை—நேர்முகமாய்ப்
பேசும்;
விஞ்ஞானக் கலை—வளர்ச்சி
பெற்றது;
பேச்சுக் கலை—பெருமை
கொண்டது;
எழுத்துக் கலை—இணையற்றது!

## 3

பிறந்த பொன்னாட்டைப்
புனிதப் படுத்தி,
இயற்கை யொலியை இதய
நிலையாய்,
ஏற்ற தமிழே ஒரு கலை;
ஆமாம்
தமிழரின் வாழ்க்கையே
தனிக் கலை!

ஆகவே,

பண்பாடடைந்த கலைஞரின் புனித உள்ளத்திற்கு; பொன் போன்ற செயல்களுக்கு வணக்கம் செய்து; கலை விளக்கின் உண்மையொளி—சாசுவதமாய்க் கனிந்த ஒளி—அவனிதனில் அணைந்து போகாமல் அன்பு கொண்டு காப்போமாக!

## உதை விழும்

கவிஞர் ஜிகர் முராதாபாதியின் ஒரு கவிதையைப் புகழ்ந்து விமர்சனம் செய்கையில், ஒரு இளைஞன் கூறினான்: 'புலவரே! நான் அந்தக் கவிதையின்......அடியை, பெண்களின் கூட்டமொன்றில் வாசித்தும், உதை வாங்காமல் தப்பிவிட்டேன்'

'அதில் ஏதோ தவறு இருக்க வேண்டும். இல்லை யென்றால் உங்களுக்கு கண்டிப்பாக உதைகள் விழுந்திருக்க வேண்டும்' என்று புன்சிரித்த வாறு கூறினார் ஜிகர்.

—நரேஷ் குமார் ஷாத்

# திரை உலகம்

## ராஜா ராணி

நேஷனல் புரொடக்ஷன்ஸார் அதி மும்முரமாக, 'ராஜா ராணி'யைத் தயாரித்து வருகின்றனர். இந்தக் கதை ஒரு நாடகக் குழுவைப் பின்னணியாகக் கொண்டது. இப்படத்திற்கே மகுடம் வைத்தாற்போல் அமைந்திருப்பது, "கல்சுமந்த கசடன்," என்னும் சேரன் செங்குட்டுவன் நாடகமாகும். இந் நாடகத்தின் மூலம் சிவாஜி கணேசன் நம்மை வெகுவாகக் கவர்ந்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. படத்தில், பத்மினி, ராஜேந்திரன், வி. கே. ராமசாமி, எம். என். கிருஷ்ணன் ஆகியோர் நடிக்கினறனர்.

## படித்த பெண்

ராஜ சுலோசனா, ஆர். லலிதா, பி. சரஸ்வதி, நம்பியார், கண்ணப்பா ஆகியோர் நடிக்கும் நளினி & சியாமளா கூட்டுத் தயாரிப்பான "படித்த பெண்" முக்கால் வாசிக்குமேல் வளர்ந்து விட்டாளாம். வி. கே. ராமசாமி, சாயிராம் ஆகியோர் சம்பந்தப்பட்ட காட்சிகள் சுடப்பட்டு வருகின்றன! ஏ. எஸ். முத்து பி. ஏ. கதை, வசனமெழுதும் இந்தப் படத்தைத் திருவேங்கடம் டைரக்ட் செய்கிறார்.

## மூன்று பெண்கள்

ஜெயஸ்ரீ லெட்சுமி பிக்சர்ஸார், சிட்டாடல் ஸ்டூடியோவில் தயாரித்து வரும் படத்தின் பெயரே, மூன்று பெண்கள். படத்தில் மனோகர், பாலையா, சிவதாணு, பிரண்ட் ராமசாமி, பி. கே. சரஸ்வதி, கிரிஜா, ஸி. ஆர். ராஜகுமாரி ஆகியோர் நடிக்கின்றனர். ஆர். பிரகாஷ் படத்தை டைரக்ட் செய்கிறார்.

## ஜெமினியில் பெர்ல். எஸ். பக்!

உலகப் பெரும் நாவலாசிரியையான பெர்ல், எஸ். பக்கின் சிறந்த நாவல் 'குட் எர்த்'தை முன்பு ஜெமினியார் தமிழில் எடுக்க விருப்பதாகக் கேள்விப்பட்டோம். ஆனால் இப்போது அதே படத்தை ஹிந்தியில் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். படத்தின் பிரதான பாகத்தில், கிருபாராய் நடிப்பார். இப்படம் அக்டோபர் மாதம் துவங்கப்படலாம்,

## ரங்கோன் ராதா

அண்ணாதுரை எழுதிய ரங்கோன் ராதாவை மேகலா பிக்சர்ஸார் தயாரிக்கின்றனர். வசனத்தை மு. கருணாநிதி எழுதி இருக்கிறார். படத்தில், சிவா[ji] கணேசன், பானுமதி முதலியோ[r] நடிக்கின்றனர். காசிலிங்[கம்] டைரக்ட் செய்கிறார்.



மாடன் தியேட்டர்ஸாரின் (கேவாகலர்) அலிபாபவில் பானுமதி

## கோகிலவாணி

பார்வார்ட் பிக்சர்ஸார் தயாரிக்கும் கோகிலவாணி, கோவை ஸென்ட்ரல் ஸ்டுடியோவில் உருவாகி வருகிறது. இப் படத்திற்கான வசனத்தை எஸ். டி. சுந்தரம் எழுதியிருக்கிறார். சங்கீதம் ராமநாதன். டைரக்ஷன் எஸ். ஏ. நடராஜன்.

## எஸ்டேட் கூலி

செந்தில் ஆர்ட் புரொடக்ஷன் ஸாரின், ‘எஸ்டேட் கூலி,’ [illegible]ஹினி ஸ்டுடியோவில் துவங்கப் [illegible]டது. துவக்கி வைத்தவர் நாகி[illegible]ட்டி அவர்கள். நடிகர்கள் பட்டி[illegible] இன்னும் தெளிவாக வெளி[illegible]மலிருக்கிறது.

## புரொடக்ஷன் நெ—1

திரு. ஆர். ஆர் சந்திரனின் ஸ்ரீ கல்பனா பிக்சர்ஸ் முதல் தயாரிப்பாக “புரொடக்ஷன் நெ—1” என்று தற்காலிகப் பெயரிட்டுள்ள படத்தை தயாரிக்கத் திட்டமிட்டு, ஆக்க வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது! கவிஞர் கண்ணதாசன் கதை-வசனம் எழுதும், இந்தப் படத்தை அப்பாராவ், நாராயணன் டைரக்ட் செய்வார்கள். இதன் உரிமையாளர் ஆர். ஆர். சந்திரன் “கேமரா”வைக் கையாளுவார். நடிகர் தேர்வு முடிந்து ஜூலை 10-ம் தேதி வாஹினியில் வளர ஆரம்பிக்கும்!

# கேளுங்கள் கொடுக்கப்படும்

கே: வேறு மதத்தைச் சேர்ந்த என் காதலியும், நானும் இணையப் பெற்றோர் பெருந் தடையாய் இருக்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது?

கே. சாமி,
சிதம்பரம்.

ப: காதல் கொண்டார்க்குக் கட்டுக்காவேது? காவல்தான் ஏது?

* *

கே: மனித முன்னேற்றத்திற்கு அவசியமானது அறிவா? அரசியலா?

வேலன்,
பாலகாட்.

ப: அறிவின் கீழ்த்தரமான கண்டு பிடிப்புகளில் அரசியல் ஒன்று.

* *

கே: சீழ்க்கையின் சிறப்பு யாது?

ம. சுந்தரம்,
மேட்டுப்பாளையம்.

ப: மனிதன் முதன் முதலில் கண்டுபிடித்த இசையொலி அதுவாகத்தான் இருக்கமுடியும்.

கே: மனிதன் சிரிக்கிறான், அழுகிறான். அது போல மற்ற உயிருள்ளவையும் செய்கின்றனவா?

ப: மனிதன் சிரிப்பதாகவும், அழுவதாகவும் சொல்கிறான். எல்லா உணர்ச்சிகளுமுள்ள மற்றவைகள் அதைச் சொல்லுவதே இல்லை!

* *

கே: பெரியவர்கள் யார்?

ப. நடராசன்,
எழூர்.

ப: நீரும், நானும்!

கே: நிலவிற்கும் சூரியனுக்கும் ஒற்றுமை உண்டா?

சி. மு. திராவிடச்செல்வன்
பென்னகர்.

ப: ஆம், அவையிரண்டும் கோளங்கள்.

கே: சோறு? மானமா?

ப: பசிக்குச் சோறு; பண்புக்கு மானம்.

* *

கே: தமிழ் நாட்டின் தலைசிறந்த பேரறிஞன் யார்? கவிஞன் யார்?

ப: காலையில் சூரியனை ஓட்டி, மாலையில் அவனை மேற்கே புதைப்பதாக நினைத்து முடிவு காணாதவன்; உலகாகிய புத்தகத்தில் தன் உழைப்பைக் காவியமாக்குபவன.

* *

கே: தாங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

கே. எம். எஸ். ஹமீது,
கொழும்பு.

ப: என் எழுத்துக்கள் அதை உமக்குக் கூறவில்லையா? விந்தை!

* *

கே: மனிதனின் கற்பனைக்கு ஒரு சிறந்த உதாரணம்?

கே. இராமசாமி,
திருவல்லிக்கேணி.

ப: காதல்!

* *

கே: நான் காதலைப் பனைமரம் என்கிறேன்.

எஸ். எஸ். மணி,
கோவை.

ப: இதைவிட உயர்ந்த ஒரு மரம் கிடைக்கவில்லையா?

# காமிரு வைத்திருப்போர் கவனிக்க

அழகான இயற்கைத் தோற்றங்களை — மனதை மகிழ்விக்கும் காட்சிகளை — நீங்கள் புகைப்படங்களாக எடுத்து வைத்திருப்பின் உடனே எங்கட்கு அனுப்புக.

**ஒவ்வொரு படமும் 'புல் சைஸ்' அளவில் இருக்க வேண்டும்.**

| | | |
|---|---|---|
| முதல் தரமான புகைப்படத்திற்குப் பரிசு | ரூ. | 10— |
| இரண்டாம் பரிசு | ரூ. | 5— |

புகைப்படக் கலைப்பகுதி,

**கலைமன்றம் — சென்னை-1**

---

## புகைப்படக் கலைப்பகுதி
## நுழைவுச் சீட்டு

பெயர் .............................................................

முகவரி: .............................................................

.............................................................


காமிருவின்பெயர்: .............................................................

இணைத்துள்ள படங்களின் எண்ணிக்கை } .............................................................

.............................................

நாள்: ..................1955 கையெழுத்து

Edited, Printed and Published by S. Francis at his Srimagal Press,



மரணக் கிடங்கிலும் மாவீரனின் மறப்போர்

பிரசுரம் நகைச் சுவைத்தென்றல் ஏ. கருணாநிதி

# புதிய வெளியீடு

★

## உணர்ச்சி ததும்பும் உயர்ந்த காவியம்!

உலகம் அனைத்து முத்தமிட்ட ஓரே கவிஞர்
வில்லியம் ஷேக்ஸ்பியர்.

அக்கவிஞரின் படைப்புகளுள் ஒன்றுதான்

# ஹாம்லெட்

[illegible] வியத்தின் மூலம்,

சிறிதும் சிதைவுருவண்ணம்,

தித்திக்கும் தமிழில் தருகிறார்

**கோவி. மணிசேகரன்.**

அழகிய மூவர்ண முகப்பு

**விலை 2 ரூபாய்**

**ஸ்ரீமகள் கம்பெனி**

122, வரதாமுத்தியப்பன் தெரு,
சென்னை—1.